
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
11/00
ஆக.03-09,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 216



# இந்திய எச்சரிக்கை
# கடல் அபாயம்
## யாழ் மோதல்கள்



## முதல் முழக்கம்

## கரை கண்ட காதல் மன்னன்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## நன்றி மறவாமை வேண்டும்!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தமிழக மீனவர்கள்
இலங்கைக் கடற்படையினரால்
தாக்கப்படுவதாக
அக்கரையிலே
எதிர்ப்பலை வீசிக்கொண்டிருக்கிறது!

இங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்கும்
ஒரு கடமை இருக்கிறது.
அக் கடமையை அவர்கள்
நினைத்துப் பார்ப்பதாகத்
தெரியவில்லை!

தமிழக மீனவர்கள்மீதான
தாக்குதல்களை
கண்டுகொள்ளாதது போல் இருப்பது
நன்றி மறந்த செயலாகிவிடும்.

இன்று ஆயுதப் போராட்டத்தை
கைவிட்டுள்ளபோதும்
அன்றொரு காலத்தில்
தமிழ்க் கட்சிகளின்
உறுப்பினர்கள் பலர்
கடல் கடந்து தப்பிச் செல்ல
கைகொடுத்தவர்கள்
தமிழக மீனவர்கள்!

இங்கிருந்து
அக்கரை நோக்கி
அபயம் தேடிச் சென்ற
ஆயிரக்கணக்கான அகதிகளையும்
தம் படகுகளில் ஏற்றிச்சென்றவர்கள்
தமிழக மீனவர்கள்தான்!

அது மட்டுமல்ல,
இலங்கைத் தமிழ் மக்களுக்காக
தமிழகம் குரல் கொடுக்கவேண்டும்
என்று எப்போதுமே
எதிர்பார்த்து வருபவர் நாம்!

நமக்காக மட்டுமே
உதவிகளை நாடுகிறவர்களாகவும்
நமக்கு உதவுகிறவர்களுக்கு
ஒரு கஷ்டம் வந்தால்
ஏறெடுத்தும் பார்க்காதவர்களாகவும்
இருப்பது என்ன நியாயம்?

இங்குள்ள ஒரு
தமிழ்க் கட்சியாவது
தமிழக மீனவர்கள் பிரச்சனை
தொடர்பாக அரசுடன்
பேசியிருந்தால்
அக்கரையில் உள்ளவர்கள்
அகம் மகிழ்ந்திருப்பர்!

நாளை நமக்கொரு
துயரம் வந்தால்
"நாங்கள் இருக்கிறோம்!"
என்று குரல் கொடுக்கும்
உணர்வும் ஓங்கியிருக்கும்!

தமிழக மீனவர்கள்
சிலர் கடல் எல்லையை
தாண்டி வருவது உண்மைதான்!
நம் நாட்டு மீனவர்களும்
எல்லை தாண்டாமலில்லை!

எல்லை தாண்டினால்
கைது செய்யலாம்;
உயிரை எடுக்கலாமா?
அதைத்தான் கேட்கிறார்கள்
தமிழக மீனவர்கள்!

இங்குள்ள தமிழ்க் கட்சிகள்
இலங்கை அரசிடம்
நியாயத்தை எடுத்துச் சொன்னால்
நன்றி மறவாதவர்கள் என்ற
நற் பெயராவது கிட்டும்!

இந்திய அரசியல்வாதிகளை
குளிர்விப்பதுதான்
இந்திய உறவின் அர்த்தம்
என்று தமிழ்க் கட்சிகள்
தவறாக நினைத்துக் கொள்கின்றன!

தமிழக மக்களின்
கொந்தளிப்பும்-கோபாவேசமும்தான்
இந்திய அரசை
அன்றும் இங்கு திரும்பச் செய்தது!

தமிழக அரசியல்வாதிகள்கூட
அங்குள்ள மக்களின்
எழுச்சியைக் கண்ட பின்னரே
உரத்துக் குரல் கொடுத்தனர்!

தமிழக மக்களிடம்
தணிந்துபோயுள்ள
நம்மீதான அனுதாபத்தினையும்
அக்கறையையும்
மீண்டும் எழச் செய்வதும்
தமிழ்க் கட்சிகளின் கடமை!

இந்திய உறவினை
புலிகள் கெடுத்துவிட்டார்கள்
என்று கூறிக்கொண்டிருந்தால்
அது புலிகள்மீதான
விமர்சனம் மட்டும்தான்!

அந்த உறவைச் சீர்படுத்த
கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை
பற்றிக் கொள்வதுதான்
மக்கள்மீதான
கரிசனமாக இருக்கமுடியும்!

நன்றி உணர்வு,
காலமறிந்த கடமை,
தேவையான உறவு
என்று எக்கோணத்தில்
நின்று நோக்கினாலும்
தமிழக மீனவர்கள் பிரச்சனையில்
இங்குள்ள தமிழ்க் கட்சிகளும்
குரல் கொடுப்பதே பொருத்தம்!

அப்படிக் குரல் கொடுப்பது
தேசவிரோதச் செயலல்ல!
இந்திய மக்களுடன்
இலங்கை அரசும் உறவு நாடுகிறது.
நட்பின் சின்னமாக
யானைக் குட்டிகளையும்
பரிசாகக் கொடுத்திருக்கிறது!
நாம் மட்டும்
நட்பை நாடுதல் தப்பா?

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## வழி நடத்தும் மீட்பர்

மனித வாழ்க்கையில் இன்பம், துன்பம் இரண்டும் மாறி மாறி வரும். தனக்கு நல்லவை நடக்கும் போது சந்தோஷப்படும் மனிதன், துன்பம் வரும்போது கலங்கிப் போகிறான்.

துன்பப்படும் மனிதன் அதிலிருந்து விடுபட- தன்னை ஆறுதல் படுத்த ஒரு கரம் வேண்டும் என நினைக்கின்றான்.

அப்படிப்பட்டவர்களுக்கு, அரவணைத்துக் காக்க, துன்பத்திலிருந்து விடுபட, ஆறுதல்பட ஒரு கரம் உண்டு என்பதை தாவீது அரசன் கூறியுள்ளார்.

ஆடு மேய்த்துக்கொண்டிருந்த ஒரு சாதாரண மனிதனை இஸ்ரேல் தேசத்திற்கே அரசனாய் முடி சூட்டியவர் கர்த்தராகிய கடவுள். அவனுக்கு இடர்கள் ஏற்படும்போது வலிமையை நம்பாது, இறைவனை அழைத்து அவரிடம் முறையிட்டான். கடவுள் அவனை பல இடர்களிலிருந்து காத்து வழி நடத்தினார்.

தாவீது அரசன் திரளான ராஜ்ஜியத்திற்கு அதிபதியாக இருந்தபோதிலும், கடவுளின் முன் தான் ஒன்றுமில்லாத ஏழை என எண்ணினான். கடவுளின் மீட்பை வேண்டிப் பெற்றான்.

அதே போல் நமது துன்பங்களை கடவுளிடம் முறையிடும்போது அவர் எம்மை மீட்கச் சித்தமாயிருக்கிறார். நாமும் எமது துன்பங்களை அவரிடம் முறையிட்டு மீட்பைப் பெறுவோமாக.

ஜி.டானியல்.



## தொழுகையினால் உண்டாகும் பத்து நன்மைகள்

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் நவின்றார்கள்: "தொழுகை தீனின் தூண். அதில் பத்து நன்மைகள் இருக்கின்றன. அவையாவன,

1) முகத்திற்கு அழகைக் கொடுக்கிறது.
2) மனதிற்கு வெளிச்சம் அளிக்கிறது.
3) உடலிற்கு சுகத்தையும், பலத்தையும் தருகிறது.
4) கப்ரில் ஆதரவு அளிக்கிறது.
5) அல்லாஹ்வின் அருள் இறங்கச் செய்யும் சாதனம்.
6) வானத்தின் சாவி.
7) அமல்களின் தராசுக்கு எடை (அதாவது நல்ல அமல்களின் தட்டு கனமாகிறது)
8) அல்லாஹ்வின் பொருத்தம் கிடைக்கச் செய்கிறது.
9) அது சுவர்க்கத்தின் விலையாகும்.
10) நரகத்தின் திரையாகும்.

"யார் இந்தத் தொழுகையை நிலை நிறுத்துகிறாரோ அவர் தீனை நிலை நிறுத்தியவராவார். அதனை விட்டவர் தீனைத் தகர்த்தவராவார்." மேலும், "வீட்டில் தொழுவது வீட்டிற்கு ஒளியாகும். ஆகவே, தொழுகையின் மூலம் உங்கள் வீடுகளை ஒளிமயமாக்குங்கள்!" என்றும் நாயகமவர்கள் நவின்றுள்ளார்கள்.

தொகுப்பு செல்வி பௌக்கியா மன்சூர், மருதமுனை-03.

# கவிதைப் போட்டி இல. 213



## பரிசுக்குரிய கவிதை

### எதிர்காலம்....?

தோளிலே கிருஷாந்தி..;
தொங்குகிறாள் ராஜேஸ்வரி..!
காலடியில் புதை குழி!
பொல்லாத எதிர்காலம்
வல்லூறாய்க் காத்திருக்க.....
'நல்ல தங்காளாய்' நீ மாறி...
நடுங்கி அழுதனையோ...?!

எஸ். ஸப்ரீனா-அநுராதபுரம்.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பிரதிபலிப்பு!

போரின் வெம்மை
பொசுக்குது உணர்ச்சிகளை;
தூரிகையின் அசைவில்கூட
'துயரோவியங்கள்' பிரதிபலிப்பு!!

யாழ்.ஜன்ஸி கபூர்-அநுராதபுரம்.

### பொதி

தம்பிக்கும்
பசிக்கிறதாம்.....
ஏதோ
தீர்வுப் பொதியாம்...?
வாங்கேனம்மா
சாப்பிடுவோம்?!?

ம.பிரதீபன்-தென்இந்திய
திருச்சபை, மாங்குளம்.

### கணனி யுகத்தில்!

போதிமரச் சிந்தனையில்
புதுவரியில் மானிடமோ?
கணனிமய காலமிதில்
கருத்தரித்த ஓவியமோ?
கடும் சமர்தான் இவ்வுருவின்
தாய் தந்தை சகலதுமோ?

கனகராஜா கார்த்திகாமினி-
மயூரபதி, மட்டக்களப்பு.

### யாரிடம் கேட்பது?

மிரட்டிகேட்பார்க்கு
வழியுண்டு வாழ;
இரந்து நிற்பார்க்கு
யாருண்டு உதவ....?

எம்.லோஜினா- வவுனியா.

### எங்களுக்கு வேண்டும் போர்!

உங்களுக்கு அப்பனில்லை!
எனக்கோ கணவனில்லை!
எங்களுக்கு வேண்டும் போர்!
எஞ்சியுள்ள எங்களையும்
பங்கருக்குள் போட்டுத் தீ
பதைபதைக்கக் கொல்லுதற்கு!

கு.திருமால்-அமிர்தகழி, மட்டக்களப்பு.

### மாற்றான் தாய் மகளோ?

ஐம்பதாம் ஆண்டுவிழா கொண்டாடும் வேளையில்
அடுத்த பரம்பரைக்கு உணவில்லை, உடையில்லை
வடிக்கும் கண்ணீருக்கும் அளவில்லை!
இலங்கைத் தாயின் இளைய மகள் இவளோ?

கிருஷ்ணன் குகதாஸ்-வவுனியா.

### தாயக விடிவு

ஈழத் திரு நாடே
என்னருமைத் தாயகமே!
சோகக் கவி எழுதிடவோ
சுந்தரத் தமிழ் படைத்தாய்?
தாயின் மகிழ்வன்றோ
தாயகத்தின் விடிவாகும்!

ம.திருவரசுராசா- தவசிகுளம், வவுனியா.

### வாழ்க்கை

கண்கள் தழுவிடும் நீரினிலே
காலங்கள் எழுதிய வாழ்க்கையம்மா!
உறவுகள் தொலைந்த வாழ்வினிலே
மடியினில் மலர்ந்த மலர்களம்மா!
இன்றைய இருளினை நீ கடந்தால்
நாளைய வெளிச்சத்தில் வாழ்க்கையம்மா!!!

தெ.லோஜனா, கொழும்பு-15.

### விலை வாசி

விலைவாசி ஏற்றத்தால்
விழி துவள வாட்டத்தால்
வரி வரியாய் எலும்புகளும்
வெளி வந்து போராடும்!

சி.முரளீதரன்-தெபட்டன், நோட்டன்.

# கவிதைப் போட்டி இல.216



**கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.**
**அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 09.08.1997**

**முகவரி:** கவிதைப் போட்டி இல.216
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## ஒரே கல்லில்....

'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' திரைப்பட வசனத்தை வெளியிட்டு அசத்திவிட்டார் காதிலை பூ கந்தசாமி. சிவாஜி விருது பெற்றதுக்காக அதனை வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த வசனங்கள்.....? கந்தசாமியார் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்க நினைத்தாரோ?

மா.அந்தோனிமுத்து, மட்டக்களப்பு.



## பாடிய வாயும் ஆடிய கால்களும்

தங்கள் அரசியல் எதிரிகளை துரோகிகள் என முன்னர் அழைத்த கூட்டணியினர் இப்போது தங்கள் குத்துக்கரணங்களை விமர்சிப்பவர்களை 'தீய சக்திகள்', 'அவதூறு பரப்புவோர்' என்று கூறிவருகிறார்கள். பாடிய வாயும், ஆடிய கால்களும் சும்மாயிருக்குமா? பழக்க தோஷம் போகவில்லை.

பி.அன்பழகன், திருக்கோணமலை.

## உரிய நேரத்தில்

காலம் அறிந்து கணை தொடுப்பதில் 'முரசு' கில்லாடிதான். கட்டப்பொம்மன் படக் காட்சியை உரிய நேரத்தில் வெளியிட்டுவிட்டாயே! பாராட்டுக்கள்.

என்.ஹனீபா, சம்மாந்துறை.

'பண்டிட் குயின்' படம் கொழும்பில் பார்த்தேன். என் ஆசனமருகே இருந்தவரும் 'முரசு' வாசகர்தான். எங்கள் இருவரது அபிப்பிராயமும் என்ன தெரியுமா? படம் முரசு தரும் தொடர்போல காத்திரமாக இல்லை. மூன்றுமணி நேரத்துக்குள் எடுத்து முடிக்கும் அவசரத்தில் கதையைக் கொண்டு செல்கிறார்கள். ஆனாலும் பிரமாதமான படைப்பு என்பதில் ஐயமில்லை. அதிலும் பூலான்போலவே ஒரு நாயகியை தேடிப்பிடித்து நடிக்கவைத்திருக்கிறார்களே!

எம்.ஜே.உவைஸ், கொழும்பு-08.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* சி. கிரவுஞ்சன், வவுனியா.
* எம். சன்பரா பாஹிர்,கொட்டாரமுல்லை.
* பௌமியா ஹனீபா, குட்டிகம.
* எம்.சி.றவூப், அக்கரைப்பற்று-06.
* எம்.ஜே. ரயீஸ், கம்பிரிகஸ்வெவ.
* ஆ. இராஜேந்திரம், ஹட்டன்.
* ச. நாவேந்தன், வெல்லாவெளி.
* என்.எம். சாஜித், கரம்பை.
* இ.லுகிதா, கோயில் போரதீவு.
* எஸ். யுவராணி, பிட்டகந்தை.
* எஸ். மாலினி, வவுனியா.
* செல்வி.எஸ். லோகிதவாணி,மட்டக்களப்பு.
* த. சிவரஞ்சன், வத்தளை.
* ஆ. அல்பிரட், ஜெர்மனி.
* ஆர். றினோஸியா,திஹாரிய.
* ஆர்.எஃப். ஸியான், பலவத்துறை.
* பூ. இந்திரன், வவுனியா.
* முகமட் ஹசன், நீர்கொழும்பு.
* வீ. யோகேஸ்வரன், செல்வக்கந்தை.
* சொரூபநாதன் உதயநந்தன், மிருசுவில்.
* பி. ராசியப்பன், லிந்துலை.
* ஏ. கஜேந்திரன், இலண்டன்.
* ஆர். தனபாலசிங்கம், யு.எஸ்.ஏ.
* எம். ரட்ணவேல், சவுதி அரேபியா.
* பா. சௌந்தரம், கனடா.
* கே. ராகுலன், கனடா.
* ஜி. மணிவண்ணன், அவுஸ்திரேலியா.
* ஆறுமுகம் ரவி, கண்டி.
* செல்வி ம. கௌரி, கொழும்பு-11.

## ஒரு சந்தேகம்?

அன்பு முரசுக்கு!

யார் மூலமாவது எப்போதாவதுதான் யாழ்ப்பாணத்திற்கு வருகிறாய். அதனால் உன்மீது கோபம். சமீபத்தில் ஒரு அதிர்ச்சியான விடயம்- இங்குள்ள பத்திரிகை ஒன்றில் முரசில் நான் கண்ட அதே எக்ஸ்ரே ரிப்போர்ட்டை சில மாற்றங்களுடன் வேறு ஒருவர் பெயரில் பிரசுரித்திருந்தார்கள். 'முரசு' இங்கு வராத நிலையில் முரசில் உள்ள முக்கிய விடயங்களை எடுத்து எமக்கு தருவது நல்லதுதான். ஆனால் அதனை வேறு ஒருவர் தனது பெயரில் வெளியிடும்போது நாரதர்தான் வேறு பெயரில் எழுதுகிறாரோ என்று சந்தேகம் வந்துவிட்டது. என் சந்தேகம் ஒருவேளை சரியானதோ?

செல்வி.சி.சுசிலாதேவி, நல்லூர்.

உங்கள் சந்தேகம் தவறானது. -(ஆர்.)-

## இங்கு மட்டும் என்னவாம்?

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தொடர்பாக முரசின் அரசியல் ரீதியான விமர்சனங்கள் சரியானவையே. அதே சமயம் கலைஞரின் தமிழ் இலக்கிய ஆற்றலில் முரசுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு என்று முரசில் குறிப்பிட்டும் இருந்ததாக ஞாபகம். எனக்கென்ன வருத்தமென்றால், இங்குள்ள தமிழ்க் கட்சிகளே கண்ணாமூச்சி ஆடும்போது கலைஞரை விமர்சித்து யாது பயன்? ஆயுதமேந்திச் செயற்பட்டோர்கூட இப்போது 'காகித சுரைக்காய்கள், கறிக்குதவும்' என்று நம்பியிருக்கிறார்களே? நமக்கு தகுதியுண்டா அயல் நாட்டு அரசியலாளர்களை ஆராய?

கே.துரைராசா, கொழும்பு-10.

## மனதுக்கு நிறைவு

'கனவு மெய்ப்பட வேண்டும்' மனதுக்கு நிறைவான தொடர். பிரபஞ்சன் ஒரு பக்குவப்பட்ட எழுத்தாளர். பெண்களின் உணர்வுகளை நன்கு புரிந்துவைத்து எழுதுகிறார். 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்' என்று பெண்களை காலுக்குள் போட்டு மிதிப்பதை ஆதரிக்கும் கருத்துக்களும், பெண் விடுதலை என்றால், புருசன் மனைவியின் உடைகளை துவைப்பதே என்பதுபோலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிட்டனர். ஜனரஞ்சகப் பத்திரிகைகளுக்கு அதில் ஒரு பங்குண்டு. தமிழகப் பத்திரிகைகளுக்கும் சேர்த்துத் தான். 'முரசு' அதில் இருந்து மாறுபட்டு நிற்பது மகிழ்வு தருகிறது.

செல்வி ஆர்.லோஜினி, வவுனியா.

அன்பின் முரசே!

உனது ஒவ்வொரு பக்கமும் தனி சுவைதான். இதில் பூலானின் தொடர் மிக அருமை. எனது நண்பர் குவைத்தில் வேலை செய்கின்றார். தொடராக முரசு எடுப்பது அவர் வழக்கம். சென்றவாரம் நண்பரைச் சந்தித்தபோது "மூன்று வாரமாக முரசு எடுக்கத் தவறி விட்டேன். மல்லா உயிரோடு இருக்கின்றானா? பூலானின் நிலை என்ன?" என்பதை மிக ஆவலோடு விசாரித்தார், மூன்று வாரத்தின் பூலானின் தொடரை சொல்லி முடித்த போதுதான் மன நிம்மதி என்று விடை பெற்றார். முரசு தொடராக தொடர வாழ்த்துக்கள் பல!

என்.எல்.முஸம்மில், புதிய காத்தான்குடி.

# "படைகள் நிலைகொண்டுள்ளவரை பேச்சுக் கிடையாது!"

# பீரிஸ்-கதிர்காமர் பேட்டிகளுக்கு புலிகள் பதில்!

(அரசியல் நிருபர்)

புலிகள் இயக்கத்தினருடன் பேச்சு நடத்துவது தொடர்பாக நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் சமீபத்தில் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

புலிகள் இராணுவரீதியில் பலவீனப்படுத்தப்படவேண்டும்; அதன்பின்னரே பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்றே இருவரும் கூறியிருந்தனர்.

இக் கருத்தை வெளியுலக இராஜதந்திரிகள் மட்டத்திலும் இலங்கை அரசு கொண்டு சென்றிருக்கிறது.

"புலிகளை பேச்சுக்கு கொண்டு வர வேண்டுமானால் அவர்களைப் பலவீனப்படுத்தியாக வேண்டும். அப்போதுதான் பேச்சுக்கு முன்வருவார்கள்," என்று அரசு தன் போருக்கான காரணத்தை விளக்கத் தொடங்கியுள்ளது.

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரும் இலங்கை அரசின் அக் கருத்தையே தமிழ்க் கட்சிகளிடம் திருப்பிக் கூறியிருந்தார்.

அரசின் தீர்வு யோசனைகளை புலிகள் தவிர்ந்த தமிழ்க் கட்சிகள் அனைத்தும் அங்கீகரித்துள்ளன என்ற அபிப்பிராயம் வெளியுலகில் ஏற்பட்டுள்ளது. இந்த எண்ணமானது புலிகள் நியாயமான தீர்வை ஏற்று பேச்சு நடத்த மறுக்கிறார்கள் என்று அரசு கூறும் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக உள்ளது.

இதன் அடிப்படையிலேயே புலிகளை பேச்சுக்கு கொண்டுவரவேண்டுமானால், அவர்களை பலவீனமாக்க வேண்டும் என்ற கருத்தையும் அரசு முன்வைத்துள்ளது.

## புலிகள் கருத்து

அமைச்சர் பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரின் கருத்துக்கள் தொடர்பாக புலிகள் தெரிவித்துள்ளதாவது:

"ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைவிட்டு சிறீலங்கா படையினர் வெளியேறும்வரை சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை. நாம் வலியுறுத்தி வரும் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்குவது என்ற போர்வையில், தமிழ் மக்களின் ஆத்மாவோடு இரண்டறக் கலந்துவிட்ட விடுதலை எழுச்சியையும், அவர்களின் சுய கௌரவ உணர்வையும் பலவீனப்படுத்துவதே சிறீலங்கா அரசின் நோக்கமாகும்.

பலவீனமான நிலையில் அரை குறைத் தீர்வுகளுக்கு தலையாட்டிக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் போன்று, விடுதலைப் புலிகளையும் பணியவைப்பதுதான் பேரினவாதிகளின் திட்டமாகும்.

தமிழ் மக்களின் உணர்வெழுச்சியின் சின்னமாக உள்ள விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்திவிட்டால் பின்னர் தமிழ் மக்களின் எழுச்சிக்கு ஆப்புவைத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

சிறீலங்கா அரசு தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்க விரும்பினால், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாடாமல் இருப்பது ஏன்? விடுதலைப் புலிகள்தான் அரசியல் தீர்வுக்கு தடையாக இருப்பதாக சிறீலங்கா அரசு கூறுகிறது. தான் முன்வைத்த அரை குறைத் தீர்வுப் பொதியைக் கூட ஒப்பேற்ற முடியாமல் போனது ஏன்?

## இரண்டும் ஒன்றுதான்

புலிகளை பலவீனப்படுத்துவது என்பதும் ஒன்றுதான், தமிழ் மக்களின் தேசிய எழுச்சியின் ஆத்மாவை பலவீனப்படுத்துவது என்பதும் ஒன்றுதான்.

உண்மையான சமாதானத்தை நாம் என்றும் எதிர்த்தவர்கள் அல்ல. சமாதானம் என்ற பெயரில் எங்கள் தேசிய கௌரவத்தை, தேசிய ஆத்மாவை பேரினவாதத்தின் காலடியில் போடுவதற்கு நாம் சம்மதிக்கப்போவதில்லை.

சர்வதேச சமூகம் முன்பாக சிறீலங்கா அரசு சமாதான வேடம் புனைந்து நிற்கிறது. ஆனால் தமிழ் மக்கள்மீது கொடூரமான யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. தினமும் தமிழர் குடியிருப்புக்கள்மீது எறிகணை வீச்சுக்களும், விமானத் தாக்குதல்களும் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

உணவுப் பொருட்கள் அனுப்புவதை விடுதலைப் புலிகள் தடுப்பதாக அரசு கூறிவருகிறது. ஆனால் வன்னியில் அரசின் பொருளாதார தடைகாரணமாக பட்டினிச் சாவுகள் ஏற்பட்டு வருகின்றன. மூவாயிரத்து நாநூறு மாணவர்கள் பசியினைப் போக்க பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சர்வதேச சமூகத்தின் முன்பாக இவையெல்லாம் மறைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சி எம்மை நோக்கி திரும்பும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

எத்தகைய இடர் ஏற்பட்டாலும் தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காக, தன்மானத்திற்காக விடுதலைப் புலிகளின் படையணிகள் போரிடச் சித்தமாயுள்ளன," என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

## சிறப்புப் படையணி

இதற்கிடையே புலிகளின் சிறப்புப் படையணிகள் மேலும் விரிவு படுத்தப்பட்டுள்ளன. புலிகள் இயக்க சீருடையில் இருந்து சிறப்பு படையணி சீருடை வித்தியாசமாக அமைந்துள்ளது. ஆண்கள் படையணி, பெண்கள் படையணி இரண்டும் கலந்ததாக சிறப்புப் படையணி அமைந்துள்ளது.

ஓமந்தை-பெரியமடு ஊடறுப்பில் முக்கிய பங்கு வகித்த சிறப்புப் படையணி அதன் பின்னர் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாம்.

# புலிகளுக்கு ஹெலிக்கொப்டர்?

## புலனாய்வுப் பிரிவு சந்தேகம்!

கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகப் பிரமுகர் ஒருவர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இவர் உக்ரேன் நாட்டுக்கு விமானம் ஏறத் தயாராக இருந்தபோதே கைதானார் என்று தெரியவருகிறது. இவர் ஏற்கனவே உக்ரேன் நாட்டுக்குள் பிரவேசிக்க முனைந்தபோது, இவருடைய விசா ஒழுங்கில்லாமையினால் திருப்பி அனுப்பப்பட்டவராம். இவருடன் மற்றும் இரு வர்த்தகர்கள் குற்றவியல் பொலிஸ் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

உக்ரேன் நாட்டிலிருந்து 8 ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்வதற்கு இம் மூவரும் முயற்சி செய்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. விமானப்படை அதிகாரிகளுக்கு பணம் கொடுத்து, பெருந்தொகைப் பண முதலீட்டில் இந்த ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்வதற்குரிய ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ள இவர்கள் முனைந்தனராம். இஸ்ரேலிலுள்ள ஒரு முகவர் மூலமே உக்ரேன் ஹெலிக்கொப்டர்களை வாங்குவதற்கான ஏற்பாடுகளும் இம் மூவரினால் செய்யப்பட்டிருந்ததாம்.

இலங்கை விமானப்படையினரின் உபயோகத்துக்காகவே ஹெலிக்கொப்டர்கள் கொள்வனவு செய்யப்படவிருப்பதாகக் கூறப்பட்டாலும் உண்மையில் எல்.ரி.ரி.ஈ.யினருக்காகவே இவை பெறப்படுவதற்கான முயற்சியாக இருக்கலாமோ என்று கண்டறிவதற்காக, குற்றவியல் துறை பொலிஸ் அதிகாரி ரி.வி.சுமனசேகர தனது நேரடி விசாரணையைத் தொடங்கியிருக்கிறார் என்று தெரியவருகிறது.

## கடற்புலிகள் தயார்நிலை!

வடக்கு-கிழக்கு கடற்பகுதியில் கடற்புலிகள் பலத்த தாக்குதலுக்கு தயார் நிலையில் நடமாடுவதாகத் தெரிகிறது.

24.07.97 அன்று முல்லைத்தீவு கடற்பரப்பில் மூன்றுமணி நேர மோதல் இடம்பெற்றது. இந்த மோதலை புலிகளின் செய்திகள் உறுதிசெய்துள்ளன. தமது தரப்பு சேத விபரங்கள் எதனையும் புலிகள் தெரிவிக்கவில்லை.

இரண்டு கடற்படைப் படகுகள் சேதமாக்கப்பட்டதாகவும், அம் மோதலின் பின்னர் முல்லைத்தீவை அண்டிய பகுதிகளில் மீனவர் படகுகள் தாக்கப்பட்டதாகவும் புலிகளின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு கடற்பகுதியில் கடற்புலிப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது.

# இரு தரப்பும் பதுங்கியிருந்து தாக்குதல்!

## மாணவர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்!

யாழ் குடாநாட்டில் பரவலான தேடுதல்கள் நடைபெற்றுவருகின்றன. கடந்தவாரம் கொக்குவில், ஆனைக்கோட்டை, தாவடி, நவாலி, மானிப்பாய் ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

கறுப்பு ஜூலையை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று கருதி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

யாழ் குடாநாட்டில் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கப் பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு விதிகளை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

பாடசாலைகளுக்கு தொடர்ச்சியாக செல்லாத மாணவர்கள் பற்றிய விபரங்கள், புதிதாகச் சேரும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் என்பவற்றை பாடசாலை அதிபர்கள் அருகிலுள்ள படைமுகாம்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மூன்று நாட்களுக்கு ஒரு மாணவனோ மாணவியோ தொடர்ச்சியாக பாடசாலை செல்லாவிட்டால்கூட தமக்கு தெரியப்படுத்துமாறும் சில பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாம்.

பாடசாலை மாணவர்களுக்கான அடையாள அட்டைகளுடன் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நடமாடுகின்றனர். பாடசாலைகளில் சேர்ந்து அடையாள அட்டைகளை பெற்றுவிட்டு பின்னர் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அதனைத் தடுப்பதற்காகவே இத்தகைய விதிகள் போடப்பட்டுள்ளதாக படையினர் காரணம் கூறுகின்றனர்.

பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகளிலும் யாழ் குடாநாட்டில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் இத்தகைய நடவடிக்கைகள் படையினருக்கு பயன் அளித்தன. செந்தமிழன் உட்பட புலிகளின் யாழ் மாவட்ட முக்கிய பொறுப்பாளர்கள் சிலரும் எதிர்பாராத மோதல்களில் பலியாகினர்.

தற்போது புலிகளின் அணிகள் உஷாராகியுள்ளன. பதுங்கியிருந்து படையினர் தாக்கலாம் என்று கருதி அதற்கேற்பவே தமது நடமாட்டங்களை மேற்கொள்கின்றனர்.

புலிகளும் பதுங்கியிருந்து படையினர்மீது தாக்குதல் நடத்துகின்றனர். சிறிது சிறிதாக ஆரம்பித்து காவலரண்களை தாக்குமளவுக்கு தாக்குதல்கள் விரிவு படுத்தப்பட்டன. இதன் பின்னரே படையினர் சிறு முகாம்களை மூடிவிட்டு பெரிய முகாம்களை நிறுவும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

26.07.97 அன்று மானிப்பாய் உடுவில் வீதியில் படையினர் சென்ற வாகனம் ஒன்று புலிகளின் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளானது. காலை 10 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது. உயிரிழந்த படையினர் விபரம் தெரியவில்லை.

எதிர்வரும் பருவ மழைக்காலத்தில் யாழ் குடாநாட்டில் பரவலான தாக்குதல்களுக்கு புலிகள் தயாராகி வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

யாழ் தீவுப் பகுதியில்-புங்குடுதீவில் புலிகளின் அணிகள் பெருமளவில் காணப்படுகின்றன. சமீபத்தில் ஊர்காவற்துறையில் உள்ள காவலரண்களுக்கு சமீபமாக வந்து நோட்டம் பார்த்துவிட்டு சென்றுள்ளனராம்.

# புலிகளின் மரணதண்டனை!

யாழ் குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகளின் நடமாட்டம் பற்றிய செய்திகள் உடனுக்குடன் படையினருக்கு சென்றடைகின்றன.

இதனால் புலிகளுக்கு உணவு கொடுக்கவும் பலர் தயக்கம் காட்டுகின்றனர். வீடொன்றில் புலிகள் சென்று உணவு கேட்டபோது, படையினருக்கு தெரிந்துவிடும் என்று பயந்தனராம். உடனே துப்பாக்கியைக் காட்டி உணவை எடுத்துச் சென்றனர் புலிகள்.

கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றில் கிணற்றுக் கட்டில் இருந்து புலிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அத் தகவல் படையினருக்கு எட்டிவிட்டது. உடனடியாக அந்த வீட்டை படையினர் முற்றுகையிட்டனர். சாப்பிட்டுக் கொண்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூவரும் படையினர் சுட்டத்தில் பலியானார்கள்.

படையினருக்குத் தகவல் கொடுப்போர் தொடர்பான விபரங்களைத் திரட்டுவதில் புலிகள் இப்போது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

படையினரால் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரும் தமக்கு உணவு தந்தவர்கள் பற்றிய விபரங்களைத் தெரிவிக்கின்றனராம்.

24.07.97 யாழ்ப்பாணம் தென்மராட்சியில் மட்டுவில், நுணாவில் பகுதியில் சின்னப்போடி கிருஷ்ணன் (55) என்பவருக்கு புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர். அவரது நெற்றியில் பிஸ்டலால் சுடப்பட்டுள்ளார். படையினருக்கு தகவல் கொடுத்ததாகக் கூறியே அவர் சுடப்பட்டுள்ளார்.

## பயிற்சிக்கு ஆட்கள் இல்லை!

உக்ரேனியன் நாட்டு விமானிகள் தங்கள் நாட்டுக்கு திரும்பிச் சென்ற பின்னர் இலங்கை விமானப் படையினரின் பயிற்சிகள் பாதிப்படைந்துள்ளன.

விமானப்படையினருக்கு போதிய பயிற்சி அளிக்கக்கூடியவர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சீனத் தயாரிப்பான வை 8 விமானம் ஒன்று புதுப்பிக்கப்பட்டு இரத்மலானை விமானத்தளத்தை வந்தடைந்துவிட்டது. அதனைச் செலுத்த போதிய அனுபவமுள்ள விமானிகள் இல்லையென்று கூறப்படுகிறது. இதனால் வடக்குக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய ஏராளமான யுத்த தளபாடங்கள் இரத்மலானையில் தேங்கிக் கிடப்பதாகக் கூறப்படுகிறது.

## ஊரடங்கில் மரணம்!

யாழ் குடாநாட்டில் ஊரடங்கு நேரத்தில் பிரசவ வேதனை காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள் அவதிப்படுவது பற்றி சென்ற வாரம் செய்தி தந்திருந்தோம் அல்லவா?

25.07.97 அன்று யாழ்ப்பாணம் கைதடியில் ஒரு கர்ப்பிணிப்பெண் மரணமானார். கைதடி கிழக்கைச் சேர்ந்த கனகரட்ணம் சதீஸ்வரி (36) என்பவரே மரணமானவராவார். ஊரடங்கு நேரத்தில் அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது. மருத்துவமனைக்கு கொண்டு செல்ல இயலாத நிலையில் வீட்டிலேயே பிரசவம் நடந்தது. அதிக இரத்தப்போக்கு காரணமாக அப்பெண் மரணமானார்.

## குழாய்க்குள் வெடித்த குண்டு

படையினரின் இரண்டு டாங்கிகளில் பொருத்தப்பட்ட பீரங்கிகள் வெடித்துவிட்டனவாம். பொருந்தாத குண்டுகள் போடப்பட்டதாலேயே வெடித்தனவாம். சுடு குழலுக்குள்ளேயே குண்டுகள் வெடித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் பொருத்தமில்லாத குண்டுகளை அனுப்பிவைத்த நாட்டுக்கு மிகுதிக் குண்டுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இரண்டு டாங்கிகளும் இதனால் சேதமடைந்துள்ளனவாம்.

## திருமலைத் தாக்குதல்

திருக்கோணமலை மாவட்டத்தில் தவுன்வேவாப் பகுதியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடி தம்மால் தாக்கப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

ரி.56 ரக துப்பாக்கி உட்பட இராணுவ உபகரணங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும், இரு படையினர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். தமது தரப்பில் சேதம் எதுவுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வயோதிபர் சடலத்துக்குள் சிசுவின் சடலம்?

## மரணவீட்டில் பதற்றம்

யாழ்.பொது மருத்துவமனையில் மரணமான வயோதிபர் ஒருவரின் சடலத்துக்குள் சிசுவின் சடலம் ஒன்றும் மறைந்து கிடந்தது.

பருத்தித்துறை சாரையடியைச் சேர்ந்த அந்தோனி தேவசகாயம் (65) என்பவர் புற்றுநோய் காரணமாக யாழ் மருத்துவமனையில் மரணமானார்.

அவரது சடலம் பிரேதப் பெட்டியில் வைத்து வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வீட்டில் பிரேதப் பெட்டிக்குள் இருந்து அவரது சடலம் எடுக்கப்பட்டபோது, அந்த சடலத்தின் ஆடைக்குள் இருந்து குழந்தை ஒன்றின் சடலம் விழுந்தது.

பிறந்தவுடன் இறந்த அச் சிசுவின் சடலத்தைக் கண்டவர்கள் பதற்றமடைந்தனர். உடனே பொலிசாருக்கு அறிவித்தனர். பொலிசார் சிசுவின் சடலத்தை புதைத்துவிடுமாறு கூறினார்களாம்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ் பொது மருத்துவமனை வட்டாரங்கள் கூறியுள்ள தகவலின்படி; வயோதிபரின் சடலத்தை 'ஸ்றெச்சரில்' வைத்து எடுத்துச் செல்லும் போது, இறந்த சிசுவின் சடலத்தையும் அதே 'ஸ்றெச்சரில்' வைத்து பிரேத அறைக்கு எடுத்துச் சென்றனராம். பின்னர் அவற்றை தனியாக வைக்க மறந்தனராம். அதனால் வயோதிபர் சடலத்துடன் அது கிடந்து பிரதப் பெட்டியிலும் வைக்கப்பட்டுவிட்டதாம்.

யாழ் குடாநாட்டில் மரணங்கள் தொடர்பான அலட்சிய மனோபாவத்துக்கு இச்சம்பவமும் ஒரு சான்று.

# ஷெல் வீச்சில் பலி!

கிளிநொச்சியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்து வெடித்ததில் ஒருவர் பலியாகியுள்ளார். இளம் பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர். வட்டக்கச்சியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் வேலணையில் இருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சியில் வசித்துவந்த சச்சிதானந்தன் சிவக்குமார் (வயது 22) என்பவரே பலியாகியுள்ளார்.

வன்னியில் ஜெயசிக்குறுய் படையினரின் நிலைகளை புலிகள் நெருங்காமல் தடுப்பதற்காக விமானப் படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்திவருகின்றனர். புளியங்குளத்தை அண்டிய பகுதிகளில் கடந்தவாரம் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதேவேளை வெலிஓயா முகாம், கிளிநொச்சி முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இந்த இரு முகாம்களும் புலிகளால் தாக்கப்படக்கூடும் என்று கருதி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

# 60 கிலோ கண்ணிவெடி மீட்பு!

மட்டக்களப்பு- கொழும்பு நெடுஞ்சாலையில் ஒவ்வொன்றும் 30 கிலோ எடையுள்ள இரு கண்ணிவெடிகளைக் கண்டெடுத்துச் செயலிழக்க வைத்ததாகப் படையினர் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த 27.07.97 அன்று கிரானில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து விடுமுறை பெற்றுச் செல்லும் படையினரையும், விடுமுறை முடிந்து கடமைக்குத் திரும்பும் பல நூற்றுக் கணக்கான படையினரையும் ஏற்றிக் கொண்டு அடிக்கடி 20க்கு மேற்பட்ட இராணுவ வண்டித் தொடர் இந்த நெடுஞ்சாலை வழியாகப் போக்குவரத்தில் ஈடுபடுவது வழக்கமாகும்.

அதிர்ஷ்டவசமாகப் படையினர் இந்தக் கண்ணி வெடியில் சிக்கிக் கொள்ளவில்லை. அவ்வாறு நேர்ந்திருந்தால் பாரிய இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று கருதப்படுகிறது.

கடந்த வாரம் கிரானுக்குச் சமீபமாக உள்ள சித்தாண்டியில்,படையினருடனான மோதலில் 32 புலிகள் பலியானதற்கு பதிலடியாக, புலிகள் இயக்கத்தினர் இந்தக் கண்ணி வெடித் தாக்குதலைத் திட்டமிட்டிருக்கலாம் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இடம்பெற்றதான மற்றும் இரு சம்பவங்களின் போது, பொலிஸாருக்கு அனுப்பப்பட்ட வாழ்த்து மடல் ஒன்றினுள் குண்டொன்றிருந்து கண்டுபிடிக்கப்பட்டு அது வெடிக்கு முன்னரே செயலிழக்கச் செய்யப்பட்டது. இச்சம்பவம் ஜூலை 21ஆம் திகதி நிகழ்ந்தது.

மட்டக்களப்பு- கல்லடியில் பொதுமக்கள் கொடுத்த தகவலொன்றையடுத்து சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டு அதுவும் செயலிழக்கச் செய்யப்பட்டது. ஜூலை 27ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.

# புலிகள் முஸ்லிம்களுக்கு முன்னறிவுறுத்தல்!

மட்டக்களப்பு-தியாவட்டவான், கேணிநகர் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 255 முஸ்லிம் குடும்பங்கள் கடந்தவாரம் அங்கிருந்து இடம்பெயர்ந்து ஓட்டமாவடியில் உள்ள உறவினர்-நண்பர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கேணிநகர், தியாவட்டவான் பகுதிகளுக்கு மிக அருகிலேயே நாவலடிச் சந்தியில் படையினரின் பெரிய முகாமுள்ளது. அதனைச் சூழவுள்ள பகுதியிலிருந்து புலிகள் இயக்கத்தினர் எந்நேரமும் படையினரின் முகாமைத் தாக்கக்கூடிய சாத்தியமுண்டு. அத்தாக்குதலின் இடைநடுவில் அகப்பட்டு முஸ்லிம் குடும்பங்கள் பாதிக்கப்படக்கூடும் என்பதனால் முஸ்லிம்கள் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் புலிகள் இயக்கத்தினர் அம்முகாம்மீது 'ஷெல்' தாக்குதலை நடத்திய போது படையினர் பதில் 'ஷெல்' வீச்சு நடத்தியது தவறி கேணிநகர்ப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது. இதனால் தந்தையும், தனயனும் பலியானார்கள்.

இந் நிலைமையைக் கருத்திற் கொண்டு கேணிநகர், தியாவட்டவான் பகுதி முஸ்லிம்களிடம் இரவோடிரவாக வந்து கலந்துரையாடிய புலிகள் இயக்கத்தினர், "நாம் எப்போதாவது படையினர் மீது தாக்குதல் நடத்தும் போது இடை நடுவில் சிக்கி நீங்கள் பாதிப்படைய வேண்டிவரும். எனவே பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்," என்று கேட்டுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்தே முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறினர் என்று அக்கிராமவாசிகள் தெரிவிக்கிறார்கள்.

கடந்த 1990 ஆம் ஆண்டு அகதிகளாக இடம்பெயர்ந்து சமீபத்தில்தான் அங்கு மீளக்குடியமர்ந்திருந்த அக் குடும்பங்கள் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

# பெருந்தோட்டப் பகுதிகளுக்கு ஆசிரிய நியமனம்!

மத்திய மாகாணத்தின் தமிழ் பிரிவுக்குச் சுமார் 2500 ஆசிரிய வெற்றிடங்கள் உண்டென்று மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சர் திரு வீ. புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார். இவற்றில் 1025 ஆசிரியர்கள் ஏற்கனவே தோட்டப் புறங்களுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். நியமனம் கிடைத்தவர்களில் 700 பேர் நுவரெலியா மாவட்டத்தில் பணியாற்றுகிறார்கள்.

இந்த ஆசிரிய நியமனங்களால் கல்வி நிலையில் மிகப் பின்தங்கியுள்ள தோட்டப்புறப் பாடசாலைகள் மிகுந்த நன்மை பெறும் என்றும், அடுத்து நடைபெறவுள்ள பரீட்சையில் மாணவர்களின் முன்னேற்றம் நன்கு தெரியவரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தோட்டப்புறப் பாடசாலைகள் பல அடிப்படை வசதிகளின்றிக் காணப்படுகின்றன.

பதுளை-லுணுகலை ஷோலண்ட்ஸ் தமிழ் மேல் வித்தியாலயத்திற்கு குடிநீர் வசதிகூட நீண்டகாலமாக இல்லை. நீர் வசதி இல்லாததினால் மலசல கூடங்களைப் பாவிக்க முடியாத நிலையுள்ளது. பிரதான வீதியிலிருந்து பல மைல் தூரம் மலையேறிப் பாடசாலைக்கு நடந்துவரும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பகலெல்லாம் குடிநீரின்றி பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

# இடம்பெயர்ந்த அகதிகளின் அவலங்கள்!

சிறிலங்கா அரசால் நடத்தப்படும் "ஜெயசிக்குறுய்" முடிவின்றி தொடரும் இவ்வேளையில் புலம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களிலும், பாடசாலைகளிலும், காடுகளில் மரநிழல்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களை- ஒரு புறம் கொட்டும் மழையும், எறிகணைகளும், கிபிர் குண்டுகளும் பெரும் அவலங்களுக்குள்ளாக்குகின்றன.

உறவுகளையும், உடைமைகளையும் இழந்த நிலையில் எம் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவர்கள் ஒருவேளை உணவுக்கே பெரும் கஷ்டப்படுகின்றனர். இம்மக்கள் எவ்வித தொழில் வாய்ப்பற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

வன்னியில் நிலவும் உணவுப் பொருட் தட்டுப்பாடும், பொருட்களின் விலை அதிகரிப்பும் எம் மக்களை பட்டினிச் சாவிற்கு படிப்படியாக தள்ளுகின்றன.

இது இவ்வாறிருக்க, அரசோ வன்னிக்குத் தேவையான உணவு வண்டிகளில் அனுப்பி வைக்கப்படுவதாக பிரச்சாரம் செய்துவருகின்றது.

இடம் பெயர்ந்திருக்கும் எம் மக்களை கொடிய தொற்று நோய்களும் வாட்டுகின்றன. வன்னியில் நிலவும் மருந்துப்பொருட்களுக்கான தட்டுப்பாட்டால் இவர்களில் பலர் உயிர் இழக்கின்றனர்.

குழந்தைகளின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. 'பால் கேட்ட பிள்ளைக்கு பனை வட்டைக் காட்டும் நிலை'யில் பெற்றோர்கள் இருக்கின்றனர்.

இக்குழந்தைகளை கொலரா, டெங்குக் காய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் பீடித்துள்ளன. அகதிகளுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த சமைத்த உணவு விநியோகமும், உலர் உணவும் நிறுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான அகதிகள் அடிப்படை வசதிகள் எதுவுமே செய்து கொடுக்கப்படாத நிலையில் தவிக்கின்றனர்.

ஈழவேந்தன், மாங்குளம்.

# கிடைக்குமா நஷ்டஈடு?

கடந்த ஜூலை 5ம் திகதி திருக்கோணமலை நகர் பாடசாலையான ஸ்ரீ சண்முகா பெண்கள் கல்லூரியின் பொதுவைபவத்தில் குண்டு வெடிப்பின் போது மரணித்தவர்கள் பற்றி அனைவரும் அறிந்ததே. இருப்பினும் இது போன்ற சம்பவங்கள் (தெகிவளைக் குண்டு வெடிப்பு, மத்திய வங்கி குண்டு வெடிப்பு, பஸ் வண்டி விபத்து) நடைபெற்றபோது அதில் இறந்தவர்களின் குடும்பத்திற்கும், காயமடைந்தவர்களுக்கும் உடனடி நஷ்டஈடுகள் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் இச்சம்பவத்தின் போது ஏற்பட்ட பாதிப்பாளர்களுக்கு இது வரை எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஏன் இந்த பாரபட்சம்? வெறுமனே வார்த்தைகளாலும், காகித பூச்செண்டுகளாலும், அனுதாபங்களை சொரிவதால் பயனில்லை.

எனவே, அரசு காலம் தாழ்த்தாது உடன் பணியில் இறங்குவதோடு, அவர்களுக்கான முழுமையான நஷ்டஈடுகளையும் உடன் வழங்க வேண்டும்!

கனகசபை தேவகடாட்சம், மல்லிகைத்தீவு.

# திருத்தப்படும் அஞ்சலகம்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை அஞ்சலகமும் அஞ்சலக விடுதிகளும் எட்டு இலட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்படுகின்றன. இதற்கான நிதி அஞ்சல் அதிபர் நாயகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, செல்வநாயகபுரம் சந்தைக் கட்டிடத்தில் உப அஞ்சல் அலுவலகம் ஒன்றும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக இயங்காதிருந்த திரியாய் உப அஞ்சல் அலுவலகமே இவ்வாறு புத்துயிர் பெற்றுள்ளது.

இதனால் செல்வநாயகபுரம், தட்டக்கை வீதி, தேவாபுரி, நித்தியபுரி, ஆனந்தபுரி அலஸ்தோட்டம் ஆகிய பகுதி மக்களின் நீண்டகாலக் குறையொன்று தீர்க்கப்பட்டுள்ளதாகப் பலர் கருதுகிறார்கள்.

எனினும் இவ்வஞ்சலகத்துக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை. இது பற்றி முரசு நிருபர் அஞ்சல் அத்தியட்சகர் திரு. நல்லதம்பியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, "இது திரியாயில் நிறுவப்பட வேண்டிய உப அஞ்சல் அலுவலகம். மக்கள் நலன் கருதி இங்கு திறந்திருக்கிறோம். தொலை பேசி வசதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். முயற்சி வெற்றி பெறக்கூடும்," என்று பதிலளித்தார்.

# கைதடி, கிருஷாந்தி பாலியல் வல்லுறவு

## "அந்தக் கூட்டம்மீது குற்றம் சாட்டவில்லை!"

### கூட்டணி உபதலைவர் மறுப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வி.ஆனந்தசங்கரிமீது தமிழர் நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் கூறிய புகார்களை அவர் மறுத்துள்ளார்.

கிருஷாந்திமீதான பாலியல் வல்லுறவு சம்பவத்துடன் புலிகள் அமைப்பினரைத் தொடர்புபடுத்தி வி.ஆனந்தசங்கரி தம்மிடம் கூறியதாக தமிழர் நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் மூவரும் குற்றம் சாட்டினார்கள். இது தொடர்பாக கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரத்துக்கு அவர்கள் எழுதிய கடிதம் முரசில் பிரசுரமாகியிருந்தது.

முரசுக்கு திரு.ஆனந்தசங்கரி ஆங்கிலத்தில் மறுப்பு எழுதியிருந்தார். தமிழில் மறுப்பு எழுதுமாறு கேட்டுகொண்டதன்பேரில், தமிழில் தனது மறுப்பை அனுப்பிவைத்துள்ளார்.

திரு. ஆனந்தசங்கரி தனது மறுப்பில் கூறியுள்ளதாவது: "கைதடியில் சில மாதங்களுக்கு முன் நடந்த துர்ப்பாக்கியமான கொடிய சம்பவத்தை நீங்கள் மூவரும் அரசியல் இலாபம் கருதி, வேறு இரு சம்பவங்களையும் இணைத்து உண்மைக்குப் புறம்பாக கட்டுக்கதையொன்றை உருவாக்கி மக்கள் முன் வைத்துள்ளீர்கள்.

கைதடி சம்பவத்தில் வேறொரு கூட்டத்தை நாம் சம்பந்தப்படுத்தியதாக நீங்கள் குறிப்பிட்டிருப்பது அபாண்டமானதாகும். அந்தக் கூட்டம் ஒழுக்க நெறிகள் விடயத்தில் கண்ணியமாக நடப்பதை அக்கூட்டத்துக்கு எதிரானவர்களும் அறிவர்.

இன்றைய அரசு ஆட்சிபீடமேறிய பின்னர் 63 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டதாக நீங்கள் கூறினீர்கள். அதை நிரூபிக்கும்படி நான் சவால்விட்டபோது, இப் புள்ளிவிபரம் ஐ.நா.ஸ்தாபனத்தின் ஆவணங்களில் இருந்து எடுத்ததாகக் கூறினீர்கள். இக் கட்டத்தில் திரு.சின்னக்கோன் குறுக்கிட்டு அந்த எண்ணிக்கை தவறென்றும் 6,300 தான் சரியான கணிப்பென்றும் கூறினார். அப்போது அத் தொகை சரியாக இருக்கலாமென்றும், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினர் மட்டும் அதற்கு பொறுப்பல்ல என்றும் நான் கூறினேன்.

தரைப்பாதை திறப்பைப் பொறுத்தவரை 'அது திறக்கப்படுவது ஒரு வரப்பிரசாதமாக இருப்பினும், திறக்கும் முறை இதுவல்ல' என்று 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்திருந்தேன். அப்பேட்டியின் சில பகுதிகளை மட்டுமே இலங்கை வானொலி ஒலிபரப்பியிருந்தது. இது தொடர்பாக இலங்கை வானொலி பணிப்பாளருக்கு மறுப்பு அனுப்பியிருந்தேன்."

இவ்வாறு திரு.ஆனந்தசங்கரி தனது மறுப்பில் கூறியுள்ளார். ஆனந்தசங்கரியின் மறுப்புத் தொடர்பாக தமிழர் நடவடிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டபோது தமது புகார்கள் உண்மையானவை என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

தரைப்பாதை திறப்பு தொடர்பான செய்திக்கு தான் மறுப்புத் தெரிவித்ததாக திரு.ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.ஆனால் அவ்வாறான மறுப்பு எதுவும் வானொலியில் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முகவரி மாறிய கடிதங்கள்!

கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட வெளிநாட்டுக் கடிதங்களைப் பெற்றுக் கொண்ட சில விலாசதாரர்களுக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

கடிதத்தின் உறையில் தங்கள் முகவரியைக் கண்டு ஆவலுடன் கடிதத்தைப் பிரித்த போது உள்ளே தமக்குச் சம்பந்தமில்லாத- வேறு எவருக்கோ எழுதப்பட்ட கடிதம் இருப்பது கண்டு அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வரும் வெளிநாட்டுக் கடிதங்களில் அடிக்கடி இத்தகைய குழறுபடிகள் இடம்பெறுகின்றன.

புகைப்படங்களுடன் அனுப்பப்பட்ட கடிதங்கள் சிலவற்றில் புகைப்படங்கள் மட்டுமே இருப்பதாகவும், அவற்றுடன் எழுதி வைக்கப்பட்ட கடிதங்கள் காணாமற் போயுள்ளதாகவும் சில விலாசதாரர்கள் கூறியுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து யாழ் குடாநாட்டுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் கொழும்பில் உடைத்துச் சோதனையிட்ட பின்னரே இங்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

நீண்ட காலமாக இந்த நடைமுறை தொடர்ந்து அமுலில் இருந்து வருகின்றது.

பரிசோதனைக்காக உடைக்கப்படும் கடிதங்கள் மீண்டும் உறைகளில் இடப்பட்டு 'கிளிப்' பண்ணப்படுகின்றன. இவ்வாறு செய்யும் போது பல குழறுபடிகள் இடம்பெறுவது தெரிய வருகிறது.

# நடமாட இடமில்லை

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் மூலை முடுக்குகளில் எல்லாம் முச்சக்கர வண்டிகள் தரித்து நிறுத்தப்படுவதால், ஏனைய வாகன உரிமையாளர்களும் கடைச் சொந்தக்காரர்களும் பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

கண்டி நகரில் மக்களின் நடமாட்டம் வெகுவாக அதிகரித்து விட்டதால் நடைபாதைகளில் கூட பாதசாரிகளுக்கு நடந்து செல்ல முடியவில்லை. நடமாடும் சிறு வியாபாரிகளின் தொல்லைகள் ஒருபுறம். எல்லாப் பாதைகளிலும் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இதனால் தாங்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்குவதாகப் பாதசாரிகளும் கடை உரிமையாளர்களும் முரசுக்குத் தெரிவித்தனர். இதேவேளை கண்டி மாநகர சபை கூட்டத்திலும் இப்பிரச்சனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# வீதித் தடையை நீக்கக் கோரிக்கை

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள பொலிஸ் நிலையம் மீது கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு புலிகள் இயக்கத்தினர் திடீரென பஸ்ஸில் வந்து அதிரடித் தாக்குதலை மேற்கொண்டதன் பின் அவ்வீதி இன்றுவரை பொதுப் போக்குவரத்திற்காகத் தடை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

இதனால் நோயாளிகள், அலுவலர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் அலுவல்களுக்காகச் செல்லும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆகியோர் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. வாழைச்சேனைக்குச் செல்வோர் முன்னரிலும் பார்க்க 21/2 மைல் தூரமுள்ள சுற்றுப் பாதையைப் பயன்படுத்தியே வருகிறார்கள். கிராமப்புறங்களிலிருந்து வரும் நோயாளிகள்கூட வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்குச் சுற்றுப்பாதையினூடாகவே செல்ல வேண்டியிருக்கிறது. சமீபத்தில் வாழைச்சேனையில் நடந்த அசம்பாவிதம் ஒன்றில் காயப்பட்ட ஒரு நோயாளி சுற்றுப் பாதையினூடாக கொண்டுவரப்படும்போது இறந்துபோனார் என்று கூறப்படுகிறது.

எனவே இவ்வீதித் தடையால் அப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் எதிர்நோக்கும் கஷ்ட நிலைகள் குறித்து மட்டக்களப்பு மாவட்ட பா.உ. செய்யதலி ஸாஹிர் மௌலானா சமீபத்தில் கிழக்குமாகாண கொமாண்டர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா மற்றும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எடிசன் குணதிலக ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியதையடுத்து குறித்த வீதியை மிக விரைவில் பொதுப் போக்குவரத்திற்குத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்டது என்று பா.உ. 'முரசு'க்குத் தெரிவித்தார்.


## சாரதி தேவை

பிரபல பாதணி விநியோக கம்பனிக்கு சாரதிகள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தங்குமிட வசதியும் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்

சிட்டி ஷூ கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
129, காலி வீதி, பள்ளிமுல்லை.
பாணந்துறை.

## திருமண மங்கள சேவை

திருமண வயதில் உள்ள ஆண்களினதும், பெண்களினதும் ஜாதகங்கள் எம்மிடமுண்டு. வயது, தகுதி, தொழில், குடும்பப்பாரம்பரியம்(ஜாதி) போன்ற அடிப்படையில் நீங்கள் விரும்பும் தரத்தில் முறைப்படி ஜாதகப்பொருத்தம் பார்த்து நிச்சயிக்க விரும்பும் பெற்றோர் தொடர்புகொள்ளவும்.

S.P.S. சேகரக் குருக்கள்
405, பசறை வீதி, விஹாரகொட–பதுளை

## ஜேசு ரவல்ஸ் பிறைவேட் லிமிடெட்

எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருவது!
19.07.97 முதல் கொழும்பு- மட்டக்களப்பு ஆசனப் பதிவு செய்யும் இடம் கீழ்காணும் விலாசத்திலுள்ள அஜந்தா ஹோட்டெலுக்கு (1ம் மாடி) மாற்றப்பட்டுள்ளது. என்பதை அறியத் தருகின்றோம்.

அஜந்தா ஹோட்டெல் (லிமிட்டெட்)
கோட்டை புகையிரத நிலையம் முன்
முதலாம் மாடி,
125, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு-11
டெலி:.போன்-328089, 332617

## BRIGHT EXTERNAL STUDY UNIT
அஞ்சல் வழி கல்வித்துறை நிறுவனம்

Bright Book Centre (Pvt) Ltd கல்விப் பணியில் அஞ்சல் கல்வித் துறையில் Bright External Study Unit கீழ் தபால் மூலம் கல்வித்திட்டம் நடைபெற்று வருகிறது.

90 நாட்களில் ஆங்கிலக்கல்வி
90 DAYS SPOKEN ENGLISH

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் நவீன உளவியல் அணுகுமுறையின் கீழ் மாணவர்கள் உவந்து ஏற்கக்கூடிய முறையில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஏழு வருட காலமாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்துச் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

பாடநூல்கள் யாவும் இருபத்தொராம் நூற்றாண்டின் எதிர்பார்க்கைக்கு ஏற்ற வகையில் நவீன பாணியில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

கட்டணம் இக்கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே. வெளிநாட்டு மாணவருகளுக்கு US $ 25.00 பாடக் கட்டணத்தை The Director - B.B.C எனும் பெயருக்கு Sea Street SPO மாற்றக்கூடியதாக காசுக் கட்டளையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும்.

APPLICATION FORM

Name :..........................................

Address :..........................................

Date of Birth :..........................................

M.O. & Date :..........................................

Date:..........................................

..........................................
Signature of Applicant

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
BRIGHTEXTERNALSTUDYUNIT
Colombo Central Super Market Complex,
P. O. BOX 162, COLOMBO - 11. T.P. 434770



33வருடங்களாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

## மலையாள மாந்திரீகம்

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD,
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
.:.பக்ஸ் இல–342464
பேஜர் சென்டர் இல– 588407
தொடர்பு கொண்டு இல– 972
இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET, NO.....
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.

நேரில் சந்திக்க-
காலை 9.00 முதல் 12.00 வரை
மாலை 3.00 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மென்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை
கீழ்காணும் இடங்களில் சந்திக்கலாம்.

கல்முனை T.M.Mயில் ஆகஸ்ட் 9,10,11,12ம் திகதிகளிலும்
(கல்முனை T.P.065/ 29329)
ஓட்டமாவடியில் ஆகஸ்ட் 5,6ம் திகதிகளில்
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.
கொழும்பில் அகமட் டூரிஸ்ட் இன்னில்
ஆகஸ்ட் 19 முதல் 31 வரையும் சந்திக்கலாம்.
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யலாம்.

கொழும்பு நாட்களில் மட்டும்–078/71101
போன்:436383,438390

## தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக தெய்வீக சேவை

THEYVIGA SAKTHY CENTRE DIVINE MEDICAL AND ASTROLOGICAL SERVICES

GOVT. Regd. No: HA/04/BT/219

வாழ்க்கையில் ஏற்படும் காதல் (ஆண்-பெண்) பிரச்சினை, திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடை, தீய சக்திகளின் தொல்லை, கிரக தோஷம், வேண்டியவர்களை சேர்க்க, வேண்டாதவர்களை அகற்ற- இது போன்ற தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் எதுவானாலும் உடனுக்குடன் நிவர்த்தியளிக்கப்படும். கம்பியூட்டர் வடிவமைப்பில் ஜாதகம், காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப்பலனை அறிந்து கொள்ள-மட்டக்களப்பு பிரபல "பாலுசோதிடரை (வைத்தியர்)" நேரில் சந்திக்கமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். பொருட்களை தபாலில் (V.P.P) அனுப்பிவைப்போம். விரும்பிய குருதட்சனை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றது. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

| | |
|---|---|
| பாலு சோதிடர் S.A.M.P. | BALU SOTHIDAR- S.A.M.P. |
| தெய்வீக சக்தி நிலையம். | THEYVIGA SAKTHY CENTRE |
| கல்லடி அரசவிருதி வீதி. | BATTICALOA (P.O) |
| மட்டக்களப்பு. | SRI LANKA. |

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE

## ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

# தொடரும் கப்பல் மர்மம்!

## இந்திய ஆட்சேபனையும் இலங்கையின் விளக்கமும்!

ஸிம்பாப்வேயிலிருந்து புறப்பட்ட ஆயுதக் கப்பல் மர்மம் நீடிக்கிறது.

இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா, குறிப்பிட்ட கப்பல் இலங்கைக் கடற்பகுதியில் வைத்து கடத்தப்படவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் அப்படியொரு கப்பல் விவகாரமே கிடையாது என்று மறுக்கவில்லை.

கொழும்பு ஆங்கில வார இதழான 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ள தகவலின்படி, மே 24ம் திகதி கப்பல் புறப்பட்டிருக்கிறது.

சிம்பாப்வேயில் துறைமுகம் இல்லாததால் பக்கத்து நாடான மொஸாம்பிக்கில் உள்ள 'பெய்ரா' துறைமுகத்தில் இருந்து கப்பல் புறப்பட்டிருக்கிறது.

கப்பல் காணாமல் போனது தொடர்பாக கடற்படைத்தளபதி ஜூன் 18ல் கடற்படைத் தளங்களுக்கு செய்தி கொடுத்து உஷார் படுத்தியிருக்கிறார்.

ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இவ்வாரம் இலங்கை வருகிறார்கள். கப்பல் காணாமல் போன மர்மம் தொடர்பாக ஆராய்வார்கள் என்று 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

எமக்கு கிடைத்த சில தகவல்களும் சண்டே ரைம்ஸின் தகவல்களுடன் ஒத்துப் போகின்றன.

ஸிம்பாப்வே போன்ற நாடுகளில் இருந்து உள் தகவல்கள் கசிய பல சாத்தியங்கள் இருக்கின்றன. பணம் கொடுத்து உள் தகவல்களைப் பெறுவது சிரமம் அல்ல.

**ஸிம்பாப்வே ஒரு வறிய நாடு. அதன் மக்கள் தொகை ஏறக்குறைய 1 கோடியே 13 இலட்சம் பேர். இலங்கையை விடவும் கஷ்டநாடு. இப்போதுதான் தலையெடுக்க பிரயத்தனப்படுகிறது. சமீபத்தில் இளம் பெண்ணை திருமணம் செய்து சர்ச்சைக்குரியவரான ரொபேட் முகாபேதான் அந்த நாட்டின் அதிபர். அங்குள்ள மக் களின் சராசரி ஆயுட்காலமே 58 வயதுவரைதான்.**

இப்படியான ஒரு நாட்டில் இருந்து உள் விவகாரங்களை விலைக்கு வாங்குவது சிரமம் அல்ல.

அல்லது உள்ளேயே இருந்து சிலர் திட்டமிட்டு சுருட்டல் நடத்தக்கூடிய சாத்தியமும் இருக்கவே செய்கிறது.

மலிவான விலையில் மோட்டார் குண்டுகளை கொள்வனவு செய்யலாம் என்பதால்தான் ஸிம்பாப்வேயை இலங்கை நாடியிருக்கிறது.

32 ஆயிரம் மோட்டார் குண்டுகளும், 6 ஆயிரம் ஆட்டிலெறிக் குண்டுகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஒரு குத்து மதிப்பாக பார்த்தாலும் நூறு கோடி பெறுமதி.

இலங்கை அரசு இப்பேரத்தை இரகசியமாக நடத்தியிருந்தாலும், ஸிம்பாப்வேயின் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களால் தகவல்கள் கசிந்திருக்கலாம்.

அத் தகவல்களை புலிகள் பெற்று கப்பலைக் கடத்தினார்களா? அல்லது ஸிம்பாப்வேயில் உள்ள கில்லாடிகள் சேர்ந்து திட்டமிட்டு கப்பலைக் கடத்தினார்களா என்பதே கேள்வி.

புலிகளுக்கும் சர்வதேச ஆயுதத் தரகர்கள், வியாபாரிகள் ஆகியோரோடு தொடர்புகள் உள்ளன.

கம்பூச்சியாவில்கூட புலிகளின் இரகசியத் தளம் ஒன்று இருந்தது. அங்கிருந்து இயக்க நிதிக்கான வியாபாரத் தொடர்புகள், மற்றும் ஆயுதக் கொள்வனவு போன்றவற்றை புலிகள் மேற்கொண்டனர்.

புலிகளிடம் சொந்தமாக கப்பல்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு கப்பல்கள் பறிபோயின. ஒரு கப்பல் கிட்டு வந்தபோது இந்திய கடற்படையினரால் பிடிக்கப்பட்டது. இன்னொரு கப்பல் ஆயுதம் ஏற்றிவந்தபோது இலங்கைக் கடலில் வைத்து தாக்கியழிக்கப்பட்டது.

கப்பல்கள் சொந்தமாக இருப்பதால் கப்பல் கம்பனிகளுடனும் புலிகளுக்கு தொடர்புகள் இருக்கின்றன.

எனவே, ஸிம்பாப்வேயில் இலங்கை அரசு ஆயுதக் கொள்வனவு செய்யும் தகவல் இரண்டு வழிகளில் புலிகளின் காதுகளை எட்ட சாத்தியம் உண்டு.

**ஒன்று: ஆயுதத் தரகர்கள் மூலமாக.**

**இரண்டு: குறிப்பிட்ட ஆயுதங்களை ஏற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட கப்பல் கம்பனி மூலமாக; அல்லது அத் தகவல் அறிந்த ஏனைய கப்பல் கம்பனிகள் மூலமாக.**

தகவலறிந்த பின்னர் குறிப்பிட்ட கப்பலை மடக்கவும் இரண்டு வழிகள் உள்ளன.

**ஒன்று: குறிப்பிட்ட கப்பலின் கப்டன் உட்பட அதன் ஊழியர்களை விலைக்கு வாங்கி, கடலில் வைத்தே தமது கப்பலுக்கு சரக்குகளை மாற்றிக்கொள்வது; அல்லது கப்பலை தமது இரகசியத் தளத்துக்கு கொண்டுசெல்வது.**

**இரண்டு: நடுக்கடலில் வைத்து குறிப்பிட்ட கப்பலை வழிமறித்து ஆயுத முனையில் கடத்திச் செல்வது.**

இதுவரை கப்பல் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதனால் கப்பல் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம். அல்லது கப்பல் கப்டனே புலிகளுடன் ஒத்துழைத்து கப்பலை எங்காவது கொண்டு சென்றிருக்கலாம் என்று சந்தேகங்கள் நிலவுகின்றன.

புலிகள் காரணமில்லையெனில், என்ன நடந்திருக்கலாம்?

கப்பலில் ஏற்றப்பட்ட சரக்குகளை பிறிதொரு நாட்டுக்கோ அல்லது வேறு ஒரு சக்திக்கோ குறைந்த விலையில் தள்ளிவிட ஸிம்பாப்வேயில் உள்ள ஒரு சக்தி திட்டமிட்டிருக்கலாம்.

அல்லது குறிப்பிட்ட கப்பலுடன் தொடர்புடையவர்கள் ஸிம்பாப்வே அரசுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, வேறு யாருக்காவது கப்பல் சரக்குகளை நல்ல விலைக்கு கைமாற்றியிருக்கலாம்.

இலங்கைக்கு செல்லும் கப்பல் என்பதால், பழியை புலிகள்மீது போடலாம் என்ற துணிச்சலில் சரக்குகளை கைமாற்றும் திட்டம் போடப்பட்டிருக்கலாம்.

**ஆனால், இதில் உன்னிப்பாக நோக்க வேண்டிய விடயம் ஒன்றுண்டு.**

**கப்பலில் இருந்தவை மோட்டார் குண்டுகள். வேறு நவீன ஆயுதங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. உலகிலேயே இன்று ஷெல் யுத்தம் மிக மோசமாக நடைபெறும் நாடு இலங்கைதான்.**

**இலங்கை அரசின் படைகளுக்கும், புலிகளுக்கும்தான் இன்று மோட்டார் குண்டுகளின் அவசியம் இருக்கிறது.**

வன்னியில் படைகளுக்கெதிரான போரில் மோட்டார் குண்டுகளின் எண்ணிக்கை பெருவாரியாக பயன்படுத்தப்படுமானால் கூடுதல் சாதகம் புலிகளுக்கு ஏற்படும்.

**எனவே கப்பலைக் கடத்துவதற்கான அவசியமும் புலிகளுக்கு இருக்கிறது. அதற்கான வசதிகளும், சாத்தியமும்கூட அவர்களிடம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.**

இதேவேளை மற்றொரு சந்தேகமும் கிளப்பப்படுகிறது. ஸிம்பாப்வேயில் உள்ள தொடர்புகள் மூலமாக குறிப்பிட்ட சரக்குகளை விநியோகிக்கும் பொறுப்பை புலிகளின் கப்பல் கம்பனியே-வேறு பெயரில் பெற்றுக் கொண்டதா? என்பதுதான் அந்தச் சந்தேகம்.

ஏனெனில் குறிப்பிட்ட கப்பலின் பெயர் தொடர்பாகக் கூட பல குழப்பங்கள் நிலவுகின்றன. வெளிநாட்டில் உள்ள புலிகளின் கப்பல்கள் பல்வேறு கப்பல் கம்பனிகளின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை, இந்திய உளவுப் பிரிவுகள் முயன்றும்கூட வெளிநாடுகளில் உள்ள புலிகளின் கப்பல் கம்பனிகள் தொடர்பான தகவல்களை பெறமுடியவில்லை.

ஒரே கப்பலுக்குக்கூட பல பெயர்களை மாற்றிக்கொள்ளும் தந்திரமான ஏற்பாடுகளைக்கூட செய்யலாம்.

**எனவே பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல புலிகளின் கப்பலிலேயே இலங்கை அரசுக்கான மோட்டார் குண்டுகள் ஏற்றப்பட்டனவா? என்ற சந்தேகம் வலுவானதுதான்.**

ஏனெனில், இதுவரை குறிப்பிட்ட கப்பலைக் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது மேற்கண்ட சந்தேகத்தை ஆழமாக்குகிறது.

உள் சதியாக இருந்தால் என்ன, உடன்பட்டு நடந்த காரியமாக இருந்தால் என்ன, பலப்பிரயோகம் மூலமாக கடத்தலாக இருந்தால் என்ன-காரியம் முடிந்ததும் கப்பலும் ஊழியர்களும் விடுவிக்கப்பட்டே இருப்பர். குறைந்த பட்சம் கப்பலாவது கடலில் நின்றிருக்கும்.

**இனியும் கப்பலையே காணமுடியவில்லை என்றால், அல்லது கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் அது புலிகளின் கப்பல்தான் என்ற முடிவுக்கே செல்ல வேண்டியிருக்கும்.**

இல்லையெனில், குறிப்பிட்ட கப்பல் கண்டுபிடிக்கப்பட்டால்தான் மர்மம் துலங்கும். எனினும் ஸிம்பாப்வே போன்ற நாட்டால் போதிய தகவல்களைப் பெறமுடியுமா? ஸிம்பாப்வேக்குள்ளேயே ஆளை வைத்து விசாரணைகளை திசை திருப்பக்கூட பணம் பாயலாம். எனவே ஒருவேளை மர்மம் துலங்காமலேயே போகலாம்.

சர்வதேசப் பொலிசாரின் (இண்டர் பொல்) உதவி நாடப்பட்டிருப்பதாக தகவல். என்றாலும் இண்டர்பொலின் கண்ணில் கூட விரலைவிட்டு ஆட்டக்கூடிய சாமர்த்தியங்களும் இல்லாமலில்லை.

**ஆனாலும், இலங்கை அரசுக்குள்ளிருந்தோ, படை வட்டாரங்களுக்குள் இருந்தோ தகவல் கசிந்து கடத்தல் நடத்தப்பட்டதாக கருதுவது சரியாக இருக்காது. அப்படித் தகவல் பெறும் வசதி இருப்பின் மோட்டார் குண்டுகளைவிட பெறுமதியான ஆயுதங்கள் கொண்டுவரப்படும் தருணத்திற்காக 'ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும்' காத்திருந்து வலை விரிக்கப்பட்டிருக்கும். ஸிம்பாப்வேயில் இருந்துதான் கசிவு தொடங்கியிருக்கிறது என்றே கருத இடமுண்டு.**

ஆனாலும் கப்பல் கடத்தப்பட்டது புலிகளால் என்று தெரிந்தாலும், அல்லது புலிகளின் கப்பல்தான் தந்திரமாக ஏமாற்றி சரக்குகளை ஏற்றிக்கொண்டு மாயமாகி விட்டது என்று தெரிந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதோ, வெளியே சொல்வதோ இலங்கை அரசுக்கு ஒரு கௌரவப் பிரச்சனைதான்.

எனினும் பாராளுமன்றத்தில் இப்பிரச்சனையை எதிர்க்கட்சி பூதாகரமாகக் கிளறும். அடுத்த அவசரகால சட்ட விவாதத்தில் எதிர்க்கட்சிக்கு சொல்லக்கூடிய புத்திசாலித்தனமான பதிலை அரசு தயார் செய்தேயாக வேண்டும்.

ஆயுதம் ஏற்றிச் செல்லும் கப்பலை கடத்துவதும், தாக்குவதும் போரிடும் தரப்புக்களுக்கிடையிலான பலப்பரீட்சையின் ஒரு கட்டம்தான்; ஆனால் ஆயுத விற்பனையில் ருசிகண்ட நாடுகள் தமது நலன் கருதி இவ்வாறான செயல்களை கண்டிக்கலாம். கப்பலை விடு விக்குமாறோ, சரக்குகளை திருப்பிக் கொடுக் குமாறோ கோரலாம். அதனால்தான் புலிகள் உரிமை கோராதிருக்கிறார்களோ, என்று சந்தேகிக்க இடம் உண்டு.

இதற்கிடையே,கொழும்பில் உள்ள தூதரகத்திற்கு,குறிப்பிட்ட கப்பலை தாமே கடத்தியதாக புலிகளின் பெயரில் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. புலிகளின் கடிதத் தலைப்பில் அனுப்பப்பட்ட கடிதமல்ல அது.

கப்பல் காணாமல் போன தகவல் கசிந்தவுடன் அச் செய்தியை வெளியே கொண்டுவர வேறு யாராவது நடத்திய நாடகமாக அது இருக்கலாம். அல்லது புலிகளே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி இலங்கைக்கு ஆயுதம் ஏற்றிச்செல்லும் கப்பல்களை அச்சுறுத்த அத் தகவலை பகிரங்கப்படுத்த விரும்பியிருக்கலாம். தம்மால் கடிதம் அனுப்பப்படவில்லை என்று மறுக்கக்கூடியதாக கடிதத் தலைப்பை பயன்படுத்தாமலும் விட்டிருக்கலாம்.

எப்படியோ அவிழாத புதிராக கப்பல் மர்மம் நீடிக்கிறது. 'ஆயுதம் இங்கு வந்து சேர்ந்தால்தான் 'பணம் கொடுப்போம். எமக்கொன்றும் நஷ்டமில்லை' என்று அரசு சொன்னால்கூட, அந்த 38 ஆயிரம் குண்டுகளும் புலிகளிடம் சென்றிருந்தால், அவை இங்குள்ள புலிகளிடம் சேர்ப்பிக்கப்பட்டால் நிலமை விபரீதமாகும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் உள்ளூர அஞ்சாமல் இருக்க முடியாது.

■ ■

இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக இந்திய அரசு இலங்கையிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. செய்தியளவில் அந்த ஆட்சேபம் முக்கியத்துவமுள்ளதாக இருந்தாலும், அது ஒரு மேம்போக்கான ஆட்சேபம் மட்டும்தான்.

தமிழக மீனவர்களின் கொந்தளிப்பு, தமிழக அரசியல் கட்சிகள் பலவற்றின் கண்டனங்கள் தொடர்பாக தமிழக அரசு கவலையடைந்துள்ளது.

தமிழக அரசுக்கு இரண்டுவகையான கவலை. இந்த விடயம் பெரிதாகி, இலங்கை அரசுக்கெதிரான எதிர்ப்பு அலை தமிழகத்தில் ஏற்பட்டால் புலிகளுக்கும் சார்பான அலையாக அது மாறிவிடும். பின்னர் புலிகளும் உள்ளே வந்துவிடுவர். அது ஒரு கவலை.

ஏனைய கட்சிகளைவிட முந்திக்கொண்டு குரல் கொடுக்காவிட்டால், தமிழக மக்களிடம் அதிருப்தியை சம்பாதித்தாக வேண்டும். அதனால்தான் தமிழக முதல்வர் இலங்கை அரசை கண்டிக்கத் துணிந்தார். ஆனாலும் கடந்த காலத்தில் அவர் தெரிவித்த கண்டனங்கள் போல் அல்லாமல் சுருதி குறைந்த குரலில்தான் கண்டனம் கிளம்பியிருக்கிறது.

இந்திய பிரதமருக்கு-தனது நண்பரான கருணாநிதியையும் பாதுகாத்தாகவேண்டும், நட்புக்குரிய இலங்கை அரசையும் பாதுகாத்தாக வேண்டும்.

இந்தியப் பிரதமர் குஜ்ரால்தான்,இங்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே தேவையில்லை என்று சொல்லிவிட்டுப் போனவர்.

இந்திய வெளிவிவகார அமைச்சும், மற்றும் அதிகாரிகளும் இலங்கைப் பிரச்சனையில் முழுக்க முழுக்க இலங்கை அரசின் அணுகுமுறையை ஆதரிக்கின்றனர்.

இலங்கையிலோ, இந்தியாவில் தமிழ்நாட்டிலோ புலிகளுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் இந்திய அரசு கவனமாக உள்ளது.

கடல் ரோந்து, கண்காணிப்பு விடயத்திலும் இலங்கை-இந்திய கடற்படைகள் மத்தியில் தொடர்புகள் உள்ளன. புலிகளின் நடமாட்டம், புலிகளின் ஆயுதக் கப்பல் நடமாட்டம் போன்றவற்றில் பரஸ்பர தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படுவதாகவும் தெரிகிறது.

**எதிரிக்கு எதிரி நண்பன் என்றரீதியிலும், தனது நலன் என்ற வரையறைக்குள்ளும் நின்றபடிதான் இந்தியா-இலங்கை இனப்பிரச்சனையை இப்போதும் நோக்குகிறது.**

புலிகளோடு உள்ள பிரச்சனைக்காக இலங்கைத் தமிழர்கள்மீதான அனுதாபத்தையே இந்தியா கைவிட்டுள்ளது என்ற கூற்று சரியானதல்ல. இப்போது இலங்கை அரசின் நிலைப்பாடு இந்தியாவுக்கு பாதகமானதல்ல. எனவே இலங்கை அரசை பகைக்க வேண்டிய தேவை கிடையாது. தனது நலன் சார்ந்த இந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்த 'ராஜீவ் கொலையை' சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறது இந்தியா.

தமிழக பிரதான அரசியல் கட்சிகளும் மௌனமாக இருப்பது, தமிழகத்தில் அனுதாப அலை தணிந்தது போன்றவை இந்திய மத்திய அரசின் நிலைப்பாடுகளுக்கு சாதகமாக இருந்தன.

ஆனால் மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்ட சம்பவங்களால் பிரச்சனை வேறுவழியாக வெடித்திருக்கிறது. தமிழக மீனவர்கள் தாக்கப்படும் செய்திகள் தமிழக மக்களையும் ஆத்திரமூட்டியுள்ளன.

இறுதியாக தமிழக மீனவர்கள்மீது விமானத் தாக்குதல் நடந்ததை அடுத்தும், கடலில் வைத்து சுடப்பட்டதை அடுத்தும் தமிழக மீனவர்கள் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டனர்.

இந்நிலை தமிழக அரசுக்கும் நெருக்கடி. புலிகளுக்கும் சாதகமாகிவிடும். இலங்கை அரசுடன் இந்தியா நட்பாக இருப்பதையும் கேள்விக்குள்ளாக்கும் என்பதால் ஆட்சேபம் தெரிவிப்பதைவிட இந்திய அரசுக்கு வேறு வழியில்லை.

அந்த ஆட்சேபத்தின் பின்னர் கடந்த வாரம் இலங்கை அரசு தனது விளக்கத்தைச் சொல்லியிருக்கிறது. பலவீனமான அந்த விளக்கத்தை இந்தியா உடனே மறுக்காமல் விட்டமை இருநாட்டு அரசுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வைக் கோடிட்டுக் காட்டப்போதுமானது.

ஜூலை 17ம் திகதி தமிழக மீனவர்கள்மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அதனையும் இலங்கை அரசு மறுத்திருக்கிறது.

**மறுப்பது இருக்கட்டும், அந்த தாக்குதலுக்கும் புலிகள்மீது மறைமுக சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருப்பதுதான் மிகப் பலவீனமான வாதம். அதனை இந்திய அரசு ஏற்றிருப்பது, அவ்வாறான பதிலையே எதிர்பார்த்திருந்ததோ என்று யோசிக்கத் தூண்டுகிறது.**

இலங்கை அரசின்மீது இந்தியாவில் அதிருப்தி ஏற்படாமல் தடுப்பது இந்திய அரசின் நலன் சார்ந்த விடயமாகவும் உள்ளது. அங்கு அதிருப்தி ஏற்பட்டால் இலங்கை அரசுடன் நட்பாக இருப்பது கேள்விக்குள்ளாகும். தற்போதைய தலையிடாக் கொள்கையையும் தொடர முடியாது போகும்.


ஆக, இந்திய அரசின் ஆட்சேபனை, இலங்கை அரசின் மறுப்பு விளக்கம் எல்லாமே புரிந்துணர்வுள்ள இரு நண்பர்கள் மத்தியிலான நடப்புக்கள்தான். அதனால் இந்தியாவின் ஆட்சேபனை அதன் நிலைப்பாட்டில் மாற்றம் என்று எடுத்துக் கொள்ளக்கூடியதல்ல. ■





'தாண்டிக்குள தாக்குதலின் முன்னர் புலிகளின் அணிகள் அணிவகுத்து உறுதியுரை செய்து புறப்பட்டன' என்று முரசு செய்தி வெளியிட்டதல்லவா? தாண்டிக்குள சமருக்கு புறப்பட முன்னர் வன்னிக்காட்டில் உறுதியுரை ஏற்கும் காட்சியே இது.

# அதிரடி அய்யாத்துரை



**தமிழ்க் கட்சிகள் யாரைச் சந்தித்தாலும்**,சந்திக்கப்பட்டவருக்கு இலவச விளம்பரம் கிடைத்துவிடும். நல்ல பெயரும் இவர்களே தேடிக்கொடுப்பார்கள். இப்படித்தான் பாருங்கோ சமீபத்தில் வெளிநாட்டில் இருந்து வந்துபோனவரைச் சந்தித்த விடயத்திலும் பிய்த்துக் கொண்டு வந்தது அறிக்கைகள். ரெண்டு எழுத்தாருக்கு எதிராக அவர் தங்களுக்கு நடத்திய அரசியல் வகுப்பைப் பற்றிச் சொல்லாமல், கைதுகளை தடுக்கவும், அகதிகளை இரட்சிக்கவும் அவதாரம் எடுத்துவந்தவர்போல செய்தி சொல்லிப்போட்டினம். முதுபெரும் தலைவர்தான் சந்திப்பில் அவரது மனநிலை அறிந்து, அடிக்கக்கூடியதாக பந்துபோட்டாராம். வெளிநாட்டுக்காரரும் பவுண்டரி, சிக்ஸர் எண்டு விளாசிப்போட்டாராம். தங்கள் அணி தோற்கவேண்டுமென்று அபாரமாக ஆடியிருக்கினம்.

**வெளிநாட்டு பிரமுகரை** கௌரவிக்க நடந்த விருந்தில்கூட பச்சைக் கட்சியினருக்கு அழைப்பில்லையாம். கதிருக்கு நெருக்கமான பச்சைக் கட்சி பிரதிநிதி ஒருவர் மட்டும்தான் தனிப்பட்ட அழைப்பாக அழைக்கப்பட்டாராம். விருந்து நடந்தபோது தமிழ்க் கட்சித் தரப்பாரை அதிகாரத் தரப்பாருடன் சரிசமமாக உட்கார வைத்திருந்தார்களாம். சம இடம் கொடுக்கிறோம் எண்டு காண்பிக்கத்தான் அந்த ஏற்பாடு!

**கப்பல்களைத் தாக்கக்கூடாது** எண்டு அமெரிக்கா சொல்லியிருக்குது. மக்களுக்கு உணவு கொண்டுபோகும் கப்பல்களையும் மக்களுக்கான போக்குவரத்து கப்பல்களையும் தடுப்பதோ தாக்குவதோ பிழையான காரியம்தான். ஆனால் மறுதரப்பாரின் பிழைகளையும் சுட்டிக்காட்டியிருந்தால் முதுகில் தட்டிப் பாராட்டியிருக்கலாம். வன்னியில் உணவுத் தட்டுப்பாடு, போரில் உயிரபாயம் எண்டு எத்தனையோ விஷயங்களை அமெரிக்கா நினைத்தால் தடுக்கலாமே! ஏன் செய்யமாட்டோம் எண்டு நிற்கினம்?

**யாழ் குடாநாட்டில்** உள்ள பச்சை உடையினர் கடமை நேரம் தவிர்ந்த நேரங்களில் மத உணர்வுடன் சுறுசுறுப்பாக இயங்குகிறார்களாம். யாழ் நகரில் உள்ள நாகவிகாரையை புதுப்பித்ததுடன், யாழ்ப்பாணத்தின் பிரதான சந்திகள் தோறும் புத்தர் சிலைகள் துரிதகதியில் நிறுவப்பட்டு வருகின்றன. நாகவிகாரை வைபவத்தில் தமிழ்க் கட்சிகளும் பங்கு கொண்டனவாம்.

**தன்னை ஒரு** 'பத்திரிகை'யாளராக கருதிக்கொள்பவர் அவர். அவரது திறமைக்கும், எதையும் கண்டுபிடிக்கும் ஞானக் குணத்துக்கும் உதாரணங்கள் ஏராளம். உதாரணத்திற்கு ஒன்று-சில வருடங்களுக்கு முன்னர், புலிகளுக்குள் மாத்தையா பிரச்சனை எழுந்தபோது, கனடாவில் தமிழ் பத்திரிகையில் ஒரு விதமாகவும், கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் அதற்கு நேர்மாறாகவும் எழுதிக் கலக்கியவர். இதனால் கனடாவில் இருட்டடி விழுந்தது. யார் அடித்தது எண்டு தெரிந்தும், சக.பத்திரிகை ஒன்றுமீது அபாண்டமாகப் பழிபோட்டு கண்டுபிடிப்புத் திறன்காட்டியவர். அவரிடம் உள்ள மற்றொரு 'நற்குணம்'-எந்தப் பத்திரிகை நன்றாக வந்தாலும் நெஞ்சு பொறுக்காது. கனடா 'தாயகம்', 'பாரிஸ் ஈழநாடு' போன்றவற்றை பக்கம் பக்கமாக சாடி வாசகர்களை இவர் சலிக்க வைக்க, வாசகர்கள் இவரை சலிக்கவைத்ததால் பத்திரிகையை மூடிவிட்டு புலிகள்தான காரணம் என்று சொல்லிப்போட்டார். இப்போது 'முரசு' அவருக்கு கண்ணுக்குள் குத்துது. முரசு வெளியிட்ட விமர்சனம் ஒன்றை தவறான கோணத்தில் விளங்கிக்கொண்டு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் ஆய்வு செய்திருக்கிறார். முன்னர் இவர் நடத்திய பத்திரிகையில் முரசின் அரசியல் விமர்சனங்களை பக்கம் பக்கமாய் மறுபிரசுரம் செய்தார். இப்போது கட்டுரை எழுதவும் 'முரசு'தான் தேவைப்படுகிறது. அதற்காக அவரிடம் நன்றியை எதிர்பார்க்குமளவுக்கு அவர் பற்றித் தெரியாததல்ல முரசு. ஆனால் அவர் செய்யும் இலவச விளம்பரங்களுக்கு 'முரசு' தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. சுற்றிவளைப்பானேன் அவரது பெயர்: டி.பி.ஜெயராஜ. ஹி.ஹி.ஹி.

**யாழில் நீலக்கட்சி** அலுவலகத்தில் 'முரசு' மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டதாம். துரையப்பா உருவப் படத்தை திறந்துவைத்தார்களாம். காதிலை பூ கந்தசாமியாரின் கற்பனையை நிஜமாக்கிப்போட்டு 'முரசை' சாடலாமோ ஐயா?! உருவப்படத் திறப்பு விழாவில் ஒலித்த பாடல்தான் கலக்கலாம். "தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை. தன்மானம் ஒன்றேதான் எங்கள் மூச்சு.." என்று ஒலிபெருக்கியில் சத்தமாக வைச்சவையாம். மற்றொரு தகவல்; வேலை வாய்ப்பு விண்ணப்பங்களையும் சேகரிக்கினமாம். பார்த்தியளே முன்னேற்றத்தை! புல்லரிக்குதப்பா!

**'பதில் சொல்ல முடியாதவையைப் பற்றி விமர்சித்தல் அவதூறு'** இது கூட்டான கட்சியினர் விட்ட அறிக்கை. சமீபத்தில் வந்த வெளிநாட்டுக்காரர் முன்பாக, 'குமாரர்' கடிதம் எழுதியது பற்றி கிண்டலடித்தது மட்டும் நாகரீகமாக்கும்! பிறநாட்டார் முன் எம் நாட்டார் பற்றி, அதுவும் அதற்கு பதில்சொல்ல வாய்ப்பில்லாதவர் பற்றி பேசுதல் மட்டும் பழம்பெரும் நாகரிகமோ? எனக்கு தலை சுற்றுது.

**ஒரு பொன்மொழி.**

*"நன்றாகப் பேசுவது*
*நல்லதுதான்—ஆனால்*
*நன்றாகச் செய்வது*
*அதனிலும் நல்லது!"* **(கிளார்க்)** ■

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# கந்தசாமி போனது எங்கே?

# கட்டளையும் — கடத்தலும்

அரசியல் தொடர்

## இரவுக் கடத்தல்

**1988** ஜூன் மாதம் 20ம் திகதி யாழ் குடாநாட்டில் ஒரு பரபரப்பான செய்தி வெளியாகியது.

அதற்கு முதல்நாள் இரவு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழக செயலாளர் கந்தசாமி கடத்தப்பட்டிருந்தார்.

நல்லூரில் உள்ள வீடொன்றில் இருந்து இரவோடு இரவாக அவர் கடத்திச் செல்லப்பட்ட செய்தி மறுநாள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் நிதி உதவிகளுடன் அகதிகளுக்கான புனர்வாழ்வு வேலைகளை ஆரம்பித்தார் கந்தசாமி.

TRRO என்று சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஸ்தாபகரும் அவர்தான்.

1988ம் ஆண்டு முதல் வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வுத் திட்டங்களில் கவனம் செலுத்துவதில் நேரடியாகவே ஈடுபடத் தொடங்கினார். அதற்கு முன்னர் இலண்டனில் இருந்த கந்தசாமி, தனது இலண்டன் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளிவைத்துவிட்டு நாடு திரும்பியிருந்தார்.

**போராளி இயக்கங்களுடனும் கந்தசாமிக்கு தொடர்புகள் இருந்தன. புலிகள் இயக்கத்தினருக்கும் கந்தசாமியூடாக சில உதவிகளும் கிடைத்தன.**

புலிகள் இயக்கத்தில் கிட்டுவுடன் கந்தசாமிக்கு நல்லறவு இருந்துவந்தது.

ஆயினும் கந்தசாமி கடத்தப்பட்ட போது புலிகள் இயக்கத்தினர்மீதே சந்தேகம் விழுந்தது.

கந்தசாமியின் நண்பர்கள் புலிகள் இயக்கத்தினருடன் தொடர்பு கொண்டனர். 'கந்தசாமி கடத்தலுக்கும் தமக்கும் தொடர்பில்லை' என்று புலிகள் மறுத்தனர்.

முன்னர் புலிகள் இயக்கத்தினால் கடத்தப்பட்ட கடத்தல் சம்பவங்களையும் புலிகள் உடனடியாக மறுத்திருந்தமையால், கந்தசாமி விடயத்தில் புலிகள் சொன்ன மறுப்பை முதலில் யாருமே நம்பவில்லை.

**ஆனால் கந்தசாமி சட்டத்தரணி சேவியர் உட்பட தனது நண்பர்களுக்கு தனது உயிருக்கு அபாயம் நேரலாம் என்றும், அப்படி ஏதாவது நேருமானால் அதற்கு ஈரோஸ் இயக்கத்தினரே காரணமாக இருப்பார்கள் என்றும் தெரிவித்திருந்தார்.**

திரு.கந்தசாமி தனது புனர்வாழ்வு நடவடிக்கைகளை எப்போது தொடங்கினாரோ அப்போதிருந்தே ஈரோஸ் இயக்கத்தினருக்கும் அவருக்கும் இடையிலான முரண்பாடு தோன்றிவிட்டது.



சட்டத்தரணி கந்தசாமி

## ஈரோஸ் நிலைப்பாடு

*அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தொடர்பாக ஈரோஸ் ஆரம்பத்தில் இருந்தே சந்தேகம் கொண்டிருந்தது.*

**அத்தகைய தொண்டர் நிறுவனங்கள் ஊடாக போராட்டத்துக்கு எதிரான சக்திகள் ஊடுருவக்கூடும் அந்த நிறுவனங்களுக்கு நிதி வழங்குவற்கு பிரதியுபகாரமாக தமக்கு தேவையான தகவல்களை அவற்றின் மூலமாக பெற்றுக் கொள்ள முயலலாம். அது' மட்டுமல்லாமல் நிதி உதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சாத்தியங்களும் இருக்கின்றன என்று ஈரோஸ் கருதியது.**

நான்கு இயக்க கூட்டமைப்பு இருந்த போது (ஈ.என்.டி.எல்.எஃப்.) ஈரோஸ் மேற்கண்ட கருத்தை தெரிவித்திருந்தது.

வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகள் போன்றவற்றில் ஈடுபடும் தொண்டர் அமைப்புக்கள் நான்கு இயக்க கூட்டமைப்பின் கண்காணிப்பின்கீழேயே இயங்க அனுமதிக்கவேண்டும். அவற்றை தன்னிச்சையாக செயற்பட அனுமதித்தால் இயக்கங்களுக்கும், போராட்டத்துக்கும் எதிரானவையாக அவை மாறலாம். அந்த நிறுவனங்கள் என்ன செய்கின்றன. எங்கிருந்து நிதி உதவி பெறுகின்றன போன்ற தகவல்கள் நான்கு இயக்க கூட்டமைப்புக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று ஈரோஸ் தலைவர் பாலகுமார் கூறினார்.

பாலகுமாரின் கருத்தை அப்போது புலிகளும் ஏற்றுக்கொண்டனர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக கூட்டமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்ட ரமேசும் அதனை ஏற்றுக்கொண்டார். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபா அக்கருத்தை ஏற்க முடியாது என்று கூறிவிட்டார். அதனால் நான்கு இயக்க கூட்டமைபபு அவ்விடயத்தில் பொது முடிவை மேற்கொள்ளவில்லை.

**உண்மையில் சில தொண்டர் நிறுவனங்கள் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.போன்றவற்றுடன் தொடர்பு வைத்திருந்தன. அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள சில இலங்கைத் தமிழ் பிரமுகர்கள் புனர்வாழ்வு உதவிகள், நிதி வழங்கல் என்ற பெயர்களில் இயக்கங்களுடனும், போராட்டத்துடனும் தொடர்பு கொள்ள முயன்றனர்.**

## அமெரிக்க எதிர்ப்பு

அப்போது இயக்கங்கள் மத்தியில் அமெரிக்க எதிர்ப்பு தீவிரமாக இருந்தது. அமெரிக்காவை 'சர்வதேச விடுதலைப் போராட்டங்களின் கொலைகாரன்' என்றே கருதினார்கள்.

அதனால் அமெரிக்காவில் இருந்த சில இலங்கைத் தமிழ் பிரமுகர்கள் தம்மை அமெரிக்க ஆதரவாளர்கள் என்று காட்டிக் கொள்ளாமல், அமெரிக்க அரசின் நலன்களுக்காக மறைமுகமாகச் செயற்பட்டனர்.

அமெரிக்கர்களான அலன் தம்பதியினரை அமெரிக்க சி.ஐ.ஏ உளவு நிறுவனத்தினர் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கடத்திச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

இக் கடத்தலின் பின்னர் இலங்கைத் தமிழர்கள் சிலர் மூலமாக அமெரிக்க உளவு நிறுவனம் தனது செயற்பாடுகளை தொடர்வதாக சந்தேகிக்கப்பட்டது.

ஈரோஸின் சந்தேகம் திரு.கந்தசாமிமீது திரும்பியது. கந்தசாமி கூட்டணியின் தலைவர்களுக்கும் நெருக்கமானவர்.

ஈரோசுக்கும் கந்தசாமிக்கும் இடையிலான பிரச்சனையைத் தீர்த்துவைக்க முன்னாள் யாழ் எம்.பி யோகேஸ்வரன் முயற்சி செய்தார். அப்போது யோகேஸ்வரன் சென்னையில் தங்கியிருந்தார்.

யோகேஸ்வரனை சந்தித்த பாலகுமார் கந்தசாமிமீதான தமது குற்றச்சாட்டுக்களை கூறினார்:

"திரு.கந்தசாமி புனர்வாழ்வுப் பணியோடு மட்டும் நிற்கவில்லை. வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடபகுதியில் இயக்கங்களின் செயற்பாடுகள் உட்பட அங்கு நடைபெறும் சம்பவங்கள் தொடர்பான ஒரு தின அறிக்கையை தயாரிக்கிறார். அதற்கான தகவல்களை திரட்டும் நபர்களைக் கொண்ட செயற்பாட்டு திறன்மிக்க அமைப்பு அவரிடம் உண்டு.

கோண்டாவிலில் உள்ள ஒரு வீட்டில் இயக்க உறுப்பினர் ஒருவர் சென்று சோற்றுப் பார்சல் கேட்ட தகவல்கூட உடனடியாக அவருக்கு தெரியவந்துவிடுகிறது. ஆவணப்படுத்தல், அதற்கான தகவல் திரட்டல் என்பவற்றில் கந்தசாமி அசகாய சூரர். அவரது தின அறிக்கை சில வெளிநாட்டு உளவு நிறுவனங்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்படுகின்றன" என்று பாலகுமார் சொல்லியிருக்கிறார்.

அனைத்தையும் செவிமடுத்த யோகேஸ்வரன் திரு.கந்தசாமி தொடர்பான தனது குற்றச்சாட்டுக்களில் சிலவற்றை ஏற்றுக்கொண்டதாகவும், அது தொடர்பாக அவர் முன்னரே அறிந்திருந்ததாகவும் பாலகுமார் பின்னர் தெரிவித்திருந்தார்.

எப்படியிருந்தபோதும் திரு.கந்தசாமிக்கு ஈரோஸ் இயக்கத்தால் தீங்கிழைக்கப்படக்கூடாது என்றே யோகேஸ்வரன் மிகவும் வலியுறுத்தி கேட்டுக்கொண்டார்.

## திரைமறைவு நாடகம்

இதன் பின்னர்தான் அதிர்ச்சியான திரைமறைவு நாடகத்திற்குள் நாம் பிரவேசித்தாக வேண்டியிருக்கிறது.

புலிகளின் மறுப்பை முதலில் நம்ப மறுத்தபோதும், திரு.கந்தசாமி தன் நண்பர்களுக்கு தெரிவித்த கருத்துக்கள், கடிதங்கள் மூலமாகவும், விசாரணைகள் மூலமாகவும் சந்தேகம் ஈரோஸ் மீது திரும்பியது.

இந்தியப்படையுடன் நெருக்கமான நட்பு ஈரோசுக்கு இருக்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாகாண அரசுடனும் ஈரோசுக்கு பிரச்சனை. புலிகளின் நண்பர்கள் என்று ஈரோசை துரத்தித் திரிந்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

மாகாணசபைத் தேர்தலில் வடக்கில் சுயேட்சைக் குழுவொன்றை நிறுத்த ஈரோஸ் மறைமுகமாக முயற்சி செய்ததையும் முன்பு குறிப்பிட்டிருந்தேன். அந்த விடயமும் வெளியே தெரிந்துவிட்டது. இம் முயற்சி தோல்வி கண்டதுடன், சுயேட்சைக் குழுத் தலைவராக போட்டியிட முன்வந்த சிவஞான சுந்தரத்தையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். சுட்டுக் கொன்றிருந்தது.

இவ்வாறான நெருக்கடி நிலையில் கந்தசாமியை கடத்த ஈரோஸ் துணியுமா? அப்படிச் செய்தால் இந்தியப் படை அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தம்மை நசுக்கிவிடும் என்று ஈரோஸ் நினைத்திருக்காதா? என்று ஒரு சாரார் சந்தேகப்பட்டனர்.

அது நியாயமான சந்தேகம்தான். ஆனால் கந்தசாமியை கடத்தியதும் ஈரோஸ் தான்!

எப்படி அந்த துணிச்சல் வந்தது?

அங்கேதான் இருக்கிறது விஷயம்.

**கந்தசாமியைக் கடத்தச் சொன்னது இந்திய உளவுப்பிரிவான 'றோ'.**

காரணம் என்ன?

உளவுப் பிரிவுகளுக்கு இடையிலான போட்டியின் ஒரு கட்டம் அது.

திரு.கந்தசாமி வெளிநாட்டு உளவு நிறுவனங்களுக்கு தின அறிக்கைகளை அனுப்புவதாக சந்தேகித்தது 'றோ'.

இந்தியப் படையோடு நெருக்கம் இல்லாததுபோல வெளியே தெரிந்தாலும் 'றோ' வுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தது ஈரோஸ். 'றோ' உயர் அதிகாரியான சந்திரன் என்பவர் ஈரோஸ் தலைவர்களில் ஒருவரான சங்கர் ராஜியுடன் நெருக்கமான தொடர்பில் இருந்தார். திரு.சந்திரன் தமிழ்நாட்டுக்காரர். தஞ்சாவூரைச் சேர்ந்தவர். அவர்தான் போராளி இயக்கங்களை 'றோ' சார்பாக கையாண்டுகொண்டிருந்தார்.

யாழ் குடாநாட்டில் ஆறு இடங்களில் அப்போது ஈரோஸ் முகாம்கள் இருந்தன. பிரதான முகாம் நல்லூர் கோவில் வீதியில் இருந்தது.

'றோ' சொன்னதால்தான் ஈரோஸ் துணிந்து கந்தசாமியில் கைவைத்தது.

## எச்சரிக்கை

கடத்தலுக்கு முன்பாக மூன்று தடவைகள் ஈரோசால் கந்தசாமி எச்சரிக்கப்பட்டார்.

ஈரோஸ் சார்பாக சென்று கந்தசாமியை சந்தித்து எச்சரித்தவர் ரவி என்றழைக்கப்படும் முருகதாஸ். ரவிதாஸ் என்றே கந்தசாமியிடம் அவர் தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

ஜூலை 19 இரவு கந்தசாமி தங்கிருந்த வீட்டின் கதவு தட்டப்பட்டது. ரவி உட்பட ஆறுபேர் ஆயுதங்களுடன் நிற்பதைக் கண்டார் கந்தசாமி.

'விசாரணைக்காக தம்மோடு வருமாறும், பின்னர் திருப்பிக் கொண்டுவந்து விட்டுவிடுகிறோம்' என்று ரவி சொன்னார்.

இனிமேல் திரும்பியே வரப்போவதில்லை என்று தெரியாமலேயே அவர்களுடன் புறப்பட்டுச் சென்றார் கந்தசாமி.

சுன்னாகத்தில் உள்ள ஈரோஸ் முகாமில் வைத்து கந்தசாமி விசாரிக்கப்பட்டார். அங்கேயே தடுத்துவைக்கப்பட்டார்.

வெளியே கந்தசாமி கடத்தலுக்கு எதிரான கண்டனங்கள் பரவலாக எழத் தொடங்கின. இந்தியப் படையிடம் பல பிரமுகர்கள் முறையீடு செய்தனர்.

இந்தியப் படையினர் நினைத்திருந்தால் உடனடியாக யாழ் குடாநாட்டில் இருந்த ஈரோஸ் முகாம்கள் அனைத்தையும் முற்றுகையிட்டு சோதனை நடத்தியிருக்கலாம்.

அவ்வாறு செய்திருந்தால் கந்தசாமி உயிரோடு மீட்கப்படிருக்கலாம். ஈரோசின் சுன்னாகம் முகாம் இந்தியப் படையினருக்கும் தெரிந்த முகாம்தான்.

ஆனால் இந்தியப்படை அசையவில்லை. காரணம் மேலிருந்து கிடைத்த உத்தரவு.

இதற்கிடையே இந்தியாவில் இருந்த திரு.கந்தசாமியின் நண்பர்கள் மூலமாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்திய முன்னாள் நீதிபதி கிருஷ்ணய்யர் வேண்டுகோள் விடுத்தவர்களில் முக்கியமானவர்.

ஈரோஸ்தான் கடத்தியது என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்தபோதும், மற்றொரு கதை பரவியது.

'புலிகள் சொல்லித்தான் ஈரோஸ் கந்தசாமியைக் கடத்தியது' என்பதுதான் அந்தக் கதை. ஈ.பி.ஆர்.எல்.எஃப். சேர்ந்து கட்டிவிட்ட கதை அது.

உண்மையில் நடந்தது என்ன தெரியுமா? கந்தசாமியை கடத்தியது ஈரோஸ்தான் என்பதே முதலில் புலிகளுக்கும் தெரியாது. பின்னர் தாமதித்துதான் புலிகளே அதனை அறிந்துகொண்டனர்.

ஈரோசுடன் பேசி கந்தசாமி விடுதலைக்கு உதவுமாறு புலிகளுக்கு நெருக்கமான கந்தசாமியின் நண்பர்கள் கேட்டனர். கிட்டுவும் பிரபாகரனிடம் வலியுறுத்தியிருக்கலாம் என்று கூறப்பட்டது. ஆனால் பிரபாகரனின் அணுகுமுறை மாறுபட்டது. தாங்கள் செய்யாத ஒரு காரியமாக இருப்பினும், வேறு ஒரு இயக்கம் செய்யும் காரியம் சரியாக இருந்தால் அதனை கண்டிக்கும் பழக்கம் இருப்பதில்லை. அதுமட்டுமல்லாமல் நட்பாக இருக்கும் இன்னொரு இயக்கத்தின் முடிவுகள், நடவடிக்கைகளில் தலையிடுவதும் இல்லை.

நான்கு இயக்க கூட்டமைப்பில் புலிகள் இருந்தபோதுதான் கூட்டணி எம்.பிகள் தர்மலிங்கமும், ஆலாலசுந்தரமும் ரெலோவால் கொல்லப்பட்டனர். உடனடியாக புலிகள் மீதே சந்தேகம் ஏற்பட்டது. அதனால் புலிகள் உடன் மறுப்புத் தெரிவித்தனரே தவிர, ரெலோதான் செய்தது என்று தெரிந்து கூட அதனை வெளியே பேசவில்லை.

கூட்டமைப்புக் கூட்டத்தில் அது தொடர்பாக பிரபாகரனிடம் கேட்டபோது, ரெலோ தலைவர் சிறீசபாரத்தினத்தை பார்த்து சிரித்தபடியே 'என்ன சிறீ நீங்கள்தான் என்று கதை வருகுது?' என்றார் பிரபாகரன். சிறீசபாரத்தினம் மறுத்தார். அத்தோடு அதுபற்றிய பேச்சை நிறுத்திக்கொண்டார்.

புலிகள் இயக்கம் சார்பாக கலந்து கொண்ட இராசநாயகம் பின்னர் ஒரு கட்டத்தில் "யார் செய்தது என்பது எங்களுக்குத் தெரியும் ஆனால் நாங்கள் வெளியே சொல்லமாட் டோம்" என்றார்.

கந்தசாமி கடத்தப்பட்டது ஈரோசால் என்று தெரிந்ததும், ஈரோஸ் தலைவர் பாலகுமாரிடம் பொட்டம்மானை அனுப்பினார் பிரபாகரன். அப்போது யாழ்மாவட்ட புலிகளின் தளபதியாக இருந்தது பொட்டம்மான்தான்.

கந்தசாமி தமது இயக்கத்துக்கு சில உதவிகள் செய்தவர் என்ற ரீதியில், அவரது கடத்தல் தொடர்பாக ஈரோசுடன் பேசிப் பார்க்குமாறும், ஆனால் கடுமையான நிலை எதுவும் எடுக்கவேண்டாம் என்று பொட்டம்மானிடம் பிரபாகரன் கூறியனுப்பினார்.

கந்தசாமி கடத்தலுக்கான காரணத்தை பாலகுமார் பொட்டம்மானிடம் கூறினார். ஆனால் 'றோ'வுக்குள்ள தொடர்பை மட்டும் சொல்லாமல் மறைத்துவிட்டார்.

"இந்த விடயத்தில் உங்கள் முடிவுகளில் நாங்கள் தலையிடமாட்டோம்" என்று கூறிவிட்டு பொட்டம்மான் சென்றுவிட்டார்.

## இறுதிக் கட்டம்

கந்தசாமி கடத்தலை கண்டித்து பரவலான கண்டனங்கள் எழுந்து வருகின்றன. ராஜீவ்காந்திவரை பிரச்சனை சென்றுவிட்டது. இந்தியப் படை இதில் ஒன்றும் செய்யாமல் இருப்பதாகவும் குறைகூறப்பட்டது.

எனவே வேறு வழியின்றி இந்தியப்படை ஈரோஸ் முகாம்களில் சோதனையிட தயாரானது. சோதனை நடவடிக்கையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சிலரும் உடன் செல்லவேண்டும் என்று முடிவானது.

ஆனால் இத் தகவல் முன்கூட்டியே ஈரோஸ் தலைவர் பாலகுமாருக்கு சொல்லப்பட்டுவிட்டது.

உடனே பாலகுமார் சுன்னாகம் முகாமுக்கு தகவல் அனுப்பினார்.

**"கந்தசாமியை போட்டுவிடுங்கள்! உடலை மறைத்துவிடுங்கள்"**

அன்று ஜூலை 29ம் திகதி. கந்தசாமி கடத்தப்பட்ட 10வது நாள்.

**சுன்னாகம் முகாமில் அவர் உயிருக்கு விடை கொடுக்கப்பட்டது.**

**அவரது உடலை அந்த முகாமின் மலசலக்கூட குழியில் போட்டு மூடினார்கள்.**

அதன்பின்னர்தான் இந்தியப் படையினர் ஈரோஸ் முகாம்களை சோதனையிட்டனர். சுன்னாகம் முகாமும் சோதனையிடப்பட்டது. எல்லாமே மேலோட்டமான சோனைதான்.

இந்தியப்படையினர் நட்பு முறையில்தான் நடந்துகொண்டனர். முகாமின் அறைகளுக்குள் எட்டிப் பார்த்துவிட்டும் போய் விட்டார்கள்.

இதன்பின்னர் ஈரோஸ் ஒரு அறிக்கை விட்டது;

**"சிறந்த சமூகத் தொண்டரும், அகதிகள் மீது கரிசனை உள்ளவருமான திரு.கந்தசாமியை கடத்தியவர்கள் அவரை விடுதலை செய்யவேண்டும். இன்றுள்ள சூழலில் தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவரை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்"**

திரு.கந்தசாமி ஒரு சட்டத்தரணியாவர். பலியாகும்போது அவரது வயது 58. யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர். கொழும்பில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கணிதப் பட்டதாரியானார். பின்னர் சட்டத்தரணியாக சித்தியெய்தியவர். 'கந்தா' என்று நண்பர்களால் அழைக்கப்பட்டார்

திரு.கந்தசாமி தொடர்பாக ஈரோஸ் கூறிய குற்றச்சாட்டுக்கள் சரியானவையா இல்லையா என்பதையிட்டு முடிவு செய்ய எம்மிடம் போதிய தரவுகள் இல்லை.

**ஆனால் கந்தசாமியின் சில பங்களிப்புக்கள் மறக்கமுடியாதவையாகும். யாழ்ப் பாணத்தில் இருந்து சற்றடே ரிவியூ ஆங்கிலப் பத்திரிகை வெளிவந்தமைக்கு மூல காரணமானவர்களில் அவரும் ஒருவர்.**

## சுதந்திரப் பத்திரிகை

பத்திரிகை தொடர்பான அவரது கொள்கை இன்றும் என்றும் நினைவில் கொள்ளத்தக்கதாகும். அதனை இத் தொடர் வெளியாகும் முரசில் பிரசுரிப்பது சாலவும் பொருத்தமானது என்று கருதுகிறேன்.

**"இது அரசியல் பத்திரிகையாகவோ, அல்லது ஒருபுடைச் சார்பினதாகவோ அமையும் நோக்கமுடையதன்று. தமிழர்களின் உரிமைகள், இந்த நாட்டில் இன உறவுகள் என்பவை பற்றிய சகல கருத்துக்களும் வெளிப்படுத்தற்குரிய அரங்காகவே இது அமையும். இருப்பினும் குறுகிய நோக்கமுடையதாக இருக்காது. பத்திரிகைப் படைப்பின் எழுத்து நடை தனித்தன்மை வாய்ந்ததாயினும், அணுகுமுறை தாராளமும், தூய்மையும் கொண்டதாக இருக்கும்.**

**நாம் பத்திரிகையின் சுதந்திரத்தைப் பேணுவதில் மிகுந்த கவனமுடையவர்களாக இருக்க வேண்டும். இச் சுதந்திரம் நமது கருத்துக்கொவ்வாததை மறைப்பதைவிட முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுவதன் மூலமே எய்தப் பெறலாம்"**

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் தொடர்பாக கடத்தப்படுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் பின்வருமாறு எழுதியிருந்தார்;

**"சுதந்திரமான அமைப்பாக நம்மால் இயங்கமுடியாவிட்டால் அதனை மூடிவிடுவதே உகந்தது."**

இவ்வாறான கருத்துக்கள் தூய்மையான இதயங்களில் இருந்துதான் எழமுடியும். அந்த வகையில் கந்தசாமி தொடர்பான ஈரோசின் மதிப்பீடு சரியானதா என்பது சந்தேகத்துக்குரியதாகின்றது.

**கந்தசாமி கடத்தலில் நேரடியாக பங்குகொண்டவர்கள் ஆறுபேர்.**

ரவி, நரேஸ், தாஸ், டேவிட், வவுனியா மாமா, ஜோசப்.

இவர்களில் ரவி மட்டுமே இப்போது உயிருடன் இருக்கிறார். புலிகள் இயக்கத்தில் இணைந்து தமிழீழ பொருளாதார ஆய்வு நிறுவனப் பொறுப்பாளராக இருக்கிறார். நரேஸ் கடற்புலிகளில் இணைந்து மோதலில் பலியானார். தாஸ், டேவிட் இருவரும் ஈரோஸ்மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். பண்டத்தரிப்பில் நடத்திய தாக்குதலில் பலியானார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். வவுனியாவில் 9 ஈரோஸ் உறுப்பினர்களை சுட்டுக் கொன்றபோது, வவுனியா மாமாவும், ஜோசப்பும் அதில் பலியானார்கள்.

'றோ'சொல்லித்தான் கந்தசாமியை ஈரோஸ் கடத்தியது என்பதை அறிந்த பின்னர் புலிகள் தமது அதிருப்தியை பாலகுமாரிடம் தெரிவித்திருந்தனர். றோவிடம் ஈரோஸ் பயிற்சி பெறுவதை கண்டித்தும் புலிகளால் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது.

(தொடர்ந்து வரும்)

## அலசுவது- இராஜதந்திரி

# அரங்கேற்றப்பட்ட இராஜதந்திர நாடகம்!

## பிரதான பாத்திரம் வகித்த அவுஸ்திரேலிய அமைச்சர்!

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு முட்டுக்கட்டைகள்!

இலங்கையில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் கடந்த வாரங்களில் இடம்பெற்றிருந்தன.

கடந்த ஆண்டில் (1996) இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக உலகக்கிண்ண கிரிக்கெட் பந்தயத்தை நடத்தியிருந்தன.

தடல்புடலாக நடைபெற்ற இலங்கை உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் போது இலங்கையிலும் சிலபந்தயங்கள் விளையாடுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

அப்பந்தயங்களுக்கென அவுஸ்திரேலிய அணியும், இலங்கை வரும் விதத்தில் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

ஆனால் இலங்கையில் ஏற்பாடாகியிருந்த பந்தயங்களில் விளையாடுவதற்கு அவுஸ்திரேலிய அணி மறுப்புத் தெரிவித்திருந்தது.

"கொழும்பு நகர வீதிகளில் நடந்து சென்றால் நான் குண்டு வெடிப்பொன்றில் சிக்க நேரிடும்" என்று அவுஸ்திரேலியாவின் பிரபல சுழல் பந்து வீச்சாளரான ஷேன் வோர்ன் அன்று (Shane Warne) குறிப்பிட்டிருந்தார்.



அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் இராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியை இலங்கை வரச் செய்வதற்கு பகிரதப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இலங்கையின் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூட அன்று அவுஸ்திரேலிய அணியை இலங்கை வரச் செய்வதில் அயராது பாடுபட்டார்.

ஆயினும் அவரது முயற்சி வெற்றியளிக்கவில்லை. அவுஸ்திரேலிய அணி இலங்கை வருவதற்கு விடாப்பிடியாக மறுத்துவிட்டது. பின்னர் உலகக் கிண்ணப் போட்டிகளின்போதே இலங்கைக்கு விஜயம் செய்தது.

அன்றிருலிந்து அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் இலங்கை அரசுக்கு சற்றே மனக் கசப்பு ஏற்பட்டிருந்தாலும் அதனை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அனுதாபமான போக்கைக் கொண்டிருந்ததுடன், அவுஸ்திரேலியாவில் உள்ள புலிகள் இயக்க ஆதரவாளர்கள் மற்றும் இலங்கைத் தமிழ் அமைப்புக்கள், சங்கங்கள் என்பவற்றுடனும் அன்றைய அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்புகளை வைத்திருந்தது.**

அந்த அரசாங்கம் மாறி புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் இலங்கைப் பிரச்சினையிலும் அவர்கள் நிலைப்பாடு மாற்றமடைந்தது.

அவுஸ்திரேலிய புதிய அரசாங்கம் புலிகளுக்கு சாதகமானதல்ல என்று அப்போதே 'முரசு' கோடிட்டுக் காட்டியதை வாசகர்கள் அறிவர். அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரின் சமீபத்திய இலங்கை விஜயம் முரசின் தகவலை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

**முன்னைய அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் பேசி கிரிக்கெட் அணியைக்கூட இலங்கைக்கு வருவழைக்க லக்ஷ்மன் கதிர்காமரால் இயலவில்லை. ஆனால் இப்போது அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரையே இலங்கை அரசு தனது இராஜதந்திர நாடகத்தின் அரங்கேற்றத்தில் பிரதான பாத்திரமாக நடிக்க வைத்திருக்கிறது.**

சில மாதங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பொக்ஸ் மூலமாக அரங்கேற்ற முற்பட்ட இராஜதந்திர நாடகம் ஓரளவு வெற்றிபெற்றிருந்தது.

**அதன் பின்னணி அறியாமல் வெளியான தவறான ஊகங்களும், முக்கியத்துவமும் பொக்ஸ் மேற்கொண்ட முயற்சியை பெரிதுபடுத்தியிருந்தன.**

பிரிட்டிஷ் தேர்தலில் பொக்ஸ்ஸின் கன்சர்வேட்டிவ் கட்சி மண்கவ்வியதால் அந்த இராஜதந்திர நாடகம் சில கட்டங்களுடன் முற்றுப்பெற்றிருந்தது.

இப்போது இலங்கை அரசுக்கு மற்றொரு பொக்ஸ் கிடைத்திருக்கிறார். அவர்தான் அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர்.

வெளியுலகில் தனது ஆதரவுத் தளத்தை சேதமில்லாமல் பாதுகாக்க இலங்கை அரசு மிகுந்த கவனம் செலுத்திவருவதின் பிரபலிப்புக்களாகவே இத்தகைய இராஜதந்திர நகர்வுகள் அமைந்துள்ளன.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படுவதை வெகு கச்சிதமான காய் நகர்த்தல்கள் மூலமாக தடுப்பதிலும் இலங்கை அரசு ஈடுபட்டுவருகிறது.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக நேரடியாக மறுப்புத் தெரிவிக்காமல், அவ்வாறான மத்தியஸ்தம் அவசியமில்லை என்ற பொது அபிப்பிராயத்தை உருவாக்கும் இராஜதந்திர முயற்சிகளில் இலங்கையின் வெளிநாட்டமைச்சு குதித்திருக்கிறது.**

தாமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை மறுத்து கருத்துரைக்காமல், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் பிரமுகர்கள் மூலமாக இலங்கையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியப்படவில்லை என்று சொல்லவைக்கும் இராஜதந்திரம் நாசூக்கானது.

ஏற்கனவே பொக்ஸ் மேற்கொண்ட முயற்சியின் உள் அர்த்தமும் அதுவாகவே அமைந்தது. இலங்கைக்குள் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான காலம் கனிந்துவருகிறது என்று சித்தரிக்கவே பொக்ஸ் மேற்கொண்ட முயற்சிகள் பயன்பட்டன.

**அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இப்போது அவசியப்படவில்லை என்றுதான் கூறிவிட்டுப் போயிருக்கிறார். அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் மூலமாக அச் செய்தியை வெளியுலகுக்கு அறிவித்துள்ளது இலங்கை அரசாங்கம்.**

எனினும், பொக்ஸ் செய்ததுபோல் அல்லாமல் அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரின் பேச்சுக்களும், கருத்துக்களும் அவரை ஒரு அப்பட்டமான இலங்கை அரசு சார்பாளராக காட்டிவிட்டன.

எடுத்த வீச்சிலேயே அரசின் தீர்வு யோசனைப் பொதியை தனது சொந்தப் பொதிபோல ஆதரித்துப்பேச ஆரம்பித்ததுதான் அவர் செய்த தவறு. அதனால் அவரது நோக்கம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெரிந்துவிட்டது.

**ஒரு பிரச்சனையைத் தீர்க்க மனப்பூர்வமாக முயல்பவர்கள் முதலில் பிரச்சனையின் தாற்பரியத்தை அதோடு சம்பந்தப்பட்ட சகல தரப்புக்களிடமும் கேட்டறியவேண்டும். அதன்பின்னர் சகல தரப்புக்களையும் அரவணைத்துக் கொள்ளக்கூடிய பக்குவத்துடன் தமது அணுகுமுறைகளை கைக்கொள்ள வேண்டும்.**

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு நல்லதொரு சூழலை ஏற்படுத்த நாட்டம் கொள்ளும் ஒரு நடுநிலையாளர் போல அவரது பேச்சுக்கள் அமையவில்லை. இலங்கை அரசுக்காக வாதாடுவதற்கு ஆஜரான சட்டத்தரணிபோலவே அவர் வெளியிட்ட கருத்துக்கள் அமைந்துள்ளன.

அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரின் விஜயமும், இங்கே யார் யாரை அவர் சந்திக்க வேண்டும் போன்ற விபரங்களும் இலங்கை வெளிநாட்டமைச்சு வகுத்துக் கொடுத்த திட்டப்படியே நடந்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் உள்ள வடக்கு-கிழக்கு கட்சிகள் மட்டுமே அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

தமக்கு பாதகமில்லாதவகையில்தான் சந்திப்புக்கான பட்டியலை சிபாரிசு செய்திருந்தது இலங்கை வெளிநாட்டமைச்சு.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் சந்திப்புக்கான அனுமதி கேட்டிருந்தும்கூட மறுக்கப்பட்டது. இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாடுள்ள ஒருவரை சந்திக்க அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் தயாராக இருக்கவில்லை.

தான் சந்திக்க விரும்பும் காரணத்தை கடிதம் மூலமாக குமார் பொன்னம்பலம் விரிவாகக்கூறியிருந்தார். ஒரே பக்கமான கருத்துக்களை மட்டும் அறியாமல் மறுபக்க கருத்தையும் அறிந்துகொள்ளுமாறு அவர் கேட்டிருந்தார்.

சகல கருத்துக்களையும் கேட்டறிந்து உண்மை நிலையை அறிய ஆர்வம் கொண்டிருந்தால் சகல தமிழ்க் கட்சிகளையும் அழைத்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் தன்னைச் சந்திக்க ஆர்வம் கொண்டு கடிதம் எழுதிய குமார் பொன்னம்பலத்தை அழைத்து பேசியிருக்கலாம்.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்-முஸ்லிம் கட்சிகளையும் ஒன்றாகவே சந்தித்திருக்கிறார். சுமார் ஒரு மணிநேரம் அக் கட்சிகளுடன் பேசியிருக்கிறார்.

சந்திப்பின் முடிவில் தீர்வுப் பொதியை ஆதரிக்குமாறு ஆலோசனை கூறிவிட்டு சென்றுள்ளார் அலெக்ஸ்ஸாண்டர் டௌனர்.

**இலங்கை இனப்பிரச்சனையின் ஆழத்தை அறிந்து கொள்வதில் அவுஸ்திரேலிய அமைச்சர் ஆர்வம் காட்டியிருக்கவில்லை. தனக்கு இலங்கை அரசால் வழங்கப்பட்ட தீர்வு யோசனையை மட்டுமே படித்துவிட்டு, அதற்கு வக்காலத்து வாங்கும் ஒருவராகவே வந்து சென்றுள்ளார்.**

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் விரும்பும் தீர்வென்ன என்பதை அறியாமல், இலங்கை அரசு விரும்பும் தீர்வொன்றை தமிழ் பேசும் மக்கள் ஏற்குமாறு ஆலோசனை கூறும் ஒருவராகவே அவரை நோக்க வேண்டியுள்ளது.

**புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள், இலங்கை அரசு நியாயமான தீர்வொன்றில் நாட்டம் கொண்டுள்ளது. என்று முன்கூடியே செய்த முடிவோடுதான் அவர் வந்து போயிருக்கிறார். இத்தகைய அணுகுமுறை அரசியல் தீர்வு முயற்சிகளில் எவ்வித பலனையும் ஏற்படுத்தப்போவதில்லை.**

கடந்த காலத்தில் சகல இயக்கங்களும் ஒன்றுபட்டு நின்று போராடியபோதும் பல நாடுகள் அதனை பயங்கரவாதப் போராட்டம் என்றே சித்தரித்தன. இலங்கை அரசுக்கும் உதவிகள் செய்தன.

இப்போது அவுஸ்திரேலிய அமைச்சரை அழைத்து தமிழ்க் கட்சிகளுக்கு புத்தி சொல்லப்படுகிறது. புலிகளின் இராணுவரீதியான செயற்பாடுகள் ஆட்டம் கண்டிருக்குமானால் இத்தகைய இராஜதந்திர நாடகங்களுக்கு அவசியமே இருந்திருக்காது.

தாம் விரும்பும் ஒரு தீர்வை முன்வைத்துவிட்டு, இனப்பிரச்சனை தீர்ந்துவிட்டது, இனி கொடுப்பதற்கு எதுவுமில்லை என்று அரசு சொல்லியிருக்கக்கூடும்.

புலிகளை இலங்கை அரசால் வெற்றிகொள்ள முடியாது என்ற கருத்து வெளியுலகில் ஏற்பட்டுவருகிறது. இலங்கை அரசின் அரசியல், இராணுவ அணுகுமுறைகள் தோல்வியைத் தழுவி வருகின்றன. அதனால் வெளியார் தலையீடு மூலமே ஒரு தீர்வைக் காணலாம் என்ற கருத்தும் தோற்றம் பெற்றுவருகிறது.

**அதனால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கை வலுப்பெறாமல் தடுப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளில் அரசு இறங்கியுள்ளது.**

தமிழ்க் கட்சிகளும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்று உதட்டளவில் கூறியுள்ளனவே தவிர, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படாமல் தடுக்கும் முயற்சிகளுக்கு துணை போய்க் கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் பாராளுமன்றத்தில் இருந்து கூட்டணி எம்.பிகள் வெளிநடப்பு செய்திருந்தனர். புலிகளுடன் அரசு பேச வேண்டும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டும். யுத்தம் நிறுத்தப்படவேண்டும்' என்று மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தியிருந்தனர்.

அவுஸ்திரேலிய அமைச்சருடனான சந்திப்பில் மேற்கண்ட கோரிக்கைகள் எதனையும் கூட்டணியினர் முன்வைக்கவில்லை. அக் கோரிக்கைகளுக்கு மாறான கருத்துக்களை பகிர்ந்து கொண்டுமுள்ளனர்.

அரசின் இராஜதந்திர நகர்வுகளுக்கான அச்சாணியாக தமிழ்க் கட்சிகளும், குறிப்பாக கூட்டணியினரும் மாறி நிற்கின்றனர்.

**ஆனால் ஒட்டுமொத்தமாக நோக்கினால் இந்த இராஜதந்திர நகர்வுகள் புலிகளை பலவீனப்படுத்தல் என்ற போர்வையில் வெளியுலகில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கான ஆதரவுத் தளத்தை இல்லாதொழிப்பதை நோக்கியே மேற்கொள்ளப்படுகின்றன.**

அன்றாடப் பிரச்சனைகள் விடயத்தில்கூட தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களை அலட்சியம் செய்துவரும் அரசாங்கம், தனது இராஜதந்திர நகர்வுகளின்போது அக் கட்சிகளின் பிரசன்னங்களை பயன்படுத்திக் கொள்கிறது.

ஆயினும், அவுஸ்திரேலியா சொன்னால் என்ன, அமெரிக்கா சொன்னால் என்ன, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்ற தீர்வு எட்டப்படாதவரை இங்கு அமைதி தோன்றப்போவதில்லை. ■

---

## அவுஸ்திரேலிய அமைச்சருடன் திரைமறைவுப் பேச்சு!

இடம்: கொழும்பு ஹில்டன் ஹோட்டல்.
நேரம்: மாலை 6 மணி.

அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர் பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்-முஸ்லிம் கட்சிகளை கூட்டாக சந்தித்தார்.

தனித்தனியாக சந்தித்து மனம்விட்டுப் பேசவோ, உண்மை நிலவரங்களை கேட்டறி யவோ அவகாசம் இல்லாத அவசரச் சந்திப்பு.

அச் சந்திப்பை அடுத்து பத்திரிகை யாளர் மாநாடு, பின்னர் இரவு விருந்து என்று இறுக்கமான நிகழ்ச்சி நிரல். அத னால் ஒரு மணிநேரத்துக்குள் தமிழ்-முஸ்லிம் கட்சிகளுடனான சந்திப்பை முடித்தாக வேண்டிய கட்டாயம்.

ஏறக்குறைய 50 வருடகால இனப்பிரச் சனையின் வரலாற்றை 50 நிமிடத்துக்குள் சொல்லியாக வேண்டும். முடியுமா?

சந்திப்பு தொடங்கியதுமே கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம்தான் பேச்சை ஆரம்பித்தார்.

கூட்டணி தமிழ் மக்களை பிரதிநிதித்து வப்படுத்துகின்ற பழம்பெரும் கட்சி. வன் முறைகளில் நம்பிக்கை இல்லாத கட்சி என்று அவர் ஆரம்பிக்க ஏனைய தமிழ் கட்சி பிரதிநிதிகள் கொடுப்புக்குள் சிரித்த படி இருந்தனர்.

நாங்கள் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்து வருகிறோம். கைது களை கண்டிக்கிறோம்... என்று சிவசிதம் பரம் சொல்லிக்கொண்டுபோக, அரசுமீது இடம் வலமாக தாக்கப்போகிறாரோ என்று அவுஸ்திரேலிய அமைச்சரே தன் புருவங் களை லேசாக உயர்த்தினார்.

ஆனால் சிவசிதம்பரம் அப்படியே ஒரு தாவாகத்தாவி தன் வாதத்திறமை பழுதாகவில்லை என்பதை நிரூபித்தார்.

அவர் சொன்னார்; "நாங்கள் அரசின் தீர்வுப் பொதியை வரவேற்கிறோம். இது ஒரு சிறந்த பொதியாக இருக்கிறது. பிராந் திய சபையை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருப்பது, நிலம் தொடர் பான அதிகார வரம்புகள் பற்றி மட்டுமே எமக்கு சில முரண்பாடுகள் உள்ளன. எமக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே அதிகார அலகு தொடர்பாக உடன்பாடு காணப்பட்டுவிட்டது." என்று ஒரே போடாக போட்டார் சிவசிதம்பரம்.

ஒருமுறை தமிழக சட்டப்பேரவையில் ஒரு விவாதம் நடந்ததாம். ஆங்கிலம்தான் அழகான மொழி என்று காங்கிரஸ் காரர்கள் வாதிட்டார்களாம். உடனே பேரறிஞர் அண்ணா எழுந்தாராம். "நான் ஆங்கிலத்திலே ஷேக்ஸ்பியர் நாடகத்தில் இருந்து நேற்றுவரை வந்த ஆங்கில இலக்கியம்வரை படித்திருக்கிறேன். தமிழில் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை முதல் இன்றுவெளியான சிறிய எழுத்து கதைவரை படித்திருக்கிறேன். அவற்றின் சுவை பருகியுமிருக்கிறேன் நான் சொல் கிறேன். தமிழ்தான் உயர்ந்த மொழி. இனிய மொழி" என்றாராம். அதன் பின்னர் யாரும் மூச்சுவிடவில்லை.

மு. சிவசிதம்பரம் அவர்களும் 'நாங்கள் அரசாங்கத்தை எதிர்த்து அவசரகால சட்டத்தில் வாக்களிப்பவர்கள். ஆகவே அரசுக்கு எதிரானவர்கள். ஆனால் நாங்கள் சொல்கிறோம் அரசியல் தீர்வுப் பொதி அபாரமானது. அற்புதமானது' என்ற ரீதி யில் வாதிட்டிருக்கிறார். இதனைவிட சாதக மான, புத்திசாலித்தனமான வாதம் அர சுக்கு யார் மூலமும் கிடைக்கப் போவதில்லை.

ஆக, அரசியல் இலாபம் கருதி தாம் போடும் சில எதிர்ப்பு நாடகங்களைக்கூட, உரிய தருணத்தில் அரசின் பிரதான நிலைப்பாட்டுக்கு சாதகமாக எப்படி பயன் படுத்துகிறார்கள் பாருங்கள். இதுதான் பழம்பெரும் கட்சியின் பழுத்த அனுபவம்.

சந்திப்பில் கலந்து கொண்ட புளொட், ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் புலிகளுக்கு எதிரான கருத்தை வெளியிட்டன. இக் கட்சிகள் பகிரங்க மாகவே புலிகளுக்கு எதிராக பேசிவரும் கட்சிகள்தான். எனவே அவற்றின் நிலைப் பாடுகள் இரகசியமானவையல்ல.

ஆனால் கூட்டணியினரோ மக்களிடம் ஒன்றும், திரைமறைவில் வேறொன்றும் கூறிவருகின்றனர்.

சமீபத்தில் பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்த கூட்டணியினர் மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே வெளிநடப்பு என்றனர்.

1. அரசும் புலிகளும் பேசவேண்டும்.
2. மூன்றாம் தரப்பு மத்திஸ்தம்.
3. போர் நிறுத்தம்.

அதிர்ச்சியான தகவல் என்ன தெரி யுமா? அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச் சருடனான சந்திப்பில் மேற்கண்ட கோரிக் கைகள் பற்றி பேச்சு எடுக்காததுடன், அவற் றுக்கு நேர்மாறாகவே கூட்டணித் தலை வர் சிவசிதம்பரம் கருத்துக்கூறியுள்ளார்.

சந்திப்பின்போது புளொட் தலைவர் சித்தார்த்தன் மட்டுமே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக அவுஸ்திரேலியா செயற் படக்கூடாதா? என்று கேட்டிருக்கிறார். அதற்கு அவசியமில்லை என்ற ரீதியில் பதிலளித்துவிட்டார் அலெக்ஸாண்டர் டௌனர்.

தீர்வுத்திட்ட குறைபாடுகள் பற்றிக்கூட ஈ.பி.டி.பி. தரப்பில் இருந்துதான் நீண்ட பட்டியலிட்டே பேசப்பட்டிருக்கிறது.

கூட்டணியினரோ அரசின் குறிப்பறிந்து நடப்பதுபோலவே நடந்துள்ளனர்.

சந்திப்பின் முடிவில் பேசிய அவுஸ்தி ரேலிய அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர் "தீர்வுப் பொதியில் உள்ள குறை களை பெரிதுபடுத்தாமல் அதனை முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான் புலிகளை பலவீனப்படுத்தி பாதை மாற்ற லாம். வடக்கு-கிழக்கில் 30 வீதமான மக் களே புலிகளை ஆதரிக்கின்றனர். எனவே அவர்களை பலவீனப்படுத்த முயலுங்கள்." என்று கூறியிருக்கிறார்.

உடனே குறுக்கிட்ட மு. சிவசிதம்பரம் அவுஸ்திரேலிய அமைச்சரின் கருத்தை ஆமோதித்ததுடன், புலிகளைப் பலவீனப் படுத்தி அழுத்தம் கொடுப்பது அவசிய மானது என்று கூறியிருக்கிறார். பலவீனப் படுத்தல் என்பதற்கு மு. சிவசிதம்பரம் பயன்படுத்திய ஆங்கில வார்த்தை 'மார்ஜின லைஸ்' (Marginalice). ஓரம் கட்டுதல், பல வீனப்படுத்தல் போன்ற அர்த்தங்கள் தவிர வேறு அர்த்தங்கள் அதற்கு இருப்பதாக நாம் அறியவில்லை.

**பி.கு:** இங்கு தெரிவிக்கப்பட்ட தகவல் களை மு.சிவசிதம்பரம் மறுப்பாரேயானால் தமிழி லும் ஆங்கிலத்திலும் தனித்தனியாக இரு மறுப்பு தந்தால் நாம் பிரசுரிக்கலாம். ஆங்கில மறுப்பை அப்படியே அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச் சருக்கு நாம் அனுப்பிவைக்கலாம். ■

# கொள்ளை ராணி பூலான்தேவி

55

தருவது ரசிகன்

**கடந்த வாரம்**

**ஸ்ரீ ராமுடன் மீண்டும் சேர்கிறான் மல்லா பூலானுக்கு அது பிடிக்கவில்லை. மாதுசிங்கின காதலி குசுமா மல்லாவிடம வந்து சேருகிறாள குசுமாவின அழகும், அவள் போக்கும் பூலானை கவலை கொள்ளச் செய்கிறது**

**இனி....**

மல்லா ஒரு மரத்தரடியில் தனியாக அமர்ந்திருந்தான். அவனைக் காணவில்லையே என்றுதான் பூலான் தேடிக் கொண்டு வந்தாள். இருள் அடர்த்தியாக ஆக்கிரமித்திருந்தது.

அப்போதுதான் இருளில் ஒரு உருவம் பதுங்கி பதுங்கிச் செல்வதை பூலான் கவனித்தாள். அந்த உருவம் பூலானுக்கு முதுகு காட்டியபடி சென்றது. பூலான் தன் துப்பாக்கியை அந்த உருவத்தை நோக்கி உயர்த்தினாள்.

காற்றில் அந்த உருவத்தின் கூந்தல் அலைபாய்ந்தபோதுதான் அது ஒரு பெண் என்பது புரிந்தது. நன்றாக கூர்ந்து கவனித்தபோது அது குசுமா என்று தெரிந்துவிட்டது.

இப்போது கண்கள் இருட்டுக்கு பழக்கமாகிவிட குசுமாவின் பின்புறத்தோற்றம் ஓரளவு தெளிவாகத் தெரிந்தது. அவளது பின்புறத் தோற்றமே எந்த ஆணையும் பெருமூச்சுவிடச் செய்யக்கூடியது; ஏங்கச் செய்யக்கூடியது; ஊகிப்புக்களை தூண்டக் கூடியது. 'இவள் ஒரு மாயப் . பிசாசு' என்று நினைத்தபடி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு பின்தொடர்ந்தாள் பூலான்.

குசுமாவைக் கண்டதும் மல்லா எழுந்து கொண்டான். சட்டென்று மற்றொரு மரத்தின் பின்னால் பதுங்கிக் கொண்டாள் பூலான்.

"நீயா? என்ன இந்த நேரத்தில்?" என்று கேட்டான் மல்லா. அவனுக்கு மிகச் சமீபமாக, அவனை உரசுவதுபோல நின்றாள் குசுமா. அவள் மார்புகள் மல்லாவின் கண்களை குத்திவிடுவது போல நெருக்கத்தில் தெரிந்தன. மல்லாவே சற்றுத் தடுமாறித்தான் போனான்.

'தன் உற்ற நண்பனின் காதலி, என்பதால் அவளை கண்ணியக்குறைவாக மல்லா நினைத்துப் பார்க்கவில்லை. சற்றுப் பின்னடைந்தான்.

குசுமா ஏக்கமாய் மல்லாவை நோக்கினாள். அவள் மார்புகள் சர்ப்பங்கள்போல எழுந்து விம்மித் தணிந்தன. பின்னடைந்த மல்லாவை நோக்கி அவள் நகர்ந்தாள். மல்லா மேலும் ஒரு அடி பின்னால் எடுத்து வைத்தான்.

"என்ன குசுமா? ஏன் இங்கே வந்தாய்? எதுவாக இருந்தாலும் காலையில் பேசிக் கொள்ளலாம்! யாரும் பார்த்தால் தப்பாக நினைப்...."

மல்லா சொல்லிமுடிக்க குசுமா விடவில்லை.

சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள். மல்லாவை நோக்கி சரிந்து தன் கரங்களை விரித்து அவனை சிறைப்படுத்திக்கொண்டாள்.

அவள் மார்புகள் மல்லாவின் நெஞ்சில் அழுத்திக்கொண்டிருக்க, மல்லா அவள் மூர்க்கமான அணைப்பில் திணறிக் கொண்டிருக்க, குசுமாவின் உதடுகள் மல்லாவின் உதடுகளை ஏக்கத்துடன் தேடிக்கொண்டிருக்க, மறைவில் இருந்து கவனித்த பூலான் கோபத்தின் உச்சிக்குச் சென்று, குசுமாவை கொன்றுவிடலாமா என்றுகூட நினைத்த நொடியில்,

மல்லா திமிறி அவளை தன்னிடமிருந்து உதறினான். ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான்.

குசுமா அதனை எதிர்பார்க்கவில்லை. அவள் மதர்த்த தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. அடிபட்ட கன்னத்தை தன் கையொன்றால் பொத்திக் கொண்டாள். அடிபட்ட இடம் கன்றிப்போனது..

மல்லா அவளை ஒரு புழுவைப் போலப் பார்த்தான். "சீ.. போ...போய் விடு இங்கிருந்து... போடி.....!" என்று கத்தினான்.

பூலானின் கோபம் காணாமல் போனது. மல்லாவை நினைக்கப் பெருமையாக இருந்தது. 'குசுமா ஸ்ரீராமைவிட மோசம்... இப்படி அலைகிறாளே பாவி!' என்று நினைத்தாள் பூலான்.

குசுமா உடனே அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாளில்லை. 'போடி' என்று கத்திய மல்லாவை கண்கொட்டாமல் நோக்கினாள். அவள் கண்களில் ஏமாற்றம் இருந்தது; அவள் மனதின் உள்ளே அடிபட்ட புலியின் சீற்றம் இருந்தது; ஒரு பாம்பின் பழி வாங்கும் உணர்ச்சி இருந்தது.

இதுவரை அவளை யாரும் இப்படிப் புறக்கணித்ததில்லை. இப்படிப் புழுவைப் பார்ப்பதுபோல பார்த்ததில்லை. கிடைக்க மாட்டாளா என்று நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைந்த ஆண்கள் பலபேரை அவள் கண்டிருக்கிறாள். அவர்களை அலையவைத்து அவர்களின் ஏமாற்றத்தை இரசித்திருக்கிறாள்.

மாதுசிங்கை அவள் காதலித்தது உண்மை. மாதுசிங் செத்தபின்னர் அழுது அழுது அரற்றியதும் உண்மை. ஆனால் இப்போது அவள் இளமை விழித்துக் கொண்டிருக்கிறது. மதர்ப்பான தேகத்தின் ஒவ்வோர் அணுவும் திமிறிக் கொண்டு துணை தேடுகிறது. தனிமை கொல்கிறது. தீயாய்ச் சுடுகிறது. கொல்லும் தனிமையைக் கொல்ல ஒரு துணை வேண்டும்.

குசுமாவுக்கு தான் செய்தது தப்பாகத் தெரியவில்லை. வேண்டாம் என்றால் மறுத்திருக்கலாம். இப்படி அவமானப்படுத்தியிருக்க வேண்டியதில்லை. மல்லாமீது ஆத்திரம் கொப்பளித்தது.

மல்லா அவள் பார்வையைத் தவிர்க்க முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான்.

உணர்ச்சிகள் அத்தனையையும் உள்ளே போட்டு மறைத்துக் கொண்டு, உதடுகள் துடிக்க அவள் சொன்னாள்:

"மல்லா இதுபோதும்! இதை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன். மறக்கவே மாட்டேன்!"

ஒரு புயல் விலகியது போல சடாரென்று விலகிப் போனாள். அவள் சொன்னதின் அர்த்தம் மல்லாவுக்குப் புரியவில்லை. அவள் கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வரவில்லை என்பது ஆச்சரியமாக இருந்தது. அவள் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்து



பூலான்

விட்டு மறுபடி மரத்தடியில் அமர்ந்து கொண்டான் மல்லா.

பூலான் நின்ற மரத்தடியை கடந்துதான் குசுமா சென்றாள். ஆனால் பூலான் நின்றதை அவள் கண்கள் காணவில்லை. குசுமாவின் போக்கும், அவள் முகத்தில் தெரிந்த கோபமும் பூலானுக்கு ஏதோவொரு விபரீதத்துக்கான ஆரம்பமாய் தோன்றியது.

குசுமாவை கண்காணிக்க வேண்டும் என்று நினைத்த பூலான், மல்லாவிடம் செல்லாமல் குசுமாவைப் பின்தொடர்ந்து சென்றாள்.

பூலானின் உள்ளுணர்வு எப்போதும் சரியாகத்தான் இருக்கும். பூலான் நினைத்தது போலவே குசுமாவின் போக்கு புதிராகத்தான் இருந்தது.

ஸ்ரீராம் தங்கியிருந்த பக்கமாக அவள் சென்றாள். உள்ளே செல்ல முன்னர் பின்னால் திரும்பி நோக்கினாள். அவள் திரும்பிப் பார்க்கப்போவதை ஊகித்து இருளில் அப்படியே ஆடாமல் அசையாமல் பூலான் நின்றுவிட்டதால் பூலானை அவள் காணவில்லை.

குசுமா உள்ளே போன பின்னர் பூனை போல பதுங்கிப் பதுங்கிச் சென்ற பூலான் மறைவில் நின்றுகொண்டு உள்ளே பார்த்தாள்.

ஸ்ரீராம் பூலானுக்கு முதுகுகாட்டிக் கொண்டு நின்றான். குசுமா அவன் எதிரே நின்று கொண்டிருந்தாள்.

குசுமாவைக் கண்டதிலிருந்து ஸ்ரீராமுக்கும் அவள்மீது ஒரு கண்தான். பூலானிடம் ஏற்பட்ட அனுபவம் காரணமாக விட்டுப் பிடிக்கலாம்; கொஞ்சம் கொஞ்சமாக வழிக்கு கொண்டுவரலாம் என்று நினைத்திருந்தான்.

குசுமாவைக் கண்டபின்னர் பூலான் மீதிருந்த வெறிகூட ஸ்ரீராமுக்கு தணிந்திருந்தது. இப்போது குசுமாவே தன்னைத் தேடிவந்ததும் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலாகியது.

"வா குசுமா!" என்று வாயெல்லாம் பல்லாக வரவேற்றான். முந்தானை விலகியதால் வெளிப்பட்ட எழுச்சிகளின் விளிம்புகளும், இடையே மெல்லிய கோடாகத் தெரிந்த பிரிவும் ஸ்ரீராமை போதையில் வீழ்த்தியது.

ஸ்ரீராமின் கண்கள் பாய்ந்த இடங்களையும், அவன் மனம் தள்ளாடத் தொடங்கிவிட்டதையும் குசுமா குறிப்பால் அறிந்தாள்.

ஸ்ரீராம் அவளருகே சென்று தோளில் கைவைத்தான். "மாதுசிங் ரொம்ப நல்லவன். உன்னைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருப்பான்!" என்று பொய்சொன்னான் ஸ்ரீராம்.

குசுமா எதுவும் பேசவில்லை. ஸ்ரீராம் தன் கையொன்றால் அவள் முதுகை வருடினான். "கவலைப்படாதே, இத்தனை சின்ன வயதில் கவலைப்பட்டு உடம்பைக் கெடுக்காதே!" என்றான். முதுகை அழுத்தி மெல்ல மெல்ல தன்னோடு அவளை நெருக்கமாக்கினான்.

குசுமா சாகசக்காரி, "நீங்கள் இருக்கும்

**பாகம் 02**

போது எனக்கென்ன கவலை?" என்று கேட்டபடியே தன் முன் உடல் அவன்மேல் உராயும் நெருக்கத்தில் நின்றாள்.

அதற்குமேல் ஸ்ரீராமால் பொறுக்க முடியவில்லை. அவளை அப்படியே தன் மீது சரித்துக் கொண்டான். முதுகை வருடிய கரங்கள் மெல்ல மெல்ல கீழே இறங்கி பின்புறமாய் உயர்ந்திருந்த எழுச்சிகளில் அலைந்தன.

குசுமா தன் கால்களால் அவன் கால்களை உரசத் தொடங்கினாள். ஸ்ரீராம் தன்னை மறந்து "குசுமா.....!" என்று கிறக்கமாய் அழைத்தான். குசுமா அவன் முன்பாக மண்டியிட்டு அமர்ந்தாள்.

அதற்குமேலும் பூலான் அங்கு நிற்க விரும்பவில்லை. அவ்விடத்தைவிட்டு விலகி தனது இடத்துக்கு மளமளவென்று சென்றாள்.

'குசுமா ஏதோ ஒரு நோக்கத்துக்காகத்தான் ஸ்ரீராமை தன் பொம்மையாக்க நினைக்கிறாள். ஸ்ரீராமை தன் கைக்குள் போட்டுக் கொண்டு ஏதோ சதித்திட்டம் தீட்டப்போகிறாள்' என்று பூலானின் உள்ளுணர்வு எச்சரிக்கத் தொடங்கியது.

அடுப்பில் இருந்த நெருப்பை எடுத்து மடியில் வைத்துக்கொண்டதாகிவிட்டதே என்று நினைத்து பூலான் கவலையானாள்.

இப்போதைக்கு மல்லாவிடம் எதுவும் சொல்லவேண்டாம். குசுமாவைத் தொடர்ந்து கண்காணித்து அவள் திட்டத்தை அறியலாம் என்று பூலான் தீர்மானித்தாள்.

பூலான் செய்த தப்பு அதுதான். அவள் மட்டும் தான் கண்டகாட்சியை மல்லாவிடம் கூறியிருந்தால் பின்னர் நடக்கவிருந்த விபரீதங்களைத் தடுக்கச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கலாம்.

ஸ்ரீராம் அதற்கு முன்னர் அப்படி ஒரு சுகத்தைக் கண்டதில்லை. அவளது இளமை முன் தடுமாறினான். ஆயுதங்களை காலடியில் போட்டுவிட்டு மண்டியிடும் சிப்பாய் போல குசுமாவின் இளமை முன்பாக-தினவெடுத்த அவள் தேகம் முன்பாக தன் அகங்காரங்களையெல்லாம் வீசி எறிந்து விட்டு சரணடைந்தான் ஸ்ரீராம்.

"குசுமா உனக்கு என்ன வேண்டும்? கேள் குசுமா கேள்!" என்று அவன் சொன்னபோது மூச்சிரைத்தான். மிகத் தளர்ந்திருந்தான்.

குசுமா களைந்துபோட்ட தன் ஆடைகளுக்குள் மறுபடி தன் உடம்பை திணித்தபடி தன் கோரிக்கையைச் சொன்னாள்:

"மல்லாவின் உயிர்!"

ஸ்ரீராம் மூச்சிரைத்தபடியே அவளை தன் கண்களை விரித்து நோக்கினான். அவளது கோரிக்கை அவனுக்கும் பிடித்தமானதுதான். ஆனால் அவளுக்கும் மல்லாவுக்கும் என்ன பிரச்சனை என்றுதான் தெரியவில்லை.

"உனக்கு மல்லாமேல் என்ன கோபம்?"

குசுமாவுக்கு அவன் முகத்தைப் பார்த்து பொய் சொல்ல தயக்கமாக இருந்தது. தான் சொல்வது பொய் என்று அவன் கண்டு பிடித்து விட்டால் என்ன செய்வது?

ஸ்ரீராமை நெருங்கி அவன் கழுத்தை தன் கைகளால் வளைத்தாள். அப்படியே அவன் முகத்தை தன் எழில்கள்மீது புதைக்கச் செய்தாள். அவன் காதருகே பொய் சொன்னாள்.

"மாது சிங் கொள்ளைக் கோஷ்டியில் சேர மல்லாதான் காரணம். மல்லாவுக்கு என்மீது ஆசை. அதனால்தான் மாது சிங்கை கொள்ளைக் கோஷ்டியில் சேரச் செய்தான். என்றாவது ஒருநாள் என் மாது செத்துப் போனால் என்னை அடையலாம் என்ற திட்டத்தோடுதான் மல்லா அப்படி செய்திருக்கிறான்."

குசுமா சொன்னது உண்மைதானா என்று ஆராயும் நிலையில் ஸ்ரீராம் இல்லை. அந்த அவசியமும் அவனுக்கில்லை.

மல்லாமீது தன் குழுவில் உள்ளவர்கள் வைத்திருக்கும் பற்றுதலை அறுத்துப்போட ஒரு நல்ல கதை கிடைத்திருக்கிறது என்று நினைத்தான் ஸ்ரீராம்.

குசுமா மூலமாகவே மெல்ல மெல்ல தன் ஆட்களுக்குள் அவள் சொன்ன கதையைப் பரப்ப நினைத்தான். மல்லாவின் காதுக்கு எட்டாதவகையில் புத்திசாலித்தனமாக அக்காரியத்தைச் செய்யத் தொடங்கினாள் குசுமா.

குசுமாவின் அழகில் மயங்கிய சிலர் அவள் சொன்னதை நம்பினார்கள். குசுமா அவர்களோடு சகஜமாகப் பழகுவதுபோல தொட்டுத் தொட்டுப் பேசினாள். தற்செயலாக வருவதுபோல தன் கைகளை அவர்கள் உடல்களில் படச் செய்தாள்.

பிடிகொடாதவர்களை தவிர்த்து மனச் சஞ்சலம் உள்ளவர்களை மட்டுமே தன் சாகசத்தால் குறிப்பறிந்து குசுமா மல்லாவைப் பற்றிய கதைகளைக் கட்டிவிட்டாள்.

பூலான் என்னதான் எச்சரிக்கையாக இருந்தும்கூட குசுமாவின் நடவடிக்கைகளை அவளால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் மல்லாவையும், தன்னையும் பற்றி ஏதோவொரு அபாயம் சூழ்ந்து கொண்டிருப்பதாக பூலானின் உள்ளுணர்வு உறுத்திக் கொண்டே இருந்தது. அதனால் தூங்கும்போது துப்பாக்கியை இறுக அணைத்தபடியே தூங்கினாள். சிறு சத்தம் கேட்டாலும் எழுந்து அமர்ந்து கவனிக்கவும் தொடங்கினாள்.

ஸ்ரீராமோ பூலான் கண்ணிலேயே மண்ணைத் தூவும் திட்டம் போட்டு முடித்து விட்டான். மறுநாள் அபாயம் ஆரம்பமானது.

(தொடர்ந்து வரும்)

## அங்கும் ஓர் ஆவியுலகம்!

அமெரிக்க விஞ்ஞானிகள் அனுப்பி வைத்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் குடு குடுவென்று ஓடித்திரிகிறது. விண்வெளிப்புதிரின் அந்தம்வரை அறிவதில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



அதே அமெரிக்காவில்தான் மூட நம்பிக்கைகளும் கொடிகட்டிப் பறக்கின்றன என்றால் நம்புவது சிரமம்தான்.

மந்திரம், தந்திரம், ஆவியுலகத் தொடர்பு என்று அங்கும் தூங்குபவன் தொடையில் கயிறு திரிக்கும் ஆட்கள் இருக்கிறார்கள்.

"இறந்துபோனவர்களின் ஆவிகளுடன் பேசவைக்கிறோம்" என்று கூறி ஒரு அப்பாவியின் உயிரையே போகச் செய்து விட்டார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து அமெரிக்கா சென்ற ஒரு இளைஞர்தான் ஆவிகளை நம்பி தன் ஆவியைப் பறிகொடுத்திருக்கிறார்.

அவரது பெயர் ஜெய்சங்கர். தொழில் தேடி அமெரிக்கா சென்றார். அவரது குடும்பத்தில் பலர் உயிரிழந்திருந்தனர்.

அமெரிக்காவில் புளொரிடா மாநிலத்தில் 'ஆவியுலக தொடர்பு மையங்கள்' என்று ஏராளமான நிறுவனங்கள் இருக்கின்றன.

அப்படி ஒரு கூட்டத்திடம்தான் ஏமாந்தார் ஜெய்சங்கர். "ஆவியுடன் பேசுவது மட்டுமல்ல, உடலிலுள்ள ஆவியை வெளியே எடுத்துவிட்டு உயிரிழந்த உறவினர் ஒருவரின் ஆவியை உங்கள் உடலில் தருவிக்கலாம். பின்னர் அந்த ஆவியை வெளியே அனுப்பிவிட்டு உங்கள் ஆவியை மறுபடியும் தருவித்துக் கொள்ளலாம்" என்று கதை விட்டிருக்கிறார்கள்.


ஏதோ பிட்டுக் குழலில் இருந்து ஆவியை வெளியேற்றும் காரியம் போலச் சுலபமாகச் சொல்லியிருக்கிறார்கள். நன்கு படித்தவராக இருந்தும் ஜெய்சங்கர் அவர்களை நம்பித் தொலைத்தார்.

கூடுவிட்டு கூடுபாய்வது என்பார்களே அதுபோல ஆவிவிட்டு ஆவிபாயும் விளையாட்டுக்கு சம்மதித்தார் ஜெய்சங்கர். ஏராளமான பணமும் செலவழித்தார்.

பின்னர் என்ன நடந்ததோ ஏது நடந்ததோ தனது பூட்டிய அறைக்குள் அழுகிய பிணமாக மீட்கப்பட்டார் அந்த அழகான இளைஞர். உடல் கெட்டுப்போனதால் அமெரிக்காவிலேயே இறுதிச் சடங்கும் நடத்தப்பட்டது. தன் மகனின் முகத்தைக் கூட கடைசியாக காணமுடியாமல் போனதே என்று தமிழ்நாட்டிலிருந்து கதறிக்கொண்டிருக்கிறார் ஜெய்சங்கரின் வயதான அம்மா.

## மாட்டிக் கொண்ட நட்சத்திரம்!

ஹொலிவூட் படவுலகில் பிரபல நடிகர் எடிமர்ஃபி. திருமணமானவர். அது தவிர, நடிகைகள் பலருடன் நெருக்கமாக இருப்பவர் என்று பெயர் பெற்றவர். ஏராளமான ரசிகைகளும் எடிமர்ஃபி பின்னால் அலைகிறார்கள்.



அப்படியிருந்தும் ஒரு விபச்சாரப் பெண்ணுடன் சல்லாபித்திருக்கிறார் எடிமர்ஃபி. அப்பெண்ணுடன் அவர் இருந்தபோது பொலிஸார் பிடித்து விட்டார்கள்.

இந்தச் செய்தி வெளியானதும் பத்திரிகைகள் என்ன செய்தன தெரியுமா? அந்த விபச்சாரப் பெண்ணை தேடிப்பிடித்து எடிமர்ஃபியின் அந்தரங்க செயற்பாடுகள் பற்றி விலாவாரியாக கேட்டறிந்தார்கள். பணத்தை வீசியதும் அப்பெண்ணும் மளமளவென்று கதை கதையாக சொல்லித் தீர்த்து விட்டார். வெளியே சொல்லமுடியாத கதை.

அமெரிக்கப் பத்திரிகைகள் சுவாரசியமாக சுடச்சுட பிரசுரிக்க, எடிமர்ஃபி சூடாகி விட்டார். செய்தி வெளியிட்ட பத்திரிகைமீது 50 இலட்சம் டொலர் நஷ்டஈடுகேட்டு வழக்குப் போட்டுள்ளார்.

## நிர்மலா என்ன செய்துவிட்டார்?

இந்திய நீதிமன்றம் அந்த சிக்கலான வழக்கில் என்ன தீர்ப்புச் சொல்லப்போகிறது என்பது எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் தெரிந்து விடும்.



நிர்மலா என்ற பெண், குழந்தை இல்லாத தம்பதிக்கு குழந்தை பெற்றுக்கொடுக்க முன்வந்ததை யடுத்தே சிக்கல் தோன்றியது.

நிர்மலா திருமணமானவர். அவரது கணவர் கடும் நோய் காரணமாக படுக்கையில் இருக்கிறார். சிகிச்சை செய்ய பணம் தேவை. அதனால் குழந்தை இல்லாத தம்பதிக்கு குழந்தை பெற்றுக்கொடுத்து பணம் பெற சம்மதித்தார்.

50 ஆயிரம் ரூபாய் தருவதாக அந்தத் தம்பதி நிர்மலாவை ஒப்பந்தம் செய்தது. அதன்படி அந்த ஆணுடன் நிர்மலா உறவு கொண்டு குழந்தை பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்த விடயம் வெளியே தெரிந்ததும் பொலிசார் விபசாரக் குற்றத்தின் கீழ் நிர்மலாமீது வழக்குத் தொடுத்துவிட்டனர்.

நிர்மலாவின் சட்டத்தரணி வாதங்களை அடுக்கியிருக்கிறார். ஒரு தட்டெழுத்தாளர் தனது விரலை பயனப்படுத்துகிறார், ஒரு டாக்டர் தனது மூளையை பயன்படுத்தி சம்பாதிக்கிறார். அதுபோல ஒரு பெண் தன் கர்ப்பப்பையை பயன்படுத்தி சம்பாதிப்பதில் ஒரு தப்புமில்லை. அவரது கணவரும் அதற்கு சம்மதித்திருக்கிறார். என்பது அவரது வாதம்.

விஞ்ஞான முறைப்படி ஒரு பெண் இன்னொரு தம்பதியின் கரு முட்டைகளை தன் கருப்பையில் சுமப்பது தப்பில்லை. ஆனால் இன்னொரு ஆணுடன் செக்ஸ் தொடர்புகொண்டு குழந்தை பெற்றுக் கொடுப்பதுதான் தப்பு என்பது அரச தரப்பு வாதம்.

நீதிபதி என்ன தீர்ப்புச் சொல்லப்போகிறார்? அநேகமாக நிர்மலா செய்ய நினைத்தது தப்பு என்றுதான் தீர்ப்பு வரக்கூடும்.

தீர்ப்பு வருவதற்கிடையே இந்த விவகாரம் இந்திய பத்திரிகைகளில் சூடாக அலசப்பட்டுக் கொண்டிருக்கிறது. "என் கணவரின் எதிர் காலம் இந்தத் தீர்ப்பில்தான் இருக்கிறது. 'சிகிச்சைக்கு பணம்தர யாருமில்லை. வெட்டியாக பிரச்சனை கிளப்ப மட்டும் பலர் தோன்றி விட்டார்கள்." என்று கண்ணீர்மல்க கூறுகிறார் நிர்மலா.

## டயரியைக் காணவில்லை!


பொப்புயல், கவர்ச்சித் தாரகை மடோனா ஆழ்ந்த கவலையில் இருக்கிறார். தன் குழந்தையுடன் விளையாடக்கூட நேரமில்லாமல். கவர்ச்சிச் சேவையால் பல்லாயிரம் ரசிகர்களை மகிழ்விப்பவர் மடோனா. அவருக்கே கவலை என்றால் ரசிகர்களின் கதி என்னாவது?

கவலைக்கு காரணம் ஒரு டயறி. மிக மிக அந்தரங்கமான டயறியாம். கடந்த ஆண்டு தான் கர்ப்பமானதில் இருந்து அந்த டயரியில் முக்கிய அந்தரங்க அனுபவங்களை எழுதி வைத்திருந்தாராம். திடீரென்று டயரி காணாமல் போய்விட்டது.

'டயரியைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் தரப்படும்' என்று பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்திருக்கிறார். ஆனால் யாராவது கண்டெடுத்தாலும் அதனை மடோனாவிடம் கொடுக்க மாட்டார்கள்.

ஏராளமான பணம் கொடுத்துவாங்கி, அதனை பிரசுரம் செய்ய எத்தனையோ புத்தக நிறுவனங்கள் தயாராக உள்ளன.

## 'ராட்சதர்' பிரிவில் டைசன்



குத்துச் சண்டை வீரர் மைக் டைசனின் உருவச்சிலையை ஹொலிவூட் மெழுகு மியூசியத்தில் வைத்திருந்தார்கள். விளையாட்டு வீரர்கள் பிரிவில் அந்தச் சிலை இருந்தது.

ஹொலிபீல்ட்டின் காதை டைசன் செமகடி கடித்த பின்னர் அந்த மெழுகுச்சிலையை இடம்மாற்றிவிட்டார்கள். நரமாமிசம் உண்ணும் 'ராட்சதர்கள்' பிரிவில் இப்போது டைசனின் உருவச்சிலை வைக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் குத்துச்சண்டை வீரர் முகமத் அலி 'டைசனுக்கு அது கிடையாது' என்று கூறியிருக்கிறார். அவர் கூறிய து டைசனின் மூளையை. டைசனின் கடியை அடுத்து அமெரிக்க பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் 'கடி' என்ற வார்த்தை பிரபலமாகியிருக்கிறது. ஒரு தொலைக்காட்சி 'கடி' என்ற சொல் இடம்பெறும் பாடல்களை ஒளிபரப்பித் தள்ளியதாம்.

## தோண்டப்படும் சவக்குழிகள்



அதிபர் நாற்காலியில் ↑ அவன் இருந்தது நான்கே நான்கு ஆண்டுகள்தான். கொல்லப்பட்டதோ கிட்டத்தட்ட முப்பது இலட்சம் மக்கள். நம்புவதற்கு கஷ்டமான இந்த மனித வேட்டைக்கு சொந்தக்காரன் பொல்பொட். கம்பூச்சிய முன்னாள் அதிபர். கொலையானவர் எண்ணிக்கை கம்பூச்சிய சனத்தொகையில் கால் பங்கு என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



பொல் பொட்

பொல்பொட்டின் வெறியாட்டத்துக்கு அமெரிக்க அரசும் ஆதரவளித்தது. இறுதியாக சோசலிச வியட்நாம் படைகள் 1979ல் கம்பூச்சியாவுக்குள் புகுந்து பொல்பொட் ஆட்சிக்கு முடிவு கட்டின.

பொல்பொட் கால சவக்கிடங்குகள் பல தோண்டப்பட்டபோது எலும்புக்கூடுகளும், மண்டையோடுகளும் வகை தொகையின்றி குவிந்தன. அக் கிடங்குகள் ஒன்றில் இருந்து எடுக்கப்பட்டவைதான் இங்கே காணப்படுகின்றன.

ஆட்சிபோன பின்னர் தலைமறைவாக இருந்த பொல்பொட் கடந்த ஜூன் மாதம் 18ம் திகதி கம்பூச்சிய அரசிடம் சரணடைந்துள்ளான். பொல் பொட்டின் படையில் இருந்த ஒருவர் தன் அனுபவத்தை பின்வருமாறு கூறுகிறார்:

"வியட்நாமுக்கு ஆதரவான 10 ஆயிரம்பேர் படு கொலையானபோது அதில் நானும் கலந்து கொண்டு உத்தரவை நிறை வேற்றினேன். அப்போது நான் சிறுவன். முதலில் மனித கல்லீரல் கலக்கப்பட்ட மது பானத்தை குடிப்பேன். பின்னர் போதையுடன் நாள் முழுவதும் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுவேன். சூடுபட்டவர்கள் விழுந்து விழுந்து துடித்து, துடித்து செத்துப்போவார்கள்"





## தேனீத்தாடி

← 1969ல் ஓய்வு பெற்ற பொறியியலாளர் டொன் குக்கீ தேனீக்கள் கொண்ட 17 அங்குலத்தாடியை வளர்த்திருக்கிறார்.

இத்தாடியில் மொத்தம் 21,000 உயிருள்ள தேனீக்கள் உள்ளனவாம்.

முதன் முதலில் 1970களில் ஒரு ராணித் தேனியை ஒரு சிறு பேழையில் வைத்து தனது வலது காதுக்குக் கீழ் ஒட்டிவிட்டார். மறு நாளே தேனீக்கள் வந்து குவியத்தொடங்கின. இத்தேன்வதையை தேவையானபோது எடுத்து தன் முகத்துடன் இணைத்துக் கொள்ளுகிறார். வேண்டாதபோது பிரித்தெடுத்துத் தன் அருகிலேயே வைத்து விடுகிறார். தாடியின் எடை 6 இறாத்தல்.

தேனீக்கள் மனிதர்களைக் கொட்டி பெருவலியை உண்டாக்கும் தன்மையுள்ளன என்றபோதும் அவற்றைப் பக்குவமாகக் கையாளும்போது அவை தீங்கு செய்யப் போவதில்லை என்கிறார் குக்.

பண்ணைகளில் நடைபெறும் கண்காட்சிகளில் டொன் தன்னுடைய தேனீத்தாடியைக் காண்பித்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்று வருகிறார்.

தேன் தாடியுடனிருக்கும் போதே திருமதி குக் தன் கணவனுக்கு முத்தங்கள் கொடுப்பதுண்டாம். அப்போதும் தேனீக்கள் ஒத்துழைப்புத் தருகின்றன என்கிறார் அவர். கில்லாடி குக்.

## சுத்தம் சுகம் தரும்

↑ ஜாலியான நுரைக் குளியல். குளித்தபடியே பல் துலக்குகிறார் குரங்கார். ஜெர்மன் உயிரியல் பூங்காவில்தான் இப்படியான உபசரிப்புக் கிடைக்கிறது. ஒருவர் தலைக்கு ஷாம்பு போட்டு விடுகிறார். குளிப்பது, பல்துலக்குவது போன்றவற்றை சுயமாகவே செய்ய பயிற்சி கொடுத்திருக்கிறார்கள்.

சுத்தம் சுகம் தரும் என்பது குரங்காருக்கே தெரிகிறது. ஆனால் மனிதர்களில் சிலருக்கு தெரியவில்லையே...!

## தகவல் பெட்டி

↓ பாய்ந்து செல்லும் குதிரையில் இருந்து கவிழ்ந்து கொண்டிருக்கிறார் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, இது ஒரு சாகச விளையாட்டு. அதிவேகத்தில் குதிரை பாய்ந்து செல்லும்போது, அதன் மேலிருந்து சரிந்து பாதையில் கிடக்கும் தொப்பியை அணிந்துகொள்ள வேண்டும். சற்றுப் பிசகினாலும் தரையில் விழுந்து இடுப்பு உடைந்து போய்விடும். உக்ரேன் நாட்டில் கியேவ் நகரில்தான் ஆண்டுதோறும் இந்த வீரசாகசப் போட்டி நடத்தப்படுகிறது.

கியேவ் நகர் குதிரை வீரர்களுக்கு பெயர் பெற்றது. இப்போட்டி பாரம்பரியமாக நடத்தப்பட்டுவருகிறது.

## தொப்பென்று சரிந்து....



## திலர் முத்தம்

நாட்டியப் பேரொளி நடிகை பத்மினி நடிகை ஷோபனாவின் அத்தை. அமெரிக்காவில் உள்ள பத்மினியை பார்த்துவிட்டுவர பறந்து போனார் ஷோபனா. அத்தை மகன் ஆனந்துடன் நியூஜெர்ஸி 42வது தெருவில் நடந்து சென்ற போது அந்த விபரீதம் நடந்ததாம்.

ஒரு கறுப்பின ரௌடி துப்பாக்கியுடன் எதிர்ப்பட்டானாம். அவனிடம் கையில் உள்ள டொலர்களையெல்லாம் கொடுக்க முன்னர் தான் ஒரு நடிகை என்று சொன்னாராம் ஷோபனா. சிரித்த ரௌடி திடீரென்று ஷோபனாவின் உதட்டில் 'இச்' கொடுத்து விட்டு போய்விட்டானாம். மூர்க்கமான முத்தம்.

## ரஜினியின் புதிய படம்

ரஜினியின் அடுத்த படத்தின் பெயர் 'அலெக்ஸ்' இது குமுதம் வெளியிட்டுள்ள தகவல். 'மூன்று முகம்' படத்தில் ரஜினிக்கு மூன்று வேடம். அதில் முரட்டு இன்ஸ்பெக்டராக நடித்த பாத்திரப் பெயர்தான் 'அலெக்ஸ்'.

புதிய படத்துக்கு இசை: இளையராஜா. கதாநாயகி சவுந்தர்யாதானாம். மீனாவும் விண்ணப்பம் போட்டுள்ளாராம்.

ஆனாலும் இத்தகவலை ரஜினியே தன் வாயால் உறுதிப்படுத்தும்வரை சந்தேகத்துக்குரியதுதான்.

## ஒரே இரத்தமயம்

டாக்டர் ராஜசேகர் நடித்து திரைக்கு வந்துள்ள படம் 'ஓம்'. டப்பிங் படமல்ல. நேரடியாக தமிழிலும், தெலுங்கிலும் எடுக்கப்பட்ட படம். இங்கு வீடியோவில் பார்க்கலாம். படம் ஆரம்பித்து முடியும் வரை ஒரே வெட்டு, குத்து, இரத்தம்.

'ஜென்டில்மேன்' படப்பாணியில் டாக்டர் ராஜசேகரின் கல்லூரிகால மேக்-அப். ஜயர் வீட்டுப் பையனாக அடக்கமாக வரும் ராஜசேகர் மனதில் நிற்கிறார். 'இதுதாண்டா பொலிஸ்' அளவுக்கு இல்லையானாலும், அடி தடிப் பிரியர்கள் பார்க்கலாம். தமிழ்நாட்டில் பிரமாதமாக ஓடுவதாகத் தெரியவில்லை. ராஜசேகர் பெரிதாக நம்பியிருந்த அளவுக்கு வசூலில் கைகொடுக்கவில்லை.

## 'அங்கே சாதாரணம்'

'தாயின் மணிக்கொடி' படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடிப்பவர் நிவேதிதா. தனது படங்களில் முத்தக் காட்சி இருக்காது என்று முன்பு கூறிய அர்ஜுன் முடிவை மாற்றிவிட்டார். நிவேதிதாவுக்கு வஞ்சகம் இல்லாமல் கொடுத்திருக்கிறார். கமல் பாணியில் இதழோடு இதழ் சேர்த்திருக்கிறார்.

முடிவில் மாற்றம் ஏன்? "நானாக எடுக்கவில்லை. படப்பிடிப்புக்காக சுவிஸ் போயிருந்தபோது அங்கே ரோட்டோரத்தில் எல்லோரும் முத்தமிட்டுக் கொள்வதைப் பார்த்தேன். முத்தம் சாவசாதாரணம் என்று தெரிந்ததும் நானும் கொடுத்துவிட்டேன்" என்கிறாராம்.

## மீண்டும் உத்தம புத்திரன்

இயக்குநர் கே. எஸ்.ரவிக்குமார் சிவாஜியுடன் அர்ஜுனை நடிக்கவைத்து படம் எடுக்கும் யோசனையில் இருக்கிறார். அர்ஜுன் ஜோடியாக கன்னட நடிகை பிரேமாவை நடிக்கவைக்கப்போகிறார். 'ஓம்' படத்தில் நடித்துள்ள பிரேமாதான். படத்திற்கு வைத்துள்ள பெயர் என்ன தெரியுமா? 'உத்தம புத்திரன்'. தனது பழையப் படப் பெயரிலேயே நடிக்கச் சம்மதித்துள்ளார் சிவாஜி. சிவாஜிக்கு முன்னர் பி.யூ.சின்னப்பா நடித்த படத்தின் பெயரும் 'உத்தம புத்திரன்'.





விஷ்ணு-பூஜா
படம்: காதல் ரோஜாவே

## கற்றதால் பயன்

தமிழில் நடிக்கும் போது நெளிவு சுழிவுகள் தெரியாமல் வாய்ப்புக்களை இழந்தவர் கஸ்தூரி. யாரை அனுசரிக்க வேண்டும் என்று கற்றுக்கொள்ளவில்லையாம். இப்போது அனுபவம் பெற்றுவிட்டார். தெலுங்கில் புகுந்து விளையாடுகிறார். ஆறு படங்கள் கைவசம் இருக்கிறதாம்.

கவர்ச்சி நாயகியாக வலம்வரும் கஸ்தூரி சமனுடன் நெருக்கமாக காணப்படுகிறார். இருவரும் இணைந்து நடித்த 'அன்னமய்யா' தெலுங்கில் பயங்கரமாக ஓடுகிறதாம்.

நடிகர் [illegible]
நாகார்ஜுனுடன் இணைத் [illegible]
துப் பேசப்பட்ட நடிகைகள் பட்டிய[illegible]
லில் இறுதியாக சேர்ந்திருப்பவர் [illegible]
நக்மா, மனிஷா கொய்ராலா, [illegible]
தபு, ரம்பா என்று பல நடிகைக[illegible]
பழகியவர் நாகார்ஜுன். "நாகார்ஜு[illegible]
தெரியும். அதனால்தான் பொழுது [illegible]
அவருடன் அரட்டை அடிப்பேன்" [illegible]
கிறார் சிம்ரான்.
தமிழில் அப்பாஸ், தெலுங்கில [illegible]
என்று ஒவ்வொரு மொழிப் பட[illegible]
ஹீரோவை கைவசம் வைத்திருக்கிற[illegible]
இதன் மூலம் இந்திய தேசிய ஒருமை[illegible]
உழைக்கிறாரோ?

## வாய்ஜாலம்

கல்லூரியில் படித்த போது நடந்த உண்மைச் சம்பவங்களை வைத்து ஒரு காதல் படத்தை தயாரிக்கப் போகிறாராம் சின்னி ஜெயந்த். கதாநாயகன் அப்பாஸ். படத்திற்கு வைத்துள்ள பெயர் 'வாய்ஜாலம்'. கதாநாயகி இன்னமும் முடிவாகவில்லை.

## ஒற்றுமை

சங்கவிக்கும் மந்த்ராவுக்கும் இடையே பல விஷயங்களில் ஒற்றுமை இருக்கிறது. கவர்ச்சி, தாராளம், இணைந்து நடிப்பவருடன் அன்பில் நனைந்துபோவது, மற்றும் தமது உதவியாளர்களை அடிக்கடி மாற்றுவது.

படம்: 'மின்ஸ[illegible]

திரையுலக மறுபக்கம் 14 மித்ரவாசு

# காதலில் கரை கடந்த நடிகர் உதவ மறுத்த நடிகர்கள்!

காதலில் கரை கண்ட, கரையும் கடந்த நடிகர் அவர். கொஞ்சி கொஞ்சிப் பேசியே உடன் நடித்த நடிகைகளை மயக்கிய வினாயகர் அவர். உள்ளம் உருகப்பேசுவதுதான் அவரது சாதுர்யம்.

அந்த நடிகரும், பத்திரிகை தொடர்பாளர் ஒருவரும் படப்பிடிப்பு இல்லாத ஒரு நாளில் காரில் உலா போயிருக்கின்றனர்.

இருவரும் பேசிக்கொண்டே சென்றபோது வழியில் பத்திரிகைத் தொடர்பாளர் கண்களில் ஒரு வீடு தென்பட்டது. "அடடே... இங்கே... நடிகை இருக்கிறார். அவரோட அம்மாகிட்ட ஒரு விஷயம் பேசணும். கொஞ்சம் உதவிபண்ண முடியுமா?" என்று கேட்டிருக்கிறார்.

நடிகரும் "அதனாலென்ன, தாராளமா பேசிட்டு வாங்க, அதுவரை எனக்கு பொழுது போகணுமே. நானும்கூட வர்றேன்." என்றதும் பத்திரிகைத் தொடர்பாளருக்கு சந்தோஷமாகிவிட்டது.

வீட்டுக்குள் போனதும் பத்திரிகைத் தொடர்பாளருடன் நடிகரைப் பார்த்ததும் நடிகையின் அம்மாவுக்கு சந்தோஷத்தில் உதறலாகிவிட்டது. தனது மகளோடு பல படங்களில் நடிகர் ஜோடி சேரப் போகிறார் என்று கனவு காண ஆரம்பித்துவிட்டார். அது நடிகையின் அம்மாவின் கண்களில் மிளிர்வதை நடிகரும் கவனித்துவிட்டார். அதுதானே அவருக்கும் வேண்டும்.

பேச்சுவாக்கில் "உங்க மக எத்தனை படங்கள் பண்ணிக்கிட்டிருக்கு?" என்று நடிகர் கேட்டார். நடிகையின் அம்மா கெட்டிக்காரி. "எம் மக மாடியிலதான் இருக்கா, நீங்களே கேட்டுக்கங்க." என்று நடிகரை மாடிக்கு அனுப்பிவைத்தார்.

மாடியில் நடிகரைப் பார்த்த நடிகைக்கு அதிர்ச்சி. பேச்சு வரவில்லை. இயல்பான நிலைக்கு நடிகை வருவதற்கு முன்னர் நடிகர் தன் காதல் வசனங்களை எடுத்துவிட்டு போதைக்குள்ளாக்கிவிட்டார்.

அடுத்த நிமிடம் நடிகை அந்த நடிகரின் கரங்களில்.

பத்திரிகைத் தொடர்பாளருக்கு சிறிய சந்தேகம். மாடிக்குப் போன நடிகரை ஒரு மணிநேரமாகியும் காணோமே என்று. அதற்கு மேல் நேரத்தை நீடிக்கவிடாமல் நடிகர் மாடியிலிருந்து இறங்கிவந்தார்.

"உங்க பொண்ணைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று நடிகையின் தாயாரிடம் ஆறுதலாக சில வார்த்தைகளை வீசிவிட்டு நடையைக் கட்டினார்.

பிரபு முன்னாள் மூவேந்தர் நடிகர்களில் ஒருவர் அவர். அவருடன் ஒரு ஸ்ருடியோவின் பெயரும் இணைந்திருக்கும். தற்போதும் நடித்து வருகிறார், காதலில் மன்னர்.

### உதவத் தயக்கம்

ஸ்டண்ட் மாஸ்டர் ஜூடோ ரத்னம் குழுவில் பிரதான உதவியாளர்களாக இருந்தவர்கள்தான் சூப்பர் சுப்பராயனும், ரவியும். 'நாளை உனது நாள்' படப்பிடிப்பில் சண்டைக் காட்சியில் நடித்தபோது அடிபட்டு ரவி இறந்துபோனார்.

விஜயகாந்த், பிரபு இருவர்மீதும் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தவர் ரவி. அதனால் விஜயகாந்த் ரவியின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் நிதி உதவி செய்தார். பிரபு ஆயிரம் ரூபாய் கொடுத்தார். ரவிக்கு சம்பந்தமில்லாத நடிகை நளினியோ அனுதாபத்துடன் 5 ஆயிரம் ரூபா கொடுத்தார்.


அந்த ஆறெழுத்து கமல நடிகரோ, 'நாமெல்லாம் இருக்கும்போது விஜயகாந்தும், நளினியும் ஏன் முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக்கொண்டு பணம் தரவேண்டும்' என்று எரிச்சல்பட்டிருக்கிறார். அந்த நடிகருக்கு பெரும்பகுதி படங்களில் டூப்பாக நடித்தவர்தான் ரவி.

அதேசமயத்தில் ஷைாம்நகர் லயன்ஸ்கிளப் உடல் ஊனமுற்றோருக்காக நட்சத்திரக் கிரிக்கெட் போட்டி ஒன்றை நடத்தியது. போட்டி முடிவில் நட்சத்திரங்கள் அனைவரின் கையொப்பம் கொண்ட இரண்டு கிரிக்கெட் மட்டைகள் ஏலம் போயின.

முதலாவது மட்டையை கங்கை அமரன் ஏலம்விட, யாரும் கேட்பாரின்றி நடிகை சுஜாதாவின் கணவர் ஜெய்கர் ரூ.5,100க்கு ஏலம் எடுத்தார்.

இரண்டாவது மட்டை ஏலம் விடப்பட்டபோது யாரும் கேட்காததால் மீண்டும் ஜெய்கரே 2 ஆயிரம் ரூபாய்க்கு கேட்டார். கங்கை அமரன் பிரபுவின் பெயரைச் சொல்லி '2,500 ரூபாய்' என்று சொன்னதற்கு, பிரபு வாயில் விரலைவைத்து 'உஷ், பேசாம இருங்க' என்று அடக்கினார்.

அடுத்தது பாரதிராஜாவை கங்கை அமரன் அழைக்க, அவர் வேறுபுறம் சென்றுவிட்டார். கார்த்திக் உட்பட பலரும் ஒதுங்கிக்கொண்டுவிட, இறுதியில் நட்சத்திரங்களின் மானம் காக்க விசு 5 ஆயிரம் கொடுத்து கிரிக்கெட் மட்டையை ஏலம் எடுத்தார்.



நாகார்ஜுனா-எஸ்.பி.பாலசுப்ரமணியம்
படம்: ரட்சகன்

## சினி துளி

* நடிகர் திலகம்-விஜய் நடித்த 'ஒன்ஸ்மோர்' படத்திற்கு கலகலப்பூட்டிய வசனங்களை எழுதியவர் ராஜ்குமார் என்ற புதுமுகம். இவர் முதன் முறையாகப் படமொன்றை இயக்கவிருக்கிறார். இப்படத்தில் பிரபு கதாநாயகனாக நடிக்கிறார்.

* தெலுங்கில் அதிக படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் கஸ்தூரி, 'லவ் மேன் ஆர்மி' என்னும் பெயரில் தெலுங்கு-கன்னடம் ஆகிய இரு மொழிகளில் உருவாகும் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* நாசர் முதலில் இயக்கி நடித்த 'அவதாரம்' படத்தை இந்தி நடிகர் ஓம்புரி அண்மையில் பார்த்தார். விளைவு? 'அவதாரம்' இந்தியில் படமாகப் போகிறது. நாசர் வேடத்தில் இந்தியில் ஓம்புரி நடிக்கிறார்.

* நாகார்ஜுனா-அமலா தம்பதிகளின் மகன் அகில் நடித்த படம் 'சுட்டிக் குழந்தை'. தற்போது 'பேபிக் குழந்தை' என்னும் பெயரில் புதிய படமொன்று தயாராகி வருகிறது.

* சிவகுமாரின் மகன் சூர்யா நடிக்கும் 'காதலே நிம்மதி' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடிக்கவிருக்கிறார் முரளி. இவர் இதற்கு முன்னர் 'பூவே உனக்காக' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடித்திருக்கிறார்.

* ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் இயக்கி விரைவில் வெளியாகவுள்ள 'மனசு' படத்தை தயாரித்தவர் ஷீலா என்பவர். அப்துல் ரகுமான் அடுத்து இயக்கும் படத்தையும் ஒரு பெண்ணே தயாரிக்கிறார்.

* சத்யராஜ் நடிக்கும் 'பெரிய மனுஷன்' படத்திற்கு முதலில் சிற்பி இசையமைப்பதாக இருந்தது. தற்போது சிற்பிக்குப் பதிலாக இந்தப் படத்திற்கு தேவா இசையமைத்து வருகிறார்.

* சரண் இயக்கத்தில் 'காதல் மன்னன்' படத்தின் மூலம் நடிகராக அறிமுகமாகும் எம்.எஸ். விஸ்வநாதன், அடுத்து 'அம்மாவி அம்மா' என்ற மலையாளப்படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கவுள்ளார்.

* 'செல்வா' படத்தில் விஜய் ஜோடியாக அறிமுகமான ரீவா, இப்போது தமிழில் 'ரோஜா மலரே' என்ற படத்தில் நடித்து வருகிறார். இவர் 'பண்டிட் குயின்' படத்தை இயக்கியுள்ள சேகர் கபூர் இயக்கும் இந்திப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* 'காதல் ரோஜாவே' படத்தின் மூலம் விஷ்ணுவைக் கதாநாயகனாக்கியிருக்கும் இயக்குநர் கேயார், தான் அடுத்து இயக்கும் படமொன்றிலும் விஷ்ணுவை கதாநாயகனாக நடிக்க வைக்கவுள்ளார்.

## 'மறவாதே கண்மணியே'

'உன்னோடு நான் இருந்த ஒவ்வொரு மணித்துளியும், மரணப் படுக்கையிலும் மறவாது கண்மணியே' இது இருவர் படத்தில் வரும் ஒரு பாடல். மறவாது கண்மணியே என்பதை 'மறவாதே கண்மணியே' என்று சிறிது மாற்றி ஒரு படத்தின் பெயராக சூட்டிவிட்டனர்.

'மஹாகிரியேஷன்ஸ்' என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம்தான் 'மறவாதே கண்மணியே'. படத்தில் இரண்டு கதாநாயகர்கள். ஒருவர் வினீத். இன்னொருவர் கரண். கதாநாயகிகளாக ரவளியும், ரேஷ்மாவும் நடிக்கின்றனர். முக்கிய வேடத்தில் சிவகுமார் நடிக்கிறார். என்.எம்.மாதவன் என்பவர் புதிய இயக்குநராக அறிமுகமாகிறார். இசை: மாஹாதுமார். இவரும் புது வரவுதான்.

## கமல்–ரஜினிமீது பாய்ச்சல் சிஷ்யர்கள் மீது குருகோபம்

## சினி விசிட்

தமிழ்ப்பட தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்களோடு மல்லுக்கட்டிகிருக்கிறார்கள் சினிமா உலகத் தொழிலாளர்கள்.

இந்த மோதலில் கமலும், ரஜினியும் சினிமா தொழிலாளர்கள் பக்கம் நிற்கின்றனர். இதனால் பாலசந்தர் அவர்கள்மீது கோபத்தில் இருக்கிறார்.


தமிழ்த் திரைப்பட படைப்பாளிகள் சங்கம் என்ற புதிய அமைப்பை உருவாக்க பாலசந்தர், பாரதிராஜா, பாலுமகேந்திரா ஆகியோர் முயற்சி எடுத்துள்ளனர். இவர்கள் அது தொடர்பாக கூடிப்பேசியபோது சினிமா தொழிலாளர்கள் திரண்டு சென்று தாக்கியுள்ளனர். பாலசந்தரும், பாரதிராஜாவும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்கள்.

இயக்குநர்கள் தாக்கப்படுவதாக அறிந்து நடிகர் சங்கத் தலைவர் ராதாரவி கட்டிய லுங்கியுடன் சென்று தலையிட்டுத் தடுத்திருக்கிறார்.

அவரை கட்டிப்பிடித்து பாராட்டிய பாலசந்தர் எல்லோருக்கும் கேட்கும்படியாக, "நான் என் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு அந்த இரண்டு பேரையும் அறிமுகம் செய்ததுதான்" என்று சொல்லியிருக்கிறார். இந்த விடயம் தமிழக முன்னணிப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது.

செய்தியறிந்த கமல் பாலசந்தருக்கு ஃபோன் செய்தாராம். பாலசந்தர் ஃபோனுக்கு வரவில்லை. 'நான் உயிருடன் இருக்கிறேன் என்று சொல்லு' என்று தன் மனைவியை சொல்லச் சொன்னாராம்.

குருவுக்கும் சிஷ்யர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசலைத் தீர்க்க சில திரையுலகப் பிரமுகர்கள் முயற்சி செய்துவருகிறார்கள்.



## மற்றொரு பாலசுப்பிரமணியம்

சட்டென்று எட்டத்தில் பார்த்தால் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்தான் என்று ஏமாந்துபோவோம். நடைகூட அப்படித்தான். அவர்தான் கே.பி. மோகன். 'தேவதை' படத்தில் வினீத்தின் நண்பராக வந்து நகைச்சுவை பண்ணுகிறார். ரசிகர்களிடம் பலத்த வரவேற்பு கிடைத்துள்ளது.

பாடுவதற்காக விரும்பியவரை கட்டாயப்படுத்தி 'தேவதை'யில் நடிக்க வைத்தவர் நாசர்தான். 'உல்லாசம்' படத்திலும் மோகனை சிபாரிசு செய்தவரும் நாசர்தானாம். 'தேவதை' படத்தில் ஒரு பாடலையும் பாடியிருக்கிறார் மோகன்.

சிறந்த மேடைப் பாடகருக்கான விருதுகள் வாங்கியிருக்கிறார். பதினைந்து கன்னடப் படங்களுக்கு இசையமைத்திருக்கிறார்.

மோகனைப் பார்த்த எஸ்.பி. பாலசுப்பிரமணியம் "என்னப்பா இத்தனை குண்டாக இருக்கியே, நீ என்கூட இருந்தால் நல்லது, என்னை யாரும் குண்டு என்று சொல்லமாட்டார்கள்." என்று ஜோக் அடித்தாராம். 'தேவதை' படத்தின் பின்னர் புதிய படங்கள் பலவற்றில் ஒப்பந்தமாகியுள்ளார் மோகன்.

## தபு- ஐஸ்வர்யா ஜோடி நாயகன் வெங்கடேஷ்

பிரபல தெலுங்கு நடிகர் வெங்கடேஷ். தெலுங்கில் வெங்கடேஷ் நடித்த பல படங்கள் தமிழில் மொழிமாற்றப்பட்டுள்ளன. முதன் முதலாக தமிழில் நேரடியாக நடிக்கப்போகிறார் வெங்கடேஷ்.

மலையாள நடிகர் மம்முட்டியை தமிழில் அறிமுகம் செய்த கோவை செழியன்தான் வெங்கடேஷையும் அறிமுகம் செய்கிறார்.

வெங்கடேஷ் ஜோடியாக ஐஸ்வர்யாராயும், தபுவும் நடிக்கப்போகின்றனர். படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டவில்லை.

## 'பார்த்து நடத்துங்க'

மணிரத்னத்தின் துணைவியான சுஹாசினி நடித்துள்ள 'நந்தினி' படம் திரைக்கு வந்திருக்கிறது. 'இந்திரா' படத்தை இயக்கிய பின்னர் நந்தினியில் நடிப்பதற்கு இடையே நான்கு கன்னடப் படங்களில் நடித்து முடித்தார் சுஹாசினி. அதில் 'அமிர்தவர்ஷினி' என்ற படம் நூற்றைம்பது நாட்களைத் தாண்டி வெற்றி நடை போடுகிறதாம். அதைத்தான் தமிழில் 'உயிரினும் மேலாக' என்ற பெயரில் மொழிமாற்றி வெளியிடப் போகிறார்கள்.

'அமிர்தவர்ஷினி'யில் சுஹாசினிக்கு ஜோடி சரத்பாபு. நெருக்கமான காட்சிகள் உண்டாம். தனது பதினேழு வருட சினிமா அனுபவத்தில் சற்று நெருக்கம் கூடிய படம் இதுதான் என்கிறார் சுஹாசினி. இன்னொன்றும் சொல்கிறார்: "ஆரம்பத்திலேயே சரத்பாபு சாரிடம் சொல்லிவிட்டேன், பார்த்து... அப்புறம் அடி விழுந்தால் என்னைக் கேட்கக்கூடாது என்று" பார்த்துத்தான் நடத்தாரா என்பது படத்தைப் பார்த்தால்தான் தெரியும்.

## காதோடு சொல்லுகிறோம்

வள்ளி நாயகியான பிரியமானவர் தன் பெயரின் பின்னால் இருந்த இதிகாசமான நாயகன் பெயரை நீக்கிவிட்டு புதுப்பெயரை இரகசியமாக நுழைத்திருக்கிறார். ஏன்? எல்லாம் காதல் செய்த லீலைதான். பிரிய நடிகைக்கு பிரியமானவர் முன்னணி மலையாள இயக்குநராம். நடிகை மலையாளத்தில் பிஸியாக தட்டிக்கொடுத்து ஊக்குவித்தது அவர்தானாம். விரைவில் கல்யாணச் செய்தி வரக்கூடுமாம்.




'சக்தி' மிக்க ஒரு இயக்குநரின் படத்தில் நடித்துக்கொண்டிருந்தார் 'பூ' நடிகை. அடுத்த காட்சிக்கு அழகான குழந்தை ஒன்று தேவைப்பட்டதாம். வரவழைக்கப்பட்ட குழந்தைகள் இயக்குநர் எதிர்பார்த்தபடி இருக்கவில்லை. உடனே 'பூ' நடிகை தனக்கு தெரிந்தவர் வீட்டில் அழகான குழந்தையொன்று இருப்பதாகச் சொல்லிவிட்டு புறப்பட்டுச் சென்றாராம். இரண்டுமணி நேரத்தின் பின்னர் குழந்தையுடன் திரும்பினாராம் நடிகை. 'ட்ரை பண்ணினேன் கிடைக்கவில்லை' என்றாராம். குழந்தை கிடைக்காவிட்டாலும் நடிகையின் ஈடுபாட்டைக் கண்டு இயக்குநர் நெகிழ்ந்து போனாராம். ஆனால் அந்த இரண்டு மணி நேரமும் தனது காதல் இயக்குநருடன்தான் சுந்தரமாக இருந்துவிட்டு வந்தாராம் நடிகை. அந்த விடயம் பாவம் அந்த இயக்குநருக்கு தெரியாதாம்.

இரகசியமாக திருமணம் செய்ய முடிவு செய்து விட்டார் பெயரில் சங்கீதத்தை உள்ளடக்கிய இரண்டெழுத்து நடிகை. மணமகன் மலேசிய தொழிலதிபராம். தன் கைவசமுள்ள தமிழ், மலையாளப் படங்களை முடித்துக் கொடுத்துவிட்டுத்தான் திருமணமாம். ஏன்? திருமணத்தின் பின் நடிக்கக் கூடாது என்று தொழிலதிபர் நிபந்தனை போட்டுள்ளாராம். தொழிலதிபருக்கு கையளவு மனகதானாக்கும்.

திருமூர்த்தி நாயகியாக தமிழில் அறிமுகமாகி, 'பா' இயக்குநரும் நடிகருமானவரால் சீமைப்பசு என்று செல்லமாக அழைக்கப்படுபவர் 'ர' நடிகை. 'சத்ய'மான நடிகரையும் தற்போது அசத்திக் கொண்டிருக்கிறாராம். 'கருதி' சரியில்லை என்று ஒரு நடிகையை விலக்கிவிட்டு, தன்னை சிபாரிசு செய்ததுக்கு நன்றிக்கடன் செலுத்துகிறாராம்.

இரண்டெழுத்தால் சுருக்கமாக அழைக்கப்படும் இயக்குநரின் படங்களில் அதிகமாக நடித்தவர் அந்த இரண்டெழுத்து நடிகை. இப்போது நடிகைக்கும் இயக்குநருக்கும் இடையே விரிசல். இயக்குநர் நடிகையை கிளீன் போல்ட்டாக்கிவிட்டாராம்.

## வினீத் – சவுந்தர்யா

'தேவதை' படத்தின் பின்னர் வினீத் காட்டிலும் மழை எட்டிப் பார்க்கிறது. பல புதிய படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.

வினீத்-சவுந்தர்யா ஜோடியாக நடிக்கும் புதிய படத்துக்கு 'காதலிக்கலாம் வா' என்று பெயர் சூட்டியுள்ளனர். இப்படத்தில் மூன்று ஜோடிகள். எஸ்.பி. பாலசுப்பிரமணியம், லட்சுமி ஒரு ஜோடியாகவும், ரகுவரன், ராதிகா மூன்றாவது ஜோடியாகவும் நடிக்கின்றனர். மணிவண்ணன், வடிவேலு ஆகியோரும் உண்டு. இயக்கம் கே.வீரு. இசையும் அவரே. பாடல்கள் எழுதுவதோடு, படத்தின் வசனத்தையும் எழுதுகிறார் வைரமுத்து. தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தயாராகிறது.

# சின்னத் திரையும் சின்னஞ் சிறிசுகளும்

**நா**ம் சிறு பராயத்திலிருந்தபோது எமக்கிருந்த அறிவைப் பார்க்கிலும் இன்றுள்ள ஏழு எட்டு வயதுப்பிள்ளைகளின் அறிவாற்றல் பன்மடங்கு அதிகமாகிவிட்டது. பாடசாலைகளில் பெறும் கல்வியினால்தான் இந்த அறிவு வளர்ச்சி அதிகரித்து விட்டது என்று கூற முடியாது. பிரதானமாக தொலைக் காட்சியின் படையெடுப்பு பட்டி தொட்டி களையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளமையும் காரணமாகும்.

நம்வீட்டுச் சிறுவர்கள்-நம்வீட்டில் தொலைக்காட்சிப்பெட்டி இல்லாவிட்டாலும்- அயல் வீடுகளுக்குச் சென்று நிகழ்ச்சிகளைப் பார்த்து விடுகிறார்கள்.

பிள்ளைகளின் அறிவு-தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினால் எத்திசையை நோக்கி வளர்ச்சி அடைகிறது என்பதைப் பொறுத்தே- முக்கியமாக வீட்டில் தங்கி இருக்கும் தாய்மார்-கவனம் செலுத்தியாக வேண்டிய கால கட்டத்திலுள்ளனர்.

நம்நாட்டைப் பொறுத்தவரை இன்று தமிழ் நிகழ்ச்சிகள் அதிகரித்திருப்பது பாராட்டத்தக்க ஓர் அம்சம்தான். ஆனால் அந்நிகழ்ச்சிகள் அயல் நாடான தமிழ் நாட்டில் உருவாக்கப்பட்டவை. அவற்றில் மிகத் தரமான நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன என்பதனையும் மறுப்பதற்கில்லை, இருப்பினும் அந்நிகழ்ச்சிகளில் இடம்பெறும் தமிழ்த்திரைப் படங்களில் பல நம் நாட்டுச் சிறுவர்களுக்கு உகந்தவையல்ல என்பதை மறுக்க முடியாது. அத்தகைய படங்கள் உள்ளூர்த் திரைப்பட மாளிகைகளில் காட்டப்பட்டால் நாம் அவர்கள் போய்ப் பார்ப்பதற்கு அனுமதிக்கவே மாட்டோம்.

படிப்பில் கவனம் செலுத்த வேண்டிய கடமையுள்ள பிள்ளைகளின் பெரும் பொழுது சின்னத்திரையின்பால் கவர்ந்திழுக்கப்பட்டு விடுகிறது.

சுமார் 8 வயதுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள், தாங்கள் முதல்நாளிரவு தொலைக்காட்சியில் பார்த்து இரசித்த காட்சிகளைப் பற்றி அடுத்தநாள் தங்கள் பாடசாலையில், சக மாணவ-மாணவிகளுடன் விமர்சிப்பதைக் காணலாம்.

இவர்களில் பெரும்பாலானோர் இரவில்-பெற்றாருடன் சேர்ந்து படம் பார்ப்பதால் போதுமான நேரம் தூங்காமல்- அடுத்த நாள் வகுப்பில் கொட்டாவிவிட நேரிடுகிறது.



வீட்டு வேலைகளையும் ஒழுங்காகச் செய்யாமல் வகுப்பில் ஆசிரியர்களிடம் தண்டனை பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது.

தொடர்ந்து தொலைக் காட்சி பார்ப்பதால் கண்களும் பாதிப்படைகின்றன. ஏனைய தாக்கங்கள் மூளையையும் உடலையும் பாதிக்கின்றன.

சாதாரண தரத்திலுள்ள எம் இல்லங்கள் ஓரிரு அறைகளைக் கொண்டதாகவே உள்ளன. தொலைக்காட்சிப் பெட்டியை-பெரியவர்கள் மட்டும் பார்க்கக் கூடிய ஓரிடத்தில் வைத்துவிடவும் வசதி இருப்பதில்லை. தமது பிள்ளைகளின் நலனுக்காகவேனும் தொலைக் காட்சியைப் பார்ப்பதை அளவோடு வைத்துக் கொள்ளவேண்டியது பெற்றோர்களின் பொறுப்பு.

# தாய்மாருக்கு தேவையான பயிற்சி

**எ**வ்வளவு தேகாரோக்கியத்துடன் வாழ்ந்தாலும் சில பெண்கள் முதல் பிரசவத்தின் பின்னரோ அல்லது இரண்டாவது பிரசவத்தின் பிறகோ உடல் நலமிழந்து விடுகிறார்கள். குறிப்பாக உடலின் சில சில அங்கங்களில் காரணம் எதுவுமின்றி உபாதைகள் ஏற்பட்டு விடுகிறது. கைகால்களில் நோவு தோன்றும். சாதாரணமாக ஏதாவது நோ நீக்கும் களிம்புகளைத் தடவினால் குணமாகிவிடும். பலருக்கு இந்நோ தற்காலிகமாகத்தான் குறையும். சரியான மருத்துவ பரிசோதனை செய்து மருந்து பாவிக்காவிட்டால் இதே நோவு தொடர்ந்து பெரு வேதனையாகிவிடும்.

கால்களில் தொடங்கும் வேதனை படிப்படியாக கைகள், இடுப்பு, முதுகு ஆகிய இடங்களுக்கும் பரவிவிடும். நிற்கவோ நடக்கவோ முடியாமல்-எந்த வேலையும் செய்ய முடியாமல் போய்விடும். படுக்கையில் கிடந்தாலும்கூட நோவு அதிகரித்து தூக்கத்தையே கெடுத்துவிடும்.

இத்தகைய நோய்க்குப் பெரும்பாலும் வாயு அல்லது வாதம் தான் காரணம் என்று நம் வீட்டுப் பாட்டிமார் கூறுவார்கள். அதற்கான கை மருந்துகளைக் கொடுத்து குணமாக்கிவிடுவார்கள்.

பாட்டிமார் மருந்துகளுக்கும் கட்டுப்படாமல் தொடரும் வேதனைக்கு தகுதியான மருத்துவரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

இளவயதிலிருந்து உள்ளத்தில் பதிந்துவிட்ட தாக்கங்களும் தாய்மை எய்தி-சற்று உடல் தளர்ந்திருக்கும் வேளைகளில் தலையெடுப்பதனால் இத்தகைய வேதனைகள் தோன்றக்கூடும் என்று மேலைத் தேய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அவ்வாறாயின் மருத்துவ பரிசோதனைகளில் நோய்க்கான காரணத்தைக் கண்டறிந்து குணப்படுத்துவது கடினம். தக்க மனோதத்துவ மருத்துவரின் துணையைத்தான் நாடவேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.



வாதம், பித்தம் அல்லது மன உளைச்சல் காரணமாகத்தான் உடலில் வலிகள் தோன்றுவதானாலும் வேறு எதுவித காரணமாக இருந்தாலும் மனத்தில் பூரண அமைதி தோன்றுவதற்கு ஏற்ற மன ஒடுக்கத்தைக் கடைப்பிடிக்கலாம் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

தியானத்தின் மூலம் சிந்தையை ஒரு நிலைப்படுத்தலாம். யோகப்பியாச முறைகள் நன்றாகத் தெரிந்த ஒருவரின் ஆலோசனை பெறலாம்.

மற்றுமொரு சாதாரண முறையை- எளிதில் எவரும் கடைப்பிடிக்கத்தக்க பயிற்சியையும் நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளனர்.

ஒரு அகலமான, சோபா- அதாவது இருக்கை அகலமாகக் கொண்ட 'குஷன்' பொருத்தப்பட்ட இருக்கை தேவைப்படும். இதன் இருக்கை உயரம் சுமார் இரண்டு அடி இருக்கவேண்டும். மல்லாந்து படுத்துக் கொண்டு, கால்கள் இரண்டையும் சோபா-குஷன் மீது வைத்துக்கொள்ளுங்கள். படுத்திருக்கும் தரை சமதரையாக இருக்க வேண்டும். சாதாரண துணியை முதுகுக்கு விரித்துக்கொள்ளலாம். ஆனால் தலைக்குத் தலையணை வைக்கலாகாது. முழங்காலிலிருந்து குதிவரை மட்டும் இரு கால்களும் சோபா-குஷனில் பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் 10 நிமிட நேரம்- 3 தடவைகள் மட்டும் இவ்வாறு செய்ய வேண்டும். கூடுமானவரை இக்காலகட்டத்தில் மனம் ஒரு நிலைப்பட்டிருப்பது நல்லது, படிப்படியாக உடல் உபாதைகள் குறைந்துவிடும்.

# உங்கள் கணவர் எப்படி?

**உ**ங்கள் கணவர் அலுவலகத்திற்குப் புறப்படும் போது நீங்கள் ஏதாவது சொல்லி மாலையில் அவர் வீடு திரும்பும்போது அதை மறந்துவிட்டு வருகிறாரா?

அவருடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் உங்களிடம் மனந்திறந்து வெளிக்காட்ட மாட்டேன் என்கிறாரா?

உங்களுக்குள் சண்டை ஏதாவது வந்து பிறகு நடந்த சம்பவத்திற்கு அவர் வருத்தம் எதுவுமே தெரிவிக்காமல் வழக்கம்போல் பேசிக்கொள்கிறாரா?

உங்கள் பிறந்த நாளோ அல்லது திருமண நாளோ அவருக்கு அறவே ஞாபகம் இல்லையா?

உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒன்றை அவரே வாங்கித் தருவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து ஏமாறுகிறீர்களா?

அவர் மற்றவர்களிடம் இனிமையாகப் பேசுவது போல உங்களிடம் பேசவில்லையே என்ற ஏக்கம் உங்களுக்குத் தோன்றுகிறதா?

வீட்டில் இருக்கும்போது 'உங்களிடம் மனம் விட்டுப் பேசாமல், ரீ.வி. பார்க்கவோ, புத்தகம் படிக்கவோ செய்கிறாரா?

இவை எல்லாவற்றிற்கும் 'ஆமாம்! அப்படித்தான்' என்று நொந்து போய் சம்மதிக்கிறீர்களா?

அலட்டிக் கொள்ளாதீர்கள், கவலையும் படாதீர்கள். அவர் உலகின் சராசரி கணவர்களில் ஒருவர்தான்.



சம்பத்திய ஆய்வு ஒன்று இதைக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறது.

100க்கு 91 வீதமான ஆண்கள் மேற்சொன்ன குணத்தில் தான் இருக்கிறார்கள்.

பெண்களுக்கு எதுவெல்லாம் மிக முக்கியமாக அல்லது விருப்பமாகத் தோன்றுகிறதோ அவை எல்லாம் ஆண்களுக்கு முக்கிய விருப்பமில்லை என்பதன் அடிப்படை விளைவினாலேயே அவர் அப்படி நடந்து கொள்கிறார். இப்படி நீங்கள் நினைத்துக் கொள்கிறீர்கள். அவ்வளவுதான்.

# தண்ணீரும் அழகு தரும்

**த**ண்ணீரின்றி உயிர்வாழ்வே இல்லை. நம் உடலுக்குத் தேவையான சகல அம்சங்களுக்கும் பிரதான ஊடகமாக விளங்கும் தண்ணீர் எம்மையும் எம்முடன் தொடர்புடைய சகல சாதனங்களையும் சுத்தமாக வைத்திருக்க உதவுகிறது.

தண்ணீர் எமது அழகினைப் பேணவும் உறுதுணையாக நின்று உதவுகிறது.



- ★ தலைமுடி உறுதியற்றுத் தென்படுமானால் சிறிதளவு தண்ணீரை முடியில் தெளித்து தலையை வாரி விடுங்கள். ஏற்கனவே தேய்த்திருந்த எண்ணெய்யின் தன்மை முடியுடன் சேர்ந்திருக்கும் என்பதால் முடி படிவதற்கு ஏதுவாக இருக்கும்.
- ★ ஒரு பாத்திரத்தில் தண்ணீர் குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருப்பது நல்லது. அவசரமாக எங்காவது கிளம்ப வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தால் குளிர்ந்த நீரில் முகத்தை அலம்பினால் முகம் பளிச்சென்றாவதுடன் புத்துணர்ச்சியையும் தரும். உடனடியாக ஒப்பனை செய்யவும் வசதியாக இருக்கும்.

குளிர்சாதனப் பெட்டி வசதியில்லாதவர்கள் மண்பானையில் தண்ணீரை வைத்திருந்தால் எந்தக் கோடை காலத்திலும் தண்ணீர் 'ஜில்'லென்றிருக்கும்.

- ★ வாரத்தில் ஒரு தடவையாவது நீராவியில் சில நிமிடங்கள் முகத்தைப் பிடித்தால் முகத்திலுள்ள அழுக்குகள் நீங்கிவிடும். அத்துடன் சீரான சுவாசத்துக்கும் உதவும்.
- ★ முக அழுக்கை நீக்கும் திரவ பதார்த்தங்களைக் கடைகளில் வாங்கி உபயோகிப்பவர்கள் அத்திரவத்தை ஓரளவான சுடுதண்ணீரில் அதனைக் கலந்தால் நுரை அதிகமாக வரும். கண்களில் அந்நுரை பட்டுவிடாமல் முகத்தை அதில் கழுவலாம். பின்னர் கழுவிவிடலாம்.
- ★ முகத்துக்கு அழகு சாதனக் களிம்பு பூசுவோர் முகம் கழுவியோ, அல்லது குளித்து விட்டோ வந்து- முகத்தில் ஈரத்தன்மை ஓரளவு இருக்கும்போதே களிம்பினைப் பூசலாம்.
- ★ நீர் நிலைகளிலோ, நீச்சல் தொட்டிகளிலோ அல்லது கடற்கரையிலோ நீருடன் (நீச்சலடித்தோ அல்லது வேறு வழிகளிலோ) உறவாடுவது உடலாரோக்கியத்துக்கு மிகவும் நல்லது. ஆழமில்லாத கடற்ரை நீரில், வாரத்தில் ஒரு முறையாவது அரைமணி நேரம் நடப்பது பல நோய்கள் தீர உதவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## பம்பலப்பிட்டி வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**சுகன்யா லியோன்,**
**61\2, இந்திரா ஒழுங்கை, பம்பலப்பிட்டி.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CC

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-08-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# விருந்தும் மருந்தும் பயிற்சியும்

**எ**துவும் ஆரோக்கியமாக, வரையறைக்கு உட்பட்டதாக இருந்தால் உடலுக்கும் நன்மை; உள்ளத்துக்கும் நன்மை. செக்ஸும் அப்படித்தான்.

'செக்ஸ்' என்றதும் முகம் சுளிப்போரை நம்பாதீர்கள். அவர்கள் கள்ளப் பூனைகள். "'செக்ஸ்' பற்றிய ஆரோக்கியமான விவாதங்களும், அறிதலும்தான் 'செக்ஸ்' குற்றங்களை தடுக்கின்றன. 'எயிட்ஸ்' போன்ற மரண அபாயங்களில் சிக்கிக் கொள்ளாமல் பாதுகாக்கின்றன" என்கிறார் அமெரிக்க உளவியலாளர் ஒருத்தர்.

தம்பதியருக்கிடையேயான ஆரோக்கியமான 'செக்ஸ்' எத்தகைய பலாபலன்களைத் தருகின்றன என்பதைக் கண்டறிந்து பட்டியலிட்டிருக்கிறார்கள் பாருங்கள்;

- ★ மனதுக்குப் புத்துணர்ச்சி தருகிறது. உறவின்போது 'என்டோர்பின்' என்னும் ஹார்மோன் சுரக்கிறது. மனதில் மகிழ்ச்சி தோன்ற அதுவே காரணமாகும்.
- ★ தம்பதியினரின் அழகு கூடுகிறது. கூந்தல், சருமம் போன்றவற்றுக்கு பிரகாசம் கிடைக்கிறது.



- ★ ஆத்மார்த்தமான தாம்பத்திய உறவு கணவன், மனைவிக்கிடையே அன்பைப் பெருக்கெடுத்தோடச் செய்கிறது.
- ★ குளிர்காலத்தில் முத்தங்களை பகிர்வதன் மூலம் உடல் சூடு பெருகிறது.
- ★ மன நெருக்கடியில் இருந்து மீள்வதற்குரிய நிவாரணமாக இருக்கிறது.
- ★ இதயத்தை பலமுள்ளதாக்குகிறது. வாத நோய்கள் வராமல் தடுக்கிறது.
- ★ உடலில் வயது குறைவாகத் தோன்றும். இரத்த ஓட்டம் அதிகரிக்கும். ஒக்சிஜன் சருமத்தை அடையவும் வழி பிறக்கும்.
- ★ தொடர்பின் பின்னர் ஏற்படும் இரசாயன மாறுதல் உறக்கத்தைத் தூண்டுகிறது. ஆழ்ந்த ஓய்வுக்கு வழிவகுக்கிறது.
- ★ உடலில் உள்ள 'லிம் பாட்டிக் சிஸ்டம்' தான் உடலில் பாக்டீரியா, விஷத்தன்மை போன்றவைகளை நீக்குகிறது. 'செக்ஸ்' தொடர்பால் 'லிம்பாட்டிக் சிஸ்டம்' அதிக வேகத்தில் செயற்படுகிறது.
- ★ சிறந்த உடற்பயிற்சியாகவும் அமைகிறது.

# சின்ன யோசனை

**சி**லருக்குத் திடீரென்று தொண்டை கட்டிக் கொள்ளும். இயல்பான பேச்சுக்குரல் மாறிக் கீச்சுக்குரல் வந்துவிடும்.

இதற்கு, மாவிலையின் இளம் தளிர்களை ஒரு கைப்பிடியளவு எடுத்துக் கஷாயமாக்கி அதில் தேன் கலந்து சாப்பிடுங்கள். தொண்டைக்கட்டு நீங்கும்.

இதைத் தவிர, சிறிது சுண்ணாம்பை எடுத்து அதில் தேனைக் குழைத்தால் சூடு உண்டாகும். இதைத் தொண்டைக் குழியின் வெளிப்புறத்தில் தடவினால் தொண்டைக் கட்டு குணமாகும். ❑❑

**சு**டுநீர்ப் போத்தலில் இருந்து கெட்ட வாடை வீசினால், இரண்டு தேக்கரண்டி சோடா உப்பைப்போட்டு அதன்மேல் கொதிக்க வைத்த நீரை ஊற்றி இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் இதைக் கொட்டிவிட்டு நன்றாகக் கழுவிவிட்டால் வாடை போய்விடும்.

# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

## மோர் அப்பம்

**தேவையானவை:**

பால் – 1 1/2 கோப்பை.

மோர் – 1/2 கோப்பை.

பட்டர் – 125 கிராம்.

மைதாமா – 2 கோப்பை.

சீனி – 2 தேக்கரண்டி.

அப்பச்சோடா – 1 தேக்கரண்டி.

உப்பு – 1 தேக்கரண்டி.

**செய்முறை:**

பாலையும் மோரையும் ஒன்றாகக் கலந்து அளவான சூட்டில் அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். பால் சூடாகும்போது அதனுள் 100 கிராம் பட்டரைப் போட்டுக் காய்ச்சவும். பட்டர் உருகிக் கலவையுடன் சேர்ந்ததும் அடுப்பிலிருந்து இறக்கவும். சூடு தணிந்ததும் அக்கலவையினுள் மா, சீனி, அப்பச்சோடா ஆகியவற்றைக் கலக்கவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடாகும் போது, ஒரு துணியில் பட்டரை நனைத்து அதன் மீது தடவி, 1/2 கோப்பை கலவையை எடுத்து சூடான கல்லிலிட்டு கரண்டியால் பரப்பவும். ஒரு நிமிடத்தில் குமிழிகள் தோன்றும். தோசைக் கரண்டியால் அதனைப்புரட்டிப் போடவும். தங்கநிறம் மாறித் தடித்துவரும்போது எடுத்து வைத்துக் கொள்ளவும். ஒவ்வொரு முறையும் கரைசலை ஊற்றும் போது பட்டர் துணியால் கல்லைத் தடவவும். 4-6 பேருக்கு தாராளமாகப் போதும்.


தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப்போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 22

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.

❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.

❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

## பனித்துளிக்குள் விழுந்த ஒரு சூரியத் துண்டு

ஒரு
தொடர் சோகத்தில்
தொலைந்து போனவன்-நான்!
***
அழுது விடியும்
ஒவ்வொரு பொழுதிலும்
ஒரு
வற்றாத சமுத்திரம்
தேங்கிக் கிடக்கிறது!
***
ஒரு கண்ணீர்த்துளியோடு
உன்
கனவுகளும்
முடிந்து விடுமென்றால்
என் வருத்தங்களுக்கு
இந் நேரம்
வடிகால் கிடைத்திருக்கும்....!
***
சகி!
உன் சிரிப்புச் சத்தம்
சங்கீதமானதும்
சாவு மணியானதும்
காலத்தின் மாற்றமா...?
***
ஒரு நீரோடையின்
சல சலப்பில்
என்
சஞ்சலங்களையெல்லாம்
களைந்து விட நினைக்கிறேன்....!
***
எனினும்
மீண்டும் மீண்டும்
பழைய ஞாபகங்களில்தான்
பட்டவர்த்தனமாய்
உட்கார்ந்து
ஆகாயம் வெறிக்கிறேன்!
ஆனால்
அருவி மட்டும்
உள்ளுக்குள்ளேயே ஓடுகிறது....!
***
இப்படித்தான்-
கண்களிலிருந்து
இதயமுமாய்....
இதயத்திலிருந்து
கண்ணீருமாய்...
ஒரு கவிஞன்
தினமும்
கரைந்து கொண்டிருக்கிறான்....!

அ. சுதாசேகர், பொத்துவில்-03.

## காதலில் இத்தனையா.....?

**யுத்தம்.**
நான்கு விழிகளுக்கு
இடையில் ஏற்பட்ட
யுத்தத்தினால்
சிறைப்படும்
அப்பாவி இதயம்....!

**வரட்சி.**
கொட்டும் பனியிலும்
கொதிக்கும் தேகத்தின்
வார்த்தை ஊற்றுகள்
வறண்டு வற்றும்...!

**பதவி.**
விழிகள் விண்ணப்பித்தால்
விதிகளின்றி
கிடைக்கும்
நாயக(கி) பதவி...!

**வசந்தம்.**
கோடையிலும்
நெஞ்சில் துளிர்விடும்
அன்புத் தளிர்களால்
பூக்கும் புது
வசந்தம்...!

**மழை.**
வெறுப்பு வார்த்தைகளை
உமிழும் போது
வேதனை முகில்கள்
திரண்டு பொழியும்
கண்ணீர் மழை...!

**இருள்.**
பிரிவுத் துயரால்
இதய வானில்
படரும் சோக
இருள்...!

**அகதி.**
நேச மறுப்புக்களால்
அங்குமில்லாத
இங்குமில்லாத
நெஞ்சம் அகதியாய்...!

எஸ். கல்யாணி,
இரத்தினபுரி.

தேன் கிண்ணம்

## துரோகங்கள் மன்னிக்கப்படுவதில்லை!



இரவின் நட்சத்திரங்களுக்கிடையே
வெள்ளி ஓடையாகப் பாயும்
எனது கண்ணீர்க்கோடுகள்
கசிந்துருகும் இதயத்தின்
கதையைக் கூறும்!
-o-
இது யுகங்களுக்கூடாக
ஊறிவரும் வேதனை:
உயிரிலிருந்து கசியும்
அந்த வேதனை ஊற்றை
நிறுத்தி வைத்துவிட்டு
நிம்மதியடைய முடியவில்லை!
-o-
ஆண்டாண்டு காலமாக
இரவிலும் பகலிலும்
தொடரும் துயரங்களால்
எல்லா நம்பிக்கைகளிடமும்
தோற்றுக் கொண்டிருக்கிறேன்!
-o-
மரணத்தின்
முரட்டுக் கரங்களால்
பறித்துச் செல்லப்பட்ட
எனது வசந்தங்கள் மீண்டும்
என்னிடம் வந்துவிடப்போவதில்லை!
-o-
எனக்கு நீ செய்த
துரோகங்களுக்கான
தண்டனையை-தெய்வம்
எங்கோ ஒரு கிரகத்தில் வைத்து
வழங்கமாட்டாது!
எனது ஆத்மாவின் கீதம்
சிதிலமாகிய
அதே வானத்தின் கீழ்தான்
உனக்குரிய தீர்வுகள்
உனக்காக காத்திருக்கும்!
-o-
உனது வாழ்க்கையின்
பூக்களையெல்லாம்
பிய்த் தெறிவேன்!
உனது வழிகளையெல்லாம்
விழி நீரால் மூடுவேன்!
உனது சூரியனையும்
உனது உறக்கத்துக்குக்
குளிர்ந்த ஒளியைக்
கொண்டு வரும் நிலவையும்
என் பெருமூச்சால் அணைப்பேன்!
'உனதுலகின்
எட்டுத் திசைகளையும்
எனது கவலையால்
இருளாக்குவேன்!'
என்றெல்லாம்...
கண்ணீரோடு
கதறி அழுதவாறு
உன் எதிரே வந்து
ஆர்ப்பரிக்காவிட்டாலும்...
என் இதயத்தைக்
குத்திக் கிழிக்கும் வேதனைகள்
உன் வாழ்வுக்கு ஒரு போதும்
ஈடேற்றம் தரப் போவதில்லை!
-o-
நான் மௌனமாகத் தான்
செத்துக் கொண்டு வாழ்கிறேன்!
எனது நெஞ்சில்
நீ வைத்தாயே நெருப்பு...!
அந்த நெருப்புத்தான்-இன்று
உனை நோக்கித் தாவி வருகிறது!

பஹீமா ஜஹான்-தெமடகொல்ல,
மெல்சிரிபுர.

## இறுதிப் பிரசவம்

தபால்காரன்
என் உயிரை
என் கைகளில்
திணித்து விட்டுப்
போனான்!
**
கடித உறைக்குள்
பிரசவம் பார்த்தேன்-ஒரு
தாயின் உன்னதமான
எதிர்பார்ப்புக்களுடன்...!
**
நீ கொன்று போட்டிருந்த
நம் காதல் குழந்தை
பிறந்தது.
**
உன்னை மறந்துவிடச்
சொல்லியிருந்தாய்-முயற்சித்தேன்!
**
கண்ணே! என்னால் கண்ணை
மூடிக்கொண்டோ,
சுவாசிக்காமலோ வாழுவது கடினம்:
புரிந்துகொள்!
**
ஏனைய உன்
கடிதங்களுடன்
வழக்கம் போல அதையும்
பத்திரப்படுத்தவில்லை-நெருப்புத்
துண்டை எப்படி காகிதங்களுடன்
வைப்பது...?
ஆச்சரியம்தானே-நிலவு
என்னை வியர்க்க வைத்தது.
**
காதலை நிறுத்தி விடுமாறு
நீ சொன்னது- யுத்தத்தை
நிறுத்துமாறு இலங்கையரிடம்
கேட்பது மாதிரி இருக்கிறது...!
**
என்றாலும் உன் முடிவு
எனக்குள் ஓர் ஆரம்பம்-அன்றுதான்
மனிதனாக மாறி
வாழத் தொடங்கினேன்!
**
அதற்கு முன்....?

அன்பு-பதுளை.

## காதலிரவு

உன்
முந்தானை போல்
மாலைப்பொழுது
நழுவிப் போகும்;
நிலா சிரிக்கும்.
கவிதை அழும்!
***
இருள் வரும்!
பிரபஞ்ச இரகசியத்தை
மின் மினிகளுடன்
நட்சத்திரங்கள்
பேசத்துடிக்கும்!
***
ஊர் உறங்கிப்போகும்!
உன் நினைவுகள்
விழித்துக் கொள்ளும்!
***
பூமியின்
வெப்பப் போர்வையை,
பனித்துளிகள்
நிர்வாணப்படுத்தும்;
என் ஆசைகளெல்லாம்
உன் நினைவுகளால்
ஆடை கட்டிக் கொள்ளும்!
***
மூட மறுக்கும்
இமைக்கதவின்
அடம்பிடிப்போடே..
கிழக்கு வாசலும்
திறந்து கொள்ளும்!
***
சூரியன்
இறக்குமதியாகும்:
இருள்
நாடு கடத்தப்படும்!
***
உன்னை மறக்கவேண்டும்!
எனக்கு நானே
தீ மூட்டிக்கொள்ளும்
தீர்மானத்தோடு
வழமைபோல
இந்தப் பகலும்
விடை கொண்டு போகும்!
***
மீண்டும்
மாலை நழுவி
இரவு வரும்;
ஊர் உறங்கிப்போகும்:
உன் நினைவுகள்
விழித்துக் கொள்ளும்!
***

பர்ஸான்-யடவத்த,
நிகொள்ள.

## அந்த நாள் ஞாபகம்







எம்.ஜி.ஆர். என்றதும் கறுப்புக் கண்ணாடியும், தொப்பியும் இல்லாமல் நினைப்பது கடினம். இறுதி யாத்திரையில்கூட தொப்பியும், கண்ணாடியும் அணியப்பட்ட நிலையில் தான் அவரது பொன்னுடல் சென்றது.

1984ல் அமெரிக்க மருத்துவமனையில் எம்.ஜி.ஆர். சிகிச்சை பெற்றபோது பல புரளிகள் கிளப்பப்பட்டன. எம்.ஜி.ஆர். உயிருடன் இல்லையென்று தி.மு.க. வட்டாரங்கள் அடித்துக் கூறின.

"என்னிடம் ஆட்சியைத் தாருங்கள். என் நாற்பதாண்டு கால நண்பர் எம்.ஜி.ஆர். வந்த பின்னர் அவரிடம் ஆட்சியை ஒப்படைப்பேன்!" என்று கருணாநிதி தேர்தல் பிரசாரம் செய்தார்.

அப்பிரசாரத்தை முறியடிக்க அமெரிக்க மருத்துவமனையில் எம்.ஜி. ஆர். சிகிச்சை பெறும் நிலையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வெளியிடப்பட்டன. அவைதான் இவை.

எம்.ஜி.ஆரின் கவர்ச்சியான தோற்றம்தான் மக்களைக் கவர்ந்தது என்பார்கள். ஆனால் அவரது இந்த வயோதிபத் தோற்றத்தைக் கண்ட பின்னரும் '84 தேர்தலில் மக்கள் பெருவாரியாய் வாக்களித்தனர். அமெரிக்க மருத்துவமனையில் படுத்திருந்தபடி தமிழகத்தில் ஜெயித்தார் எம்.ஜி.ஆர்.



## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(03.08.1997 தொடக்கம் 09.08.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன். |
| சிம்மம் | - இராகு, வெள்ளி, புதன். |
| கன்னி | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |

★ சந்திரன்- கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் பகை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பொருள் நஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனப் பயம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 12 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- பெரியோர் பகை, வீண் கவலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மறைமுக எதிர்ப்பு, மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, பண வரவு. | பகல் | 11 | மணி |
| புதன்- துயர் நீங்கும், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- வீண்குறை கேட்டல், பிரயாண மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் நன்மை, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, கௌரவ மேன்மை. | பி.ப. | 3 | மணி |
| புதன் - பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- கடன்தொல்லை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, பெரியோர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, அந்நியர் பகை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன விரோதம், மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, காரிய நஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், அந்நியர் சகவாசம். | பகல் | 12 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், மனஸ்தாபம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- கடன் சுமை, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பகல் | 12 | மணி |
| சனி- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியசித்தி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- வீண் கலக்கம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், கடன்படல். | பி.ப. | 2 | மணி |
| புதன்- உறவினர் பகை, காரியக்கேடு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- கடன்சுமை, பிரயாண மிகுதி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- கடன் தொல்லை, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, வீண் செலவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பண வரவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6





எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கெடுவார் நினைத்த கேடு!

அந்த வீட்டைச் சுற்றிப் பூந்தோட்டம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் பல்வேறு வகையான பூஞ்செடிகள் வளர்ந்தன.

அந்தப் பூந்தோட்டத்திற்கு தோட்டப் பணியாளர் ஒவ்வொரு நாளும் நீர் பாய்ச்சுவார்.

பூஞ்செடிகளுக்கு வாய்க்கால் மூலம் தான் தண்ணீர் பாயும். வாய்க்காலின் இருமருங்கிலும் புற்கள் வளர்ந்திருந்தன.

ஒரு நாள் புற்கள், பூச்செடிகளைப் பார்த்து,

“ஏ! பூச்செடிகளே! வாய்க்கால் வழியாக வரும் தண்ணீரில் குடித்துக் கழித்த எச்சில் தண்ணீரைத் தானே நீங்கள் குடிக்கிறீர்கள்?” என்று கிண்டலாகக் கேட்டன.

அதைக்கேட்ட பூச்செடிகள் சிரித்து,

“தண்ணீர் பாய்ச்சப்படுவதே எங்களுக்காகத்தான். எங்களுக்கு வரும் தண்ணீரைக் குடித்து வளர்ந்து விட்டு எங்களையே இகழ்ந்து பேசுகிறீர்களே!” என்று கூறின.

இதைக் கேட்ட புற்களுக்குக் கோபம் வந்தது. ‘வாய்க்கால் வழியாகத் தானே அவர்களுக்குத் தண்ணீர் போகிறது. இதைத் தடுத்தால் அவர்களுக்குத் தண்ணீர் எப்படிப் போகும்?’ என்று எண்ணிய புற்கள், நன்றாக வளர்ந்து வாய்க்காலை மறித்தன.

புற்கள் வாய்க்காலை மறித்ததும், பூச்செடிகளுக்குத் தண்ணீர் போகவில்லை. போதிய தண்ணீர் கிடைக்காதபடியால் பூச்செடிகள் வாடத் தொடங்கின.

பூச்செடிகள் வாடுவதைக் கண்ட வீட்டுச் சொந்தக்காரர், தோட்டப் பணியாளரை அழைத்து,

“பூச்செடிகளுக்குச் செல்லும் தண்ணீரை புற்கள் வளர்ந்து மறித்து விட்டன. அதனால் பூச்செடிகளுக்குத் தண்ணீர் போகாமல் வாடிப் போகின்றன. எனவே புற்களை வெட்டி அழித்துவிடு!” என்று கூறினார்.

தோட்டப் பணியாளரும் புற்கள் எல்லாவற்றையும் அழித்து வாய்க்காலை சுத்தப்படுத்தி தண்ணீர் பாய்ச்சினார். அதனால் பூச்செடிகளுக்குத் தண்ணீர் தங்கு தடையின்றிச் சென்றது. பூச்செடிகளும் நன்றாக வளர்ந்தன.



பூச்செடிகளுக்குப் பொல்லாங்கு நினைத்த புற்கள் அழிந்தொழிந்தன.

***பிறருக்குக் கிடைப்பதைக் கெடுக்க முயன்றால், தனக்கு மட்டுமல்ல; தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் கேடுதான் நேரும்.***


## அதிசயம்—ஆனால் உண்மை!



**புகை வளையம் கக்கும் எரிமலை**

மௌன்ட் எட்னா என்ற எரிமலை ஒவ்வொரு முறை குமுறும்போதும் இராட்சதப் புகை வளையங்கள் எழும்புகின்றன.

**உயிருள்ள எலும்புக்கூடு**



எலும்புக்கூடு போன்ற சங்கு ஓர் ஏமாற்றுப் பேர்வழி. எதிரிகள் வரும்போது இவை எலும்புக்கூடுகள் போன்று பேசாமல் இருக்கும். அவை மறைந்ததும் இது நடமாடத் தொடங்கிவிடும்.

**தாவர வீடு**

இத்தாலி நாட்டில் உள்ள ஸாவிக்ளியானோ என்ற இடத்தில் ஒரு பண்ணை இருக்கிறது. அங்கு மேப்பிள் என்னும் ஒரு வகை மரத்தின் கிளைகளையும், இலைகளையும் அழகுற வெட்டி மரவீடு ஒன்று அமைக்கப்பட்டது.





**அதிசய இலைகள்**

சுமாத்திரா தீவில் உள்ள ஈரப்பலா மரத்தின் இலைகள் முதலில் வெட்டு விளிம்புகளைக் கொண்டதாக இருக்கும். பின்னர் இலைகள் முற்றும் போது வெட்டு விளிம்புகள் மறைந்து சாதாரண இலைகள் போன்று இருக்கும்.

## வாரம் ஒரு நாடு

### சாட்

தலைநகர்— இஞ்சமெனா
பரப்பு— 12,84,000 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை— 64 இலட்சம்
மொழி— ஃபிரெஞ்சு, அரபி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பழங்குடி மொழிகள்.
எழுத்தறிவு— 30%
சமயம்—இஸ்லாம், பழங்குடி, கிறிஸ்தவம்
நாணயம்— ஃபிராங்க் சீ.எஃப்.ஏ.
தனிநபர் வருமானம்— 133 டொலர்.

**அமைவிடம்:**

நாற்புறமும் நிலப்பகுதியால் சூழப்பட்டது. வடக்கில் லிபியாவும்; கிழக்கில் சூடானும்; தெற்கில் மத்திய ஆபிரிக்கக் குடியரசும்; மேற்கில் கமரூன், நைஜீரியா மற்றும் நைஜரும் இதன் எல்லைகளாக உள்ளன.

**வரலாறு:**

ஃபிரான்ஸிடமிருந்து 1960ல் சுதந்திரம் பெற்றது. மிக நீண்டகாலம் தொடர்ந்த உள்நாட்டுக் குழப்பங்களை அடுத்து 1982ல் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.



**பொருளாதாரம்:**

விவசாயமும், கால்நடை வளர்ப்பும் மிக முக்கிய தொழில்கள். கரும்பு, நிலக்கடலை முக்கிய விவசாய உற்பத்திப் பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.08.1997.


வர்ணம் தீட்டும் போட்டி இல: 204
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 202

**பரிசுக்குரியவர்:**
சிநதுஜா கிளி.:.பர்ட்,
சப்பாத்து வீதி, கொழும்பு—13.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. ஷ.:.பான் மொஹமட், மஹவெல முல்ல முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. | எம். பதீக், மில்லத் மகளிர் மகா வித்தியாலயம், காத்தான்குடி-03. |
| சிந்துஷன் சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | ஆர். கார்த்தீபன், சென்-ஜோசப் தமிழ் மகா வித்தியாலயம், மஸ்கெலியா. |
| ஜி. ஷர்மிளா, ஈ.எஸ்.பெர்னாண்டோ மாவத்தை, வெள்ளவத்தை. | நாகரட்னம் ஜெனகன், மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| மயூரன் ஸ்ரீகாந்த குமார், மா/ பாக்கிய மகா வித்தியாலயம், மாத்தளை. | மஸீபா மவ்ஜுட், முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-4. |
| சசிநாத் தங்கவேல், நம்மாதா பாடசாலை, நுவரெலியா. | என். நவதர்ஷன், அஜ்மீர் மத்திய கல்லூரி, உக்குவளை. |



## கொண்கோர்ட் விமானம்


← உலகிலேயே மிகப்பெரிய பயணிகள் விமானம் கொண்கோர்ட் விமானம் ஆகும். பிரமாண்டமான உருவத்தில் கூரிய மூக்குடன் வெண் நிறத்துடன் பறக்கும்போது பறவை போல் காட்சி அளிப்பதால் ‘வெண்ணிறப் பறவை’ என்று அழைக்கப்படுகின்றது.

இதன் முக்கோண வடிவ இறகுகள் வேறு எந்த விமானத்திலும் காண முடியாது. கொண்கோர்ட் விமானம் ஒரு மணிநேரத்திற்கு 1200 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது. உலகிலேயே ஒரு சில விமான நிலையங்களில் மட்டுமே இந்த விமானத்தால் இறங்க முடியும்.


## கடலடி எரிமலைகள்

↓ கடலுக்குள்ளே சமமான தரைதான் இருக்குமென்று எல்லோரும் நினைப்பார்கள். பூமியின் மேற்பரப்பு நிலத்தில் உள்ளது போல் மணல், புதைநிலம், மலைத்தொடர் மற்றும் எரிமலைகள் கடல் தரையிலும் உள்ளன.

கடலுக்குள்ளே எரிமலைகள் இருப்பது 100 ஆண்டுகளுக்கு முன்பு தான் கண்டுபிடிக்கப்பட்டது. கடல் ஆய்வாளர்கள் இதுவரை 8 எரிமலைகள் கடலுக்கடியில் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள்.



## ஊன் உண்ணும் தாவரம்



வட அமெரிக்கச் சதுப்பு நிலக் காடுகளில் வீனஸ்—ஃப்ளைட்ரப் (VENUS-FLTRAP) என்னும் ஒருவகைத் தாவரங்கள் உள்ளன. இவற்றின் உணவு என்ன தெரியுமா? பூச்சி, புழு, மற்றும் தவளை போன்ற சிறிய உயிரினங்கள்.

இந்தத் தாவரத்தின் இலைகள் இரு பக்கமும் கூரிய முட்களுடன் கத்தி போன்று காணப்படும். இந்த இலைகளின் மீது ஏதாவது பூச்சி, புழுக்கள் வந்து அமர்ந்தால், இலைகள் நெருங்கி வலை போன்ற இழைகளால் மூடிக்கொள்ளும். இவ்வாறு மூடிக்கொண்டதும், இலைகளில் இருந்து ஒருவகைச் சாறு வெளிப்பட்டு பூச்சி, புழுக்களைக் கரைக்கும். இதை இவை தமக்கு உணவாக்கிக் கொள்ளும்.

## நீரோ மன்னன்!



‘ரோம் நகரம் தீப்பிடித்து எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தான்’ என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

நீரோ கி.பி.34ம் ஆண்டு பிறந்தான். கி.பி.54ம் ஆண்டு ரோமப் பேரரசனாக முடி சூட்டிக்கொண்டான். இதன் பின்னர் இவன் ஒரு கொடுங்கோலனாக மாறினான்.

தனது வளர்ப்புத் தம்பியை விஷம் வைத்துக் கொன்றான். முதல் மனைவியின் தலையை வெட்டிக் கொன்றான். பெற்ற தாயையே சதித்திட்டம் தீட்டிக் கொன்றான்.

கி.பி. 64ம் ஆண்டு ரோம் நகரம் தீப்பிடித்து எரிந்தது. இதற்குத் தீயிட்டவன் நீரோ தான் என்று மக்கள் நினைத்தார்கள். இவனுக்குக் கிறிஸ்தவர்களைக் கண்டால் அறவே பிடிக்காது. கிறிஸ்தவர்களைப் பிடித்துக் கொண்டுவந்து சிங்கங்களுக்கு இரையாக்கினான்.

இவனது கொடுமைகளைப் பொறுக்க முடியாத மக்கள் கி.பி. 68ம் ஆண்டு இவனுக்கெதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். இவனைக் கைது செய்வதற்காக வீரர்கள் நெருங்கும் போது, கத்தியால் தன்னைத்தானே குத்திக் கொண்டு தற்கொலை செய்தான்.

## ஒரு வரிச் செய்திகள்

- ★ பில்லியர்ட்ஸ் விளையாட்டைக் கண்டு பிடித்த நாடு ஃபிரான்ஸ்.
- ★ முதலைக்கு எத்தனை பல் விழுந்தாலும் மறுபடியும் முளைத்து விடும்.
- ★ இருமும் போது ஏற்படும் ஒலியின் வேகம் மணிக்கு 245 மைல் ஆகும்.
- ★ அணுகுண்டு வெடிக்கும்போது சத்தம் இருக்காது. பிரகாசமான ஒளிதான் தெரியும்.
- ★ தபால் தலையை முதலில் பயன்படுத்திய இங்கிலாந்து, தபால் தலையில் தனது நாட்டின் பெயரைக் குறிப்பிடுவதில்லை.
- ★ ஆங்கில எழுத்துக்களில் ‘E’தான் அதிக அளவு உபயோகிக்கப்படுகின்றது.
- ★ பாகவத்கீதை 52 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- ★ அமெரிக்காவில் உள்ள ஆறு ஒன்றின் பெயர்— டி.






# உடைந்த இரவு

கிரைம் சக்கரவர்த்தி

ராஜேஸ்குமார்

மைத்ரேயி திடுக்கிட்டுப் போய் கதவைத் திறந்தாள். பாஸ்கர் மிரட்சியோடு குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டான்.

"யாரு... மைத்ரேயி...?"

"அநேகமா வையாபுரி மாமாவாய் இருக்கலாம்." சொல்லிக் கொண்டே மைத்ரேயி எழுந்தாள்.

"பாஸ்கர்...! நீங்க கட்டிலுக்கு கீழே போயிடுங்க. நான் என்னான்னு கேட்டு அனுப்பிச்சுட்டு வர்றேன்..."

பாஸ்கர் கைகளாலும் கால்களாலும் தவழ்ந்து கட்டிலுக்குக் கீழே போக மைத்ரேயி லேசாய் வியர்கிற உடம்போடு போய்க் கதவைத் திறந்தாள்.

வெளியே....

வையாபுரியின் மனைவி ஜெயம்மா, மெல்லச் சிரித்துக்கொண்டே கேட்டாள்,

"தூங்கிட்டியாம்மா...?"

"இல்ல.... என்ன வேணும்....?"

"பஸ்ஸில் ட்ராவல் பண்ணினது... உன்னோட மாமாவுக்கு ஒரே தலைவலி. ஏதாவது மாத்திரை போட்டுக்கிட்டாத்தான் அவரால தூங்க முடியும். தலைவலிக்கு ஏதாவது மாத்திரை இருக்காம்மா...?"

"டோலோபர் இருக்கு.... தர்றேன்..." சொன்ன மைத்ரேயி சுவரில் அப்பியிருந்த பக்கத்து அலமாரியைத் திறந்து ஒரு மாத்திரைப் பட்டையை எடுத்துக் கொடுத்தாள்.

வாங்கிக் கொண்ட ஜெயம்மா கேட்டாள்,

"தினேஷ் எப்போ டெல்லியிலிருந்து வர்றான்....?"

"ரெண்டு நாளாயிடும்."

"அடிக்கடி இப்படி உன்னை தனியா விட்டுட்டு டெல்லிக்கு போயிடுவானா...?"

"அடிக்கடி போக மாட்டார்.... வருஷத்துக்கு ரெண்டு தடவை போக வேண்டியிருக்கும்..."

"தினேஷ் வெளியூர் போயிட்டா இவ்வளவு பெரிய வீட்ல உனக்கு தனியா படுத்துத் தூங்க பயமாய் இருக்காதா?"

"என்ன பயம்...?"

"அது சரி..... காலேஜ்ல படிச்ச பொண்ணு தைரியம் இருக்கத்தானே செய்யும்..!" ஜெயம்மா சொல்லி சிரித்துக் கொண்டே மாத்திரையோடு நகர்ந்துபோக மைத்ரேயி கதவைச் சாத்தினாள்.

பாஸ்கர் கட்டிலுக்கு அடியிலிருந்து வெளிப்பட்டான்.

"போயிட்டாங்களா?"

"ம்...."

"நான் கிளம்பறேன் மைத்ரேயி.... இனியும் இங்கே இருக்கிறது சரியில்லை... காயத்துக்கு சீக்கிரமா மருந்து போட்டு விடு...."

"பயப்படாதீங்க... இனி அந்த அம்மா வரமாட்டாங்க."

"நான் அந்த அம்மாவுக்காக பயப்படலை.... என்னை அடிச்சுட்டுப் போனவனையும், டெலிஃபோன்ல பேசற அந்தப் பொண்ணையும் நினைச்சாத்தான் ஹார்ட்ல லேசா ஊசியை சொருகி எடுத்த மாதிரி இருக்கு..."

மைத்ரேயி பாஸ்கரின் தலைக்காயத்தைத் துடைத்து மருந்தைப் போட்டுக் கொண்டே கேட்டாள்,

"உங்களைத் தாக்கினவன் ஏன் ஒரு திருடனா இருக்கக் கூடாது...?"

"இருக்கலாம்... ஆனாலும் ஒரு பயம்தானே? மொதல்ல அந்த டெலிஃபோன் பொண்ணு யார்னு கண்டுபிடிக்கணும்...."

"நாளைக்கு கண்டுபிடிச்சுடலாம். கவலைப்படாதீங்க."

ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸிலிருந்த பாண்டேஜ் துணியால் தலைக்கு ஒரு கட்டைப் போட்டாள் மைத்ரேயி. பாஸ்கர் வலியால் முகம் சுளித்துக் கொண்டே எழுந்தான்.

"வரட்டா."

"இருங்க....நான் மொதல்ல போறேன்.... அப்புறமா நீங்க வாங்க..."

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் மைத்ரேயி.

☆☆☆

மறுநாள் காலை 9.45 மணி.

அலுவலகத்தில் நுழைந்த மைத்ரேயியை மனேஜர் எதிர்கொண்டார்.

"குட்மார்னிங் மேடம்...."

அந்த குட்மார்னிங்கை மைத்ரேயி தலையசைப்பால் ஏற்றுக்கொண்டே ஏர்கண்டிஷன் உறுமும் அறைக்குள் நுழைந்தாள்.

எக்ஸிக்யூட்டிவ் நாற்காலியில் சாய்ந்தவள் மேசைமேல் இருந்த இண்டர்காமை உசுப்பி பேசினாள்.

"ஏ....ஓ....?"

"எஸ்...மேடம்! குட் மார்னிங்...மேடம்..."

"நம்ம கம்பனியில் வேலை பார்க்கிற ஸ்டாஃப்போட பயோடேட்டா குறிப்புக்கள் கம்ப்யூட்ர்ல ஃபீட் பண்ணியிருக்கா....?"

"பண்ணியிருக்கு மேடம்...."

"அந்த பர்ட்டிக்குலர்ஸைக் கொண்டாங்க...."

"எல்லா ஸ்டாஃபோட பர்ட்டிகுலர்ஸும் வேணுமா மேடம்?"

"எஸ்..."

இண்டர்காமை அணைத்துவிட்டு மைத்ரேயி காத்திருக்க பத்தே நிமிடத்தில் ஒரு கம்ப்யூட்டர் ஃப்ளாப்பியோடு வந்தார் அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸர்.

அதை வாங்கிக் கொண்ட மைத்ரேயி கேட்டாள், "இதுல பதிவாயிருக்கிற பர்ட்டிகுலர்ஸ் எல்லாமே அப்-டு-டேட் தானே?"

"எஸ்... மேடம்...."

"சரி... நீங்க போங்க."

"எனி மோர் ஹெல்ப் மேடம்?"

"வேண்டாம்.... ஒரு அரைமணி நேரத்துக்கு என்னை எந்தக் காரணத்துக்காகவும் டிஸ்டர்ப் பண்ணாதீங்க...."

"எஸ்... மேடம்..." அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸர் பவ்யமாய் பின்வாங்கி நகர்ந்து வெளியேற மைத்ரேயி எழுந்து அறையை ஒட்டியிருந்த கம்ப்யூட்டர் அறைக்குள் நுழைந்து ஃபெபர் மேஜையின் மேல் உட்கார்ந்திருந்த டேட்டா கம்ப்யூட்டர்க்கு மின்சார உயிர் கொடுத்து ஃப்ளாப்பியை கொடுக்கிறாள்.

கம்ப்யூட்டர் திரை செயல்பட ஆரம்பித்தது. மைத்ரேயி ஒரு பட்டனைத் தட்டி கம்பெனியில் வேலைபார்க்கும் எல்லா பெண் ஊழியர்களின் தற்போதைய முகவரியைக் கேட்டாள்.

அது அகரவரிசைப்படி ஆரம்பித்தது.

'அலமேலு, அருணா, அகல்யா, ஆனந்தி, பாமா, பிருந்தா...'

மைத்ரேயி பார்வையை உன்னிப்பாக்கிக் கொண்டு ஒவ்வொருவரின் முகவரிகளையும் மனசுக்குள் வாங்கினாள்.

'எந்த முகவரியிலாவது ஆவடி வருகிறதா...?'

கம்ப்யூட்டர் திரையில் பெயர்கள் வரிசையாய் மேலேறிக் கொண்டிருந்தது. 'வெஸ்ட் மாம்பலம், தி.நகர், வில்லிவாக்கம், மடிப்பாக்கம், தாம்பரம், அடையார்' என்று ஏதேதோ பெயர்கள் பார்வைக்கு கிடைத்து விலகியதே தவிர ஆவடி கிடைக்கவில்லை.

சுத்தமாய் இருபது நிமிடங்கள.

பெண் ஊழியர்களின் முகவரிகளை கொடுத்துவிட்டு அடுத்த கட்டளைக்காக காத்திருக்க ஆரம்பித்தது கம்ப்யூட்டர்.

'எந்தப் பெண்ணும் ஆவடியில் இல்லையே....'

குழப்பமாய் நெற்றியைத் தேய்த்த மைத்ரேயி மனதில் நேற்றைய ராத்திரி பாஸ்கரை தாக்கிய நபரின் ஞாபகம் வந்தது.

ஆண் ஊழியர்களின் முகவரிப் பட்டியலையும் பார்த்து விடலாம். கம்ப்யூட்டரின் கீபோர்ட்டில் அதற்குரிய பட்டனைத் தட்ட 'ADDRESS OF MALE STAFF' என்கிற டைட்டிலில் பெயர்கள் ஓட ஆரம்பித்தன.

மைத்ரேயி உன்னிப்பானாள்.

'அன்பழகன், அருணாச்சலம், ஆறுமுகம், ஆதிநாராயணன், பாலகிருஷ்ணன், பாலகுமார், பீமராக்' என்று அகரவரிசையில் பெயர்கள் ஓட கண்களை இமைக்காமல் முகவரிகளில் ஆவடியைத் தேடினாள்.

'P' வரிசையில் 'பட்டாபி' என்ற பெயர் கம்ப்யூட்டரின் இடது பக்கத் திரையில் பளிச்சிட்டு வலது பக்கத் திரையில் உற்பத்தியான முகவரியில் 'ஆவடி' வந்தது.

பட்டனைத் தட்டி அந்த முகவரியை நிறுத்தினாள் மைத்ரேயி; வாய்விட்டு படித்தாள்.

பெயர்: எம்.பட்டாபி, உத்யோகம்: வெல்டர், தந்தை பெயர்: பி.முத்துசாமி, நிரந்தர முகவரி: நம்பர் 4, ஏரிக்கரை ரோடு, மகாராணி நகர், ஆவடி, சென்னை.

மைத்ரேயி ஒரு வெள்ளைத்தாளை எடுத்து அந்த கம்ப்யூட்டர் விபரங்களைக் குறித்துக் கொண்டாள். தொடர்ந்து கம்ப்யூட்டரை ஓடவைத்து வேறு எந்த ஊழியர்க்காவது ஆவடி முகவரி வருகிறதா என்று பார்த்தாள்.

வரவில்லை.

பட்டாபிக்கு மட்டும்தான் அந்த ஆவடி முகவரி.

மைத்ரேயி சுறுசுறுப்பானாள்.

பட்டாபிக்குரிய கம்ப்யூட்டர் 'கோட்' எண்ணை கீ போர்ட்டில் தட்டி பட்டாபியின் பர்சனல் பயோடேட்டாவையும் அவனுடைய வேலைத்திறமையையும் கம்ப்யூட்டரில் கேட்டாள்.

ஐந்தே வினாடிகளில் அது ஒரு பட்டியலைப் போட்டுக் காட்டியது.

பெயர்: எம். பட்டாபி.

வயது: 27 வருடம் ஆறுமாதங்கள், ஒன்பது நாள்.

படிப்பு: ப்ளஸ் டூ, டிப்ளமா இன் வெல்டிங்.

வேலைக்கு சேர்ந்த தேதி: 7.9.88

வேலைத்திறமை: B-HIGH GRADE.

இதர திறமைகள்: கதை எழுதுவது, நாடகங்களில் நடிப்பது, வானொலியின் உழைப்பவர் உலகம் நிகழ்ச்சிகளை தயாரித்துள்ளார்.

தற்காலிக பணி நீக்கம்: இதுவரைக்கும் செய்யப்பட்டதில்லை.

நடத்தை: திருப்திகரம்.

கம்ப்யூட்டர் கொடுத்த தகவல்களை மனசுக்குள் விதைத்துக்கொண்டே மைத்ரேயி யோசிப்பில் வீழ்ந்தாள்.

டெலிஃபோனில் பேசி மிரட்டிக் கொண்டிருப்பவள் ஒரு பெண். ஆனால் பெண் ஊழியர்களில் யாரும் ஆவடியில் இல்லை. ஆவடியில் இருப்பவன் பட்டாபி மட்டுமே.

'ஒரு வேளை டெலிஃபோனில் பேசுகிற பெண்ணுக்கும் இந்த பட்டாபிக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ....? இரண்டு பேரும் பேசி வைத்துக்கொண்டு ஆளுக்கொரு பக்கம் மிரட்டிக் கொண்டிருக்கிறார்களோ....?'

கம்ப்யூட்டரை அணைத்துவிட்டு தன்னுடைய பிரைவஸி டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களை சுற்றினாள்.

மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹேலோ..."

மறுமுனையில் பாஸ்கரின் குரல்.

"பாஸ்கர்... நான் மைத்ரேயி."

"உன்னோட ஃபோனுக்காகத்தான் காத்திட்டிருக்கேன்... என்ன ஆவடி பட்சி கிடைச்சுதா.....?"

"கிடைச்சுது.... ஆனா...?"

"என்ன ஆனா"

"ஆவடி முகவரி ஒரு பெண்ணோடது இல்லை."

"பின்னே...?"

"ஒரு ஆணோடது..."

"பேரு...?"

"பட்டாபி"

"கம்பெனியில என்ன வேலை அவனுக்கு?"

"வெல்டர்...."

"வயது...?"

"இருபத்தேழு..."

"சரி... ஆள் யார்ன்னு தெரிஞ்சுக்க நீ முயற்சி எடுத்துக்க வேண்டாம். அந்த பட்டாபியோட அட்ரஸை என்கிட்ட சொல்லு. நான் அவனை 'ஷடோ ஃபாலோ அப் பண்ணி ஆள் எப்படிப்பட்டவன் கிறதை ஸ்டடி' பண்ணிக்கிறேன்...."

பேப்பரில் குறித்து வைத்திருந்த பட்டாபியின் அட்ரஸை நிறுத்தி நிதானமான குரலில் சொல்ல ஆரம்பித்தாள் மைத்ரேயி.

**(தொடர்ந்து வரும்)**



**சென்றவாரம்**

பாஸ்கர் ஸ்டோர் ரூமுக்குள் போய் ஒழிந்துகொள்ள, தைத்ரேயி காம்பவுண்ட் கேட்டைத் திறக்கிறாள்.


சினேகிதர் ஒருவரின் மகளின் கல்யாண விடயமாக தினேஷின் தாய் மாமன் வையாபுரியும் மனைவியும் வந்திருக்கின்றனர். அவர்களை மாடி ரூமில் தங்க அறுமதித்துவிட்டு ஸ்டோர் ரூமுக்கு அவசரமாகச் செல்கிறாள். அங்கே பாஸ்கர் இல்லை.

பங்களாவுக்கு வெளியே வாழைத் தோப்பில் அடிபட்டு வீழ்ந்து கிடக்கும் பாஸ்கரைக் கண்டு, அறைக்குள் அழைத்து வந்து மண்டையில் கட்டுப்போடுகிறாள் மைத்ரேயி. 'பாஸ்கரைத் தாக்கியது திருடனாயிருக்கலாம்' என்று தேற்றுகிறாள்.


அதே நேரம், அறைக்கு வெளியே நடைச் சத்தம். தொடர்ந்து கதவு தட்டப்படும் சத்தம்.

**இனி...**


## பேனா நண்பர் அரங்கம்














பெயர்: எம். செரீப்கான்.
வயது: 24
முகவரி: 71, போகொள்ள மாவத்தை, உலப்பனை.
பொழுதுபோக்கு: செல்லப் பிராணிகள் வளர்த்தல்.

பெயர்: சி. மதுவதனன்,
வயது: 20
முகவரி:15, சாவிய ஒழுங்கை, மட்டக்குளிய, கொழும்பு-15.
பொழுது போக்கு: ஓவியம் வரைதல், ஆக்கங்கள் எழுதுதல்.

பெயர்: எம். பர்தான்,
வயது: 23
முகவரி: 325/4 எஃப், புதிய தெரு, வெலிகாமம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: ஜி. கார்த்திகேயன்,
வயது: 35
முகவரி: P.O.BOX-3394, DAMMAM -31471, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: கே. ரஜினி,
வயது: 17
முகவரி: 40/12, மாணிக்கப்பிள்ளையார் கோவில் வீதி, புன்னைச்சோலை, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஏ. அஜ்மீர் அலி,
வயது: 24
முகவரி: மாவடி வீதி, புதிய காத்தான்குடி-8.
பொழுது போக்கு: புத்தகம் படித்தல்.

பெயர்: எம். மில்ஹான்,
வயது: 22
முகவரி: P.O.BOX-3594, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பேனா நட்பு.

பெயர்: எம். ஷாபி.
வயது: 19
முகவரி: 240 ஏ/3, கண்டி வீதி, கம்பளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. அருள்,
வயது: 23
முகவரி: GIERGTHER STR-71, 41363 JUCHEN GERMANY.
பொழுது போக்கு: சினிமா, பேனா நட்பு.

பெயர்: பி. செல்வராஜ்,
வயது: 24
முகவரி: 9, டாம் வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். செந்தில் குமரன்,
வயது: 20
முகவரி:48, கடற்கரை வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: கிரிக்கெட், வானொலி.

பெயர்: பி. மௌசூக்,
வயது: 20
முகவரி: பனிச்சங்குளம், வான் எல, கந்தளாய்.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 22

**பிரபஞ்சன்**

**இதுவரை** சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

**இனி...**

வீட்டு வேலைக்கு என்று நியமித்திருந்த அம்மணி சோறு பரிமாறச் சாப்பிட்டாள். தன் படுக்கை அறைக்குள் நுழைந்தாள். இன்னும் கணேசன் வரவில்லை எனத் தெரிந்தது. ஆடைகளைக் களைந்து, அதற்கென்று சுவருடன் புதைத்து வைத்திருந்த பெட்டிக்குள் போட்டாள். ரோஸ் நிறத்திலான, வெள்ளை லேஸ் வைத்த ஹவுஸ்-கோட்டை அணிந்து கொண்டாள். சுவர் முழுக்கப் பரவியிருந்த புத்தகங்களில் இருந்து ஒன்றை எடுத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தவாறு அமர்ந்து படிக்கத் துவங்கினாள்.

அது ஒரு கவிதைத் தொகுதி. 'சவ்யசாசி' என்ற பெயரில் யாரோ ஒரு கவிஞர் எழுதிய கவிதை அது. நீளமான கவிதையாக, ஆனால் பொருள் செறிந்த கவிதையாக இருந்தது அது.

*இராவண வதம்*
*நடந்து முடிந்தது*
*சீதை தன் குழல் முடிந்து*
*புத்தாடை புது முகம்*
*பூண்டு,*
*சரத் காலத்துச் சந்திரனைப் போல்*
*நடந்து*
*நாயகன் முன் வந்து நின்றாள்.*
*அக்கினிக் குண்டம்*
*நெருப்பு நாக்கை வீசி*
*எரிந்து கொண்டிருந்தது.*
*"நல்லது.*
*யாரின் கற்புக்கு*
*சாட்சியம் வேண்டுகிறாய்?"*
*"உந்தன் உடம்புக்கு!"*
*"ஒப்புக் கொண்டேன்.*
*முதலில் நான்*
*அக்கினியில் பிரவேசம் செய்வேன்.*
*அதன் பின் நீ!*
*உந்தன் கற்பு*
*உன்னுடனே உள்ளதா*
*என்பதை நான்*
*அறிதல் அவசியம் தானே?"*
*பன்னீர்க் குளத்தில்*
*படுத்துக் கிடப்பது போல்*
*நெருப்பு நதியை*
*நடந்து கடந்தாள், சீதை.*
*வில்லை லக்குவன் வாங்கிக் கொள்ள,*
*பாதுகையைப் பரதன் ஏந்த*
*நெருப்பில் இறங்கிய ராமனின்*
*வலது பாதம் மட்டும்*
*நெருப்பில் தீய்ந்தது.*
*வியந்தது மக்கள் கூட்டம்.*
*விஷயத்தை வசிஷ்டர் சொன்னார்:*
*"சூரன் தங்கை*
*சூர்ப்பனகை மனதை*
*சுட்ட குற்றத்தால், ராமா*
*சுட்டது உன்னைத் தீ!"*

கவிதையில் பொதிந்திருக்கிற பொருள் சிறப்பை மனதுக்குள் எண்ணி வியந்து இரசித்துக் கொண்டிருந்தாள் சுமதி. இது மாதிரியான நேரங்களில் இசையைக் கேட்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றும். புத்தகம் போலவே அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கேசட்டுக்களில் இருந்து, பாரதி கவிதைகள் அடங்கியிருந்த கேசட்டை எடுத்து வந்து பிளேயரில் பொருத்தினாள். வளையம் வளையமாக இசை எழுந்தது. "சுட்டும் விழிச் சுடர் தான்-கண்ணம்மா சூரிய சந்திரரோ?" என்று வினவியபடி பாடிய பாகவதரின் குரல் இனிமையை இரசித்துக் கொண்டிருந்தாள்.

சரியாக அந்த நேரம் கணேசன் உள்ளே நுழைந்தான். அவளை ஒரு பொருட்டாக எண்ணாதவன் போல் சட்டையையும், பேண்டையும் கழற்றி அப்படியே படுக்கையில் போட்டுவிட்டு லுங்கியை எடுத்து அணிந்து கொண்டான்.

"சாப்பிட்டீங்களா?" என்றாள் சுமதி அவனைப் பார்த்து.

"இல்லை."

"ஏன் உடம்பு சரியில்லையா?"

"உடம்பு நன்றாய்த்தான் இருக்கிறது. மனசுதான் சரியாக இல்லை."

"என்ன திடீரென்று?"

"மனிதனை மானத்தோடு ஜீவிக்க நீ விடமாட்டாயே; எல்லாம் உன்னால்தான்!"

"ஏன், நான் என்ன செய்து விட்டேன்?"

"தெரியாத மாதிரி பேசாதே."

"இந்த மாதிரி பேசினால் நான் என்ன சொல்ல? தயவு செய்து விஷயத்தை விளக்கிச் சொல்லுங்கள்."

"உனக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றால், அதை நேரில் சொல்லிவிடலாம்தானே, நாம் கௌரவமாக விவாகரத்துப் பெற்றுக் கொள்ளலாம்; அதை விட்டு இப்படி....."

"எப்படி?"

"நீ யார் யாருடனோ தொடர்பு வைத்திருக்கிறாய். எவன் எவனோ உனக்குக் காதல் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறான். "

விருட்டென்று எழுந்து அமர்ந்தாள். சுழன்று கொண்டிருந்த பாடலை நிறுத்தினாள்.

"என்ன சொல்கிறீர்கள்?"

அவன் நிதானமாகத் தன் ப்ரீப் கேசைத் திறந்து, ஒரு கடிதத்தை எடுத்து அவள் முன் போட்டான்.

ஒரு நீள வெள்ளைத்தாளில் சீராக டைப் செய்யப்பட்டிருந்த கடிதம் அது. நடுங்கும் விரல்களால் அவள் அதை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

*"அன்புக்குரிய சுமதி,*

*ஒரு வாரமாக உன்னைக் காணாமல், நான் தவிக்கும் தவிப்பை நீ புரிந்துகொள்வாயா? அலுவலகத்துக்கு மட்டும் ஃபோன் செய்யச் சொல்லியிருந்தாய். செய்தேன். நீ கிடைப்பதாய் இல்லை. ராட்சசனாக இருக்கும் உன் கணவனின் கொடுமைகளைப் பற்றியெல்லாம் நீ எனக்குச் சொன்னது என் மனதுக்குள் மிகவும் நடுக்கத்தை ஏற்படுத்தி விட்டது. வழக்கம் போல் நாம் சந்திக்கும் அந்த இடத்தில் நாளைவருவாய் அல்லவா?*

*உன் உயிர்."*



கடிதத்தின் தொனி சிறுபிள்ளைத்தனமாகவும், ஆனால் விஷமத் தனமாகவும் இருந்ததை உணர்ந்தாள் அவள். அவன் கண்களைப் பார்க்க அவள் முயன்றாள். அவனோ அவள் கண்களைத் தவிர்த்தான். அவளுக்குப் புரிந்தது. இது அவனே அவனுக்குச் செய்து கொண்ட இழுக்கு. அவளைச் சிறுமைப்படுத்த, அவமானப்படுத்த அவன் தீட்டிய சதித் திட்டம்?

கடிதத்தை மடித்து, பழுப்பு நிற கவரில் வைத்து அவனிடம் நீட்டினாள் அவள்.

"படித்தாயா?"

"படித்தேன்."

"யார் அந்த உயிர்?"

"எவனோ ஒரு இழிமகன்."

"அப்படிச் சொல்லித் தப்பித்துவிட நினைக்காதே."

"எதிலிருந்தும் தப்ப வேண்டிய அவசியம் எனக்கில்லை."

"அப்படியானால் இக் கடிதம் பொய் என்கிறாயா?" அவன் குரல் உயர்ந்தது.

அவள் மனத்தளவில் அவன் தாக்குதலுக்குத் தயார் ஆனாள். ஒரு விஷயம் சுமதிக்குத் தெளிவாய்த் தெரிந்தது. இக் கடிதத்தை அவனே எழுதியிருக்காத பட்சத்தில், அவன் என்னமாய் ருத்ர நாடகம் ஒன்றை அங்கு ஆடியிருப்பான் என்று அவளுக்குத் தோன்றியது.

"சந்தேகம் இல்லாமல் அந்தக் கடிதம் பொய்தான்."

"என்னடி அளக்கிறே? யார் அந்தக் கள்ளப்புருஷன்?"

அவன் அருகில் வந்து அவள் கூந்தலைப் பிடித்து இழுத்தான். அப்போதுதான் அவன் குடித்திருந்தது அவளுக்குத் தெரிந்தது. அவன் இந்த ரகளைக்கென்றே தயாராய் வந்திருந்தது அவளுக்குப் புரிந்தது.

சுமதி தன் கூந்தலைப் பிடித்து இழுத்திருந்த அவன் கைகளைத் தட்டிவிட்டாள். அது அவன் ஆத்திரத்தைக் கிளறிவிட்டிருக்க வேண்டும்.

"சொல்லுடி, தேவடியா" என்றவாறே அவள் கைகளைப் பிடித்து முறுக்கினான் கணேசன்.

"எங்கே அந்த ஊட்டித் தேவடியாள்? இப்போ வரச் சொல்லுடி அவளை. இரண்டு பேரும் சேர்ந்து என்னையா பொலிசுக்கு அனுப்ப முயற்சி செய்தீர்கள்? இப்போ நான் உன்னைக் கொல்லப் போகிறேன். எவன் வந்து தடுப்பான் பார்ப்போம்."

வலி உயிர் போயிற்று அவளுக்கு-

சட்டென்று "பாட்டு வேறே ஒரு கேடா, உனக்கு?" என்றவன், அந்தக் பிளேயரை எடுத்துக் கீழே அறைந்தான். அந்த இயந்திரத்தின் உடல் சுக்கல் சுக்கலாயிற்று.

வெறி பிடித்தவன் போல் ஆனான் அவன்.

அங்கிருந்த புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்தான். அவைகளைக் கிழித்துப் போடத் தொடங்கினான் அவன். பட்டினி கிடந்து வாங்கிய புத்தகங்கள் அவை. சம்பாதிக்கும் பணம் முழுவதையும் அவனிடம் கொடுத்துவிட்டு, அவன் கொடுக்கும் சில்லறைகளைச் சேமித்து வைத்து; காபியை மறந்து, இதர சின்னச் சின்னத் தேவைகளையெல்லாம் மறந்து, அந்தப் பணத்தில் வாங்கிய புத்தகங்கள் அவை. அந்தப் புத்தகங்கள் கிழிபடுவதைத் தாக்கிக்கொள்ள முடியவில்லை அவளால்.

"நிறுத்துங்கள்!" என்றாள் சுமதி.

அவள் குரலில் இருந்த உக்ரம் அவனுக்குத் திகிலைத் தந்திருக்க வேண்டும். திடுக்கிட்டு அதுவரை பார்க்காத புதிய முகத்தை அவன் பார்த்தான்.

"நிறுத்தாட்டி என்னடி செய்வே?"

அவன் தாவி வந்து அவள் கழுத்தைப் பற்றி இறுக்கினான்.

அவள் உடல் வியர்த்து மூச்சுத் திணறியது. கழுத்தில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது.

"விடுங்கள்" என்று திணறினாள் அவள்.

அவன் பிடி மேலும் இறுகியது.

கிட்டத்தில் அவன் முகம் இருந்தது. அவன் முகம் அவளிடம் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது. அவன் கண்களில் தெரிந்த கொலை வெறி, அவளுக்குள் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது.

தன் பலம் முழுக்க ஒன்றாய்த் திரட்டி அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள் அவள். அதிர்ச்சியுற்ற கணேசன் கைகளைத் தளர்த்தினான். அடுத்த கணம், தன் இரு கைகளையும் ஒன்று சேர்த்து, அவன் வயிற்றுக்குள் மோதினாள் அவள். மன ஆரோக்கியத்தை முதலில் இழந்து பிறகு குடிபோன்ற லாகிரி வஸ்துக்களால் உடல் ஆரோக்கியத்தையும் இழந்த கணேசன், சுட்டு வீழ்த்தப்பட்ட ஒரு சிட்டுக்குருவி மாதிரி கீழே விழுந்தான்.

நிதானமாகத் தன் கூந்தலை முடிந்து கொண்டாள் அவள். ஹவுஸ் கோட்டின் மேல் பொத்தான் பிய்ந்திருந்தது. மேசைக்கு கடந்து சென்று வாட்டர் ஜக்கில் இருந்த தண்ணீரைக் கையில் பெய்து, அவன் முகத்தில் அடித்தாள்.

அவன் நெற்றி சுருங்கியது. கொஞ்சம் கொஞ்சமாக அவன் தன்னுணர்வு திரும்பியது. சுமதி அறைக்கதவைத் திறந்து வெளியே போய் அம்மணியை அழைத்து, தேநீர் கொண்டு வரச் சொன்னாள்.

தேநீர் கொண்டு வரும்போது, அவன் பிரக்ஞை மீண்டிருந்தது.

குரோதமாக சுமதியைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தான் அவன். "தாலி கட்டியவனைக் கை நீட்டி அடிக்கத் துணிந்திட்டே இல்லை?"

"கட்டினவன் அடித்துக் கொல்லலாம். கட்டினவள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவாவது திருப்பி அடிப்பதில் என்ன தவறு?"

அவன் எழுந்து நின்றான். உடல் தடுமாறியது.

"இதுக்கு நீ பதில் சொல்லித்தான் தீரணும்," என்றான்,

"எல்லோரும் தாங்கள் செய்கிற தவறுகளுக்குப் பதில் சொல்லித்தான் தீரணும்."

அவன் விடுவிடு எனக் கீழே சென்றான். வரவேற்பறையில் இருந்த சோபாவில் படுத்து உறங்கத் தொடங்கினான்.

சுமதி சிதறிக் கிடந்த பிளேயரை எடுத்துத் தொகுத்தாள். கிழிந்திருந்த புத்தகங்களை வாரி எடுத்தாள். மனம் சங்கடப்பட்டது.

**சு**மதி அப்போது கல்வித் துறையில் பொறுப்பில் இருந்தாள். வ.உ.சி.யின் பெயரால் நடக்கும் ஒரு தனியார் பள்ளியில் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கவும், பரிசு வழங்கவும் அழைக்கப்பட்டிருந்தாள். அந்த மாலை அவளுக்குச் சொர்க்க மாலையாகவே இருந்தது. குழந்தைகளுடன் இருப்பதும் சொர்க்கத்தில் இருப்பதும் ஒன்று தானே.

ஒரு ரோஜாத் தோட்டத்தில் இருப்பது மாதிரி இருந்தது சுமதிக்கு. காமாந்தகாரர்களான அதிகாரிகளுக்கும் கயவர்களான கணவனுக்கும் இடையே சிக்கிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு ரோஜாப் பூக்கள் ஆறுதல் தரும் விஷயமாகத்தான் இருக்கும். ரோஜாக்கள் அவர்கள் இழந்த சந்தோஷத்தின் குறியீடு. மனசுக்குள் பூப்பதற்குப் பதிலாக, மண்ணில் பூக்கும் மன மகிழ்ச்சிகள். **(தொடர்ந்து வரும்)**

# யோசனைகள்



**அகன் கபிலன்**

**நா**ன் எப்பொழுதுமே இப்படித்தான்... யோசனை என்று அமர்ந்து விட்டால் எழுந்திருப்பதே கடினம்.. யோசனைச் சக்கரவர்த்தி என்றே என்னை அழைக்கலாம்... எனது யோசனைகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாலும், இதுவரை நிகழ்ந்த நிகழ்வுகளை சரியாக என்னால் யோசிக்கப்பட்டதனாலும் எனக்கு என் யோசனைகளில் சிறிது கர்வம் கூட உண்டு... சாப்பாடு உறக்கமெல்லாம் எனக்கு இரண்டாம் பட்சம் தான்.

அரசியல், யுத்தம், நண்பர்கள், நகைச்சுவை... என்று எதுவும் என் நினைவுகளில் பாகம் பிரித்துக் கொண்டதில்லை. அனைத்தையும் அலசுவதில் என் மூளைக்கு நிகர் அதுவேதான்... இடை வெளி கொடாமல் யோசிப்பதில்தான் அதனுடைய சக்தியே... ஆனாலும் இப்பொழுதெல்லாம் யோசனைகளில் மட்டுப்படுத்தல்... மந்தகுணம்... எதைப் பற்றியும் அதிகமாய் யோசிப்பதில்லை... அவளைத் தவிர....

எத்தனை முயன்றாலும் பந்தயம் கட்டிக் கொண்டு என் நினைவுகளை சுகசோகங்களோடு ஆக்கிரமித்து விடுவாள்.

அவள்.... அவளைப்பற்றி உங்களிற்கு ஏதாவது தெரியுமா... அன்னை தெரசாவினுடைய அழகா? ஐஸ்வர்யாராயினுடைய அழகா? போட்டியிட்டால் அவளுக்குத்தான் முன்னிடம்... பந்தயம் கட்டுங்கள்...

அப்படிப்பட்ட அவள்.... கல் தோன்றி மண்தோன்றாத காலத்திலிருந்தே பரிணமித்து தொடர்ந்து வரும் பரிமாணங்களிற்குட் படாத காதலில்- என் கதாநாயகி....

ஆதாம் ஏவாள் ஆரம்பித்துவைத்த காதல் பள்ளியின் தற்போதைய ஆசிரியை...

எப்படியோ அவள் என் மனதிற்குள் இடம் பிடித்துக்கொண்டதில் ஆச்சரியம் இல்லை... ஆனாலும் இப்படியா... சகல மானவற்றிலும் ஆதிக்கம் செலுத்துவது... சந்தோசங்களையும் சிந்தனைகளையும் விலங்கு பூட்டி தனிமைச் சிறைக்குள் அடைத்துவைத்துச் சந்தோசிப்பது...

முன்பின் முரணில்லாமல் செல்லும் எறும்புகளைப்போல் நானும் என் சிந்தனைகளை அவளைச் சுற்றியே ஒழுங்கு படுத்திக் கொண்டேன்... எதனைப்பற்றிப் பேசினாலும் அவள்.... எங்கு சென்றாலும் அவள்...

சிந்தனைகள் வரையறையில்லை. தற்பொழுதெல்லாம் நான் பந்தயங்களை அதிகப் படுத்திக்கொண்டேன்...

பந்தயங்களில் வென்றால்.... என் காதல் வெற்றி.... தோற்றால்??? விடை சொல்ல மாட்டேன்... என்று மனதிற்குள் நினைத்து என் காதலை சவாலாக்கினேன்...

காலங்கள் செல்லச் செல்ல பந்தயங்கள் நிறையவே வெல்லப்பட்டது.... ஆனாலும் இறுதியில் இதுவரைக்கும் அவளிடம் காதலைச் சொல்லாமல் என் காதல்தான் தோற்றுப்போய்விட்டது...

இப்பொழுதெல்லாம் நான் யோசிப்பதே இல்லை... என் காதலியும் என்னைக் காதலித்தால்தான் என் காதல் வெல்லும் என்று ஆரம்பத்திலேயே யோசிக்கத் தெரியாத என் மூளைக்கு இனியென்ன யோசனை.... ஆகையால் நான் இப்பொழுதெல்லாம் யோசிப்பதேயில்லை.

# இளமை



**கனகசபை தேவகடாட்சம்**

**'அ**ரச சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஐந்தாண்டுகள் ஆகின்றது. ஆனால் இப்படியொரு சுகம்... அதுவும் இந்த வயதில் கிடைக்கின்றது'.... என்று மனதிற்குள்ளே ஸ்பரிச உணர்வு ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மெதுவாக என் கன்னத்தை கிள்ளுகிறாள். அதுவும் இருபத்திஐந்து வயது பருவ மங்கை. என் உள்ளம் 'கிளு கிளு'க்கின்றது. மீண்டும் அவளின் சந்திரவதன முகம் எனது முகத்தருகே நெருங்கி வந்து வந்து போகின்றது. இளமை என்னுள் துள்ளி எழுந்து உட்கார்ந்து கொள்கிறது.

அவள் குனிந்து கொண்டு கன்னத்தைக் கிள்ளும் போது... ஆகா.. அந்த இளமை ஆடுகின்ற ஊஞ்சல்தான் என்ன? என் முதுமையை இப்படி ஆட்டுகிறதே!

மெதுவாக எழுந்து என் காலணிகளை தேடிப் போட்டுக் கொண்டு, அவள் முகத்தைப் பார்க்கிறேன். 'மீண்டும் எப்போ' என் இதயம் ஆசுவாசப்பட்டுக்கொண்டு கேட்கிறது. பணத்தை எண்ணிக் கொடுத்து விட்டு நகர்கிறேன்.

நேரம் நகர, நகர, வேதனை அதிகரிக்கிறது. அனைத்தையும் இன்ப வேதனையாய் ஜீரணித்துக் கொண்டு வீடு வந்துவிட்டேன்.

வீங்கியிருந்த எனது கன்னத்தைக் கண்டதும் என் மனைவிக்கு ஒரு 'நகைப்பு'. 'கன்னத்தின் வீக்கம் குறைந்தால், காற்று இல்லா பலூனும் தோற்றுவிடும்' என நினைத்திருப்பாள் போலும்.

இப்போ வேதனை உச்சம்.

கண்ணாடியின் முன்நின்று எனது வாயை திறந்து பார்க்கிறேன். 'இறுதியாக இருந்த அந்த ஒரு பல்லையும் பிடுங்கியாயிற்று' மனதிற்குள் ஒரு இன்ப ஏக்கம். இனி அந்த பல்வைத்தியசாலை பக்கம் தலையே வைக்கமாட்டேன்! மீண்டும் சந்திக்க ஒரு பல்லுக்கூட இல்லையே!

## 1755-ம் ஆண்டில் ஒருநாள்....

செம்பரிதிக்காக கிழக்கு வானம் காத்திருக்கும் அதிகாலை வேளை! பனி பூசிய பொதிகைக் காற்றின் நைச்சியமான வீச்சில் புள்ளினங்கள் உறக்கம் தொலைத்து அலகு பிளந்து 'கிச்சு வீச்சு' என்று சளம்பிக் கொண்டிருக்கும் அந்த மென்னிருட்டில் **தலையணை** அருவி தபதப என்று கொட்டி முழக்கிக்கொண்டிருக்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் ஜீவ ஊற்றில் ஒன்று அருவியாய் பிரவாகிக்கும் அற்புதமான சூழல்! அருவியை ஒட்டி அதோ மலைச்சாரல். திண்டு திண்டான பாறை சார்ந்த ஒரு காடாக மட்டுமின்றி, அடர்ந்த மரக் கூட்டத்தோடு பொதிகை மலைக் கூட்டமெல்லாம் பசுமை பிலிற்றியடிக்கும் வளமையான இராஜ்ஜியங்கள் என்பது போல வாகையும், பிள்ளமருதும் நெகுநெகு வென வளர்ந்து கிளைக் கரங்களை ஆட்டி மகிழ்ந்து கொண்டிருக்கின்றன.

அந்த மரங்களின் உச்சியில் இருந்து பார்த்தால் ஓரளவு **நெற்கட்டான் செவலை** பார்க்க முடியும் என்பதுபோல் செவலில் உள்ள மாவீரன் புலித்தேவனின் அரண் மனை மதில் சுற்றின் மேல் எரியும் தீப்பந் தங்களின் திகுதிகுப்பை பார்க்க முடிகிறது.

மலைச்சரிவில் மலைப்பாம்பாய் நெளிந்தபடி கிடக்கும் ஒற்றையடிப் பாதையில் மீசையை நீவியபடி ஒருவர் பின் ஒருவராய் நடந்து கொண்டிருக்கும் ஒரு கூட்டம் மெல்லத் திரும்பி அந்த அரண்மனை மதில் தீப்பந்தங்களைப் பார்த்து பெருமிதத்தோடு நெஞ்சு நிமிர்த்தும் போது, கதிர்ப் பந்துகூட தன் வட்ட விட்டத்தில் துளியை கிழக்கு வானில் மெல்ல வெளிக்காட்டத் தொடங்க, குதூகல பாய்ச்சலில் பறவைகள் மரம் நீக்கி வானம் ஏறிப் பறக்கத் தொடங்குகின்றன.

"விடிந்து விட்டது...." நடப்பவர்களில் ஒருவன் குரல் கொடுக்கிறான்.

"பொழுது மட்டும்தான் விடிந்திருக்கிறது" என்கிறது சூசகமாய் இன்னொரு குரல். அப்படிக் குரல் கொடுத்த மனிதனின் முகத்தில் சோகம் அப்பிக் கிடக்கும் கொடுமை அந்த அதிகாலை வேளையில் நன்றாகவே தெரிகிறது.

"ஒண்டி நீ என்ன சொல்கிறாய்?" வயதான பெரியவர் ஒருவர் அவனை அணுகி வினவுகிறார். நடப்பவர்களின் நடையில் சின்ன தேங்கல். அவர்கள் கரத்து சிலம்பக்கழி பூமியை தொட்டு நிற்க எல்லோருமே இப்பொழுது ஒண்டி எனும் அந்த மனிதனை பார்க்கிறார்கள்.

'கருந்தேக்கு போல் தேகம். சுருண்ட கேசம் பாகை கட்டி அதை மூடியிருக்கிறான் ஒண்டி எனும் அவன். நெற்றியில் சங்கரன் கோவில் புற்று மண்ணை குழைத்து இட்ட திலகம். கம்பளிப்பிரி போல் முரட்டு மீசை, ஆனால் வெளீரிடும் பல் வரிசை. திறந்த மார்பும், புஜமும் பிரம்மனின் திட்டமிட்ட சிருஷ்டி. எனும்படியாக வீரப்பட்டறையாக தென்படுகின்றது. கருப்பு வேட்டி தார்ப்பாய்ச்சியாக கட்டப்பட்டு முழங்காலை தாண்டாதபடி. மடக்கப்பட்டிருக்கிறது. காட்டு எருதின் பிருஷ்டப் பகுதித் தோலால் ஆன மிதியடிகளை அணிந்தபடி சிலம்பக்கழி பற்றி நிற்கும் ஒண்டி எனும் அவனை ஊன்றிப் பார்ப்பவர்கள் அவன் சோகம் புரிந்த மாதிரி பேசாமல் வெறிக்கிறார்கள்.

அந்த மலைக்காட்டில் துண்டு விரித்த மாதிரி ஒரு சமவெளிப் பரப்பு உண்டு. அங்கே கழியை சுழற்றி சிலம்பு வித்தைகளை வரிசைக்கிரமமாக கற்க வந்த வேளையில் இதென்ன இப்படி சோகக்கூத்து?

"ஒண்டி என்னாயிற்று உனக்கு.... ஏன் இப்படி சிலை ஆகிவிட்டாய்...?"

"சிலை ஆகவில்லை நண்பர்களே... சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்..."

"எது குறித்து?"

"தென்மலை முகாமில் கொக்கரித்துக் கொண்டிருக்கும் பரங்கி நாய்களைப் பற்றி..."

"நாய் நன்றி உள்ள ஜீவன் ஒண்டி. ஓநாய் என்று சொல் பொருத்தமாக இருக்கும்."

"அப்படியும் சொல்லலாம்."

"அப்படித்தான் சொல்ல வேண்டும். அண்டிப் பிழைக்க வந்தவர்கள், சுற்றிப் பார்க்க வந்தவர்கள், இந்த மண்ணை சொந்தம் கொண்டாட நம்மை அடிமைகளாக்கி பார்க்கும் கொடுமைக்கு நமது மாவீரர் புலித்தேவர் பதிலடி கொடுக்காமல் விடப் போவதில்லை ஒண்டி! அவரது கரத்தை வலுப்படுத்திச் சவாலை எப்படி முறியடிப்பது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்..." என்கிறான்.

"என்னது... அவன் படைக்குள் நுழைந்து அவன் சவாலை எதிர்கொண்டு பட்டத்துக் குதிரையை பிடித்து வரப்போகிறாயா? ஒண்டி உனக்கென்ன பைத்தியமா?"

"எனக்கு பைத்தியமில்லை. என் செயலால் வெள்ளையனுக்குத்தான் பைத்தியம் பிடிக்கப் போகிறது...."

"ஒண்டி... இதென்ன பேச்சு? இது போன்ற சவால்களை நாம் பொருட்படுத்தக் கூடாது. நமது வீரத்தை நாம் களத்தில் காண்பிப்போம். இப்படிப்பட்ட வறட்டுச் சவாலை சந்திப்போம் என்பது விவேகமற்ற செயல்...."

"விவேகமுள்ள செயல்தான் நண்பர்களே. சாதியால் தாழ்ந்திருக்கும் நான் என் வீரச் செயலால் உயர விரும்புகிறேன். எனது அருந்ததியர் வகுப்புக்கு பெருமை சேர்க்க எண்ணியுள்ளேன். வீரம் என்பதற்கு சாதியில்லை என நிரூபிக்கப் போகிறேன்...."

"ஒண்டி உன் பேச்சை கேட்க இனிக்கிறது. ஆனால் செயல் எத்தனை கடினமானது தெரியுமா? வெள்ளையன் படை ஒன்றும் சவலைக் கூட்டம் இல்லை. ஜெகவீர பாண்டியரே பணிந்து விட்டதை நினைத்துப் பார். ஒரு பீரங்கி போதும்! இணையில்லாத அந்த ஆயுதத்தை நினைத்துப் பார். சிறு பிள்ளைத்தனமாக பேசாதே....!"

யார் பேச்சும் வீரன் ஒண்டியை கட்டுப் படுத்தவில்லை. அவன் மூளையில் சவாலை சந்திப்பது குறித்த முனைப்பு. தென்மலையில் முகாமிட்டிருக்கும் வெள்ளையனின் படைக்குள் இனி எப்படி நுழைவது?

தென்மலைச் சரிவு முழுக்க ஏகமாய் கூடாரங்கள். வெள்ளையன் படையின் முகாம் ஏகமாய் நீண்டிருந்தது. வாலைக் குழைக்கும் புரவிக்கூட்டம், கோச்சு வண்டிகளின் வரிசை, பீரங்கிச் சாரம் என்று அசாதாரணமாக தென்பட்டது.

சீருடை அணிந்த வீரர்களும் அவர்களின் துப்பாக்கிகளும், கம்பீரம் காட்டிக் கொண்டிருந்தன. நரைத்த புருவமும், மீசையுமாய் பூனைக் கண்களுடன் தென்பட்ட சில பீரங்கி வீரர்களை பார்க்கவே வினோதமாக இருந்தது.

முகாமில் ஏகப்பட்ட குழுக்கள். சிவந்த பாகையணிந்த தளபதிகள் குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஓரிடத்தில் படைக்கு உணவு சமைக்கும் முனைப்பு!

ஊரிலுள்ள ஆடுகள், பன்றிகளை அன்றே தின்று தீர்த்துவிட வேண்டும் என்பது போல் அவைகளின் தலைகளை நறுக்கி தோலை உரித்து சதையை துண்டங்களாக்கிக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம்.

லாடம் அடிப்பவனாக தேனிரும்பு லாடத்துண்டுகளோடும், ஆணிகளோடும் உள்ளே நுழைந்திருந்தான் ஒண்டி.

படைக்குள் நுழைய வேறு வழியே தெரியவில்லை. அனேக புரவிகள் லாடம் தேய்ந்து பாயக் கூசுவது அறிந்து ஊருக்குள் லாடமாடிகள் யாராவது உண்டா என்று

> "என்னது......? அவன் படைக்குள் நுழைந்து அவன் பட்டத்து குதிரையைப் பிடித்துவரப் போகிறாயா? ஒண்டி உனக்கென்ன பைத்தியமா?"

ஒரு கூட்டம் தேடிவந்தபோது, கிட்டியது வாய்ப்பு என்று முன் நுழைந்து விட்டிருந்தான் ஒண்டி.

"வேண்டாம் ஒண்டி..." என்று சக தோழர்கள் எச்சரித்தும் விடுவதாக இல்லை. எச்சரித்த தோழர்கள் புலித்தேவரிடம் புகார் செய்ய ஓடினார்கள்.

ஒண்டிக்கோ அதுபற்றி கவலையே இல்லை 'இளப்பம் பேசின வெள்ளையனை விதிர்க்க விடவேண்டும். பட்டத்து குதிரையோடு பறந்து காட்டுகிறேன்பார். நீ சொன்னபடி ஊரை விட்டு ஓடிவிட வேண்டும். திரும்பத் தலை வைத்துப் படுக்கக்கூடாது.

தென்மேற்கு பாளையங்கள் என்றாலே திக்கென்றாக வேண்டும் நெஞ்சம். தமிழன் பாரம்பரிய வீரன் என்பதோடு உலகையே ஆள முடிந்தவன் என்பதை நீ உணர்ந்தாக வேண்டும்!'

முகாமுக்குள் தோல்பையை சுமந்தபடி மாறுவேடத்தில் நடக்கும் ஒண்டிக்குள் எண்ணக்குமிழிகள்.

"அடேய் அங்கென்ன பிராக்கு...? குதிரை படை முகாம் அதோ.... ஏறத்தாழ எண்பத்தி ஏழு குதிரைகள் லாடம் சிதைந்து நிற்கின்றன. பார்த்து லாடமடி! சில புரவிகள் அரபு நாட்டிலிருந்து வந்தவை. பக்குவமாக காலை பிடிக்காவிட்டால் உன் பற்களைப் பெயர்த்து விடும்."

அழைத்து வந்த வீரன் சற்று திமிராக பேச ஒண்டி பணிவாக தலையை அசைக்கிறான்.

"ஐயா.... பட்டத்து குதிரைக்கு லாடமடிக்க வேண்டாமா?" என்று வினயமாக கேட்கவும் செய்கிறான்.

"என்னது... பட்டத்து குதிரைக்கு லாடமா? உரக்கப் பேசாதே. எங்கள் கர்னல் அதன்பின் உனக்கே லாடம் அடித்து விடுவார்!" என்கிறான்.

"ஐயா நான் ஏதாவது தவறாக கேட்டு விட்டேனா? பட்டத்துக் குதிரையாக இருந்தாலும் அதுவும் குதிரைதானே.... அதற்கும் கால்கள் உண்டுதானே?"

"முட்டாள்... இன்றைய நிலையில் பட்டத்துக் குதிரையை பார்ப்பதே சிரமம் என்பது தெரியுமா?" வீரனிடம் மடக்கல். ஒண்டியிடமோ ஒன்றும் தெரியாதது போன்ற பசப்பல்.

"நீங்கள் சொல்வது புரியவில்லையே...?"

"ஆற்காட்டு நவாபுவின் செல்லக் குதிரை தான் இன்று எங்கள் பட்டத்துக் குதிரை. ஆகிருதியான அராபியக் குதிரை அது. நவாபையே சமயங்களில் சடாய்த்து விடும். அதை எவராவது கைப்பற்றி பட்டத்து வாளையும் எடுத்துக் கொண்டு சென்று விடுவார்களோ என்கிற பயத்தில் மிக பாதுகாப்பாக நவாபின் தூதர்கள் அதை தங்கள் கூடாரத்துக்கு அருகிலேயே கட்டி வைத்துள்ளார்கள். அதோ பட்டத்துக் குதிரை!"

அந்த வீரன் கைகாட்டிய திக்கில், சுற்றிலும் வாளும் துப்பாக்கியும் ஏந்தி நிற்கும் வீர வட்டத்துக்கு நடுவில் புல்லை மென்றபடி நிற்கிறது

சரித்திரக் கதை

# முதல் முழக்கம்



வெள்ளை வெளேரென்ற அந்தக் குதிரை. பக்கத்திலேயே படைத் தலைமையாளனான கர்னல் ஹெரானின் ஆடம்பரமான பல்லக்கும் கோச்சும் சார்ந்த லஸ்தர் விளக்கு தொங்கும் முகாம்.

"இந்த முகாமுக்குள் நுழைந்து இத்தனை வீரர்களை மீறி பட்டத்துக் குதிரையை பற்றிச் செல்ல கடவுளால் கூட முடியாதே! எதற்காக கும்பினித் துரைக்கு இத்தனை பயம்?"

"எல்லாம் வாய்க்


இந்திரா சௌந்தர்ராஜன்

(தமிழக எழுத்தாளர்)


கொழுப்பால் வந்த வினை!"

"புரியும்படி சொல்லுங்களேன்."

"நீ விடமாட்டாய் போல் தெரிகிறதே. இந்த தெற்கு பாளையத்தவர்கள் மகா வீரர்களாம். அதி சூரர்களாம். விழித்திருக்கும்போதே முழியை திருடும் வல்லமை பெற்றவர்களாம். யாருக்கும் பணிய மாட்டார்களாம். இதை ஒருவர் எங்கள் கர்னலிடம் கூறியதால் வந்த வினை இது.

"அவர்கள் அதி சூரர்கள் என்றால் எங்கே என் பட்டத்து குதிரையையும், வாளையும் கொண்டு செல்லட்டும் பார்க்கலாம்!" என்று எங்கள் கர்னல் பதிலுக்கு சவால் விட்டதால்தான் இத்தனை பாதுகாப்பு."

"கவலையேபடாதீர்கள். உங்கள் கர்னல்தான் ஜெயிப்பார்...!"

"அதில் எங்களுக்கு சந்தேகம் இல்லை. இருந்தாலும் ஊருக்குள் யாரோ ஒண்டி என்பவன் தோள் தட்டி புறப்பட்டிருப்பதாக வதந்தி ஒன்று நிலவுகிறது. அதனால்தான் இங்கு கூட பதற்றம் நிலவுகிறது."

அந்த வீரன் பேச்சை கேட்ட ஒண்டிக்கு சுருக்கென்றானது. தன் முனைப்பு இத்தனை சீக்கிரம் இவர்களுக்குத் தெரிந்து விட்டதா? மனதில் திகைப்பின் விபரிப்பு.

எல்லாம் தன்னை எச்சரித்தவர்கள் செயலாகத்தான் இருக்கும். நினைத்துப் பார்த்து சற்றே செருமாந்து லாடம் அடிக்கும் பணியில் நுழைகிறான் ஒண்டி.

ஏறத்தாழ நான்கு நாட்களுக்கு லாடப் பணி நீடித்தது. இதற்கு நடுவே படை வீரர்கள் பலர் ஒண்டிக்கு சினேகமாகி விட்டார்கள். படையின் விரிவு, வீரம், தகைமை வலிவு, வாட்டம் எல்லாம் ஓரளவு ஒண்டிக்கு புலப்பட்டு விட்டது.

நடுவே புலித்தேவருக்கு வெள்ளையன் ஓலைபோக்கி பணிந்து விடுமாறு விட்ட எச்சரிக்கை செய்தியும் காதில் விழுந்தது.

நெற்கட்டும் செவல் கோட்டையின் வலிமை குறித்து வெள்ளையன் படும் கவலை மட்டும் ஒண்டிக்குள் மகிழ்வூட்டிக் கொண்டிருந்தது.

ஊடே பட்டத்து குதிரை மேல் பல பார்வை பார்த்துவிட்டான். அதற்குக் கொள்ளுப்பை தைத்து கட்டிவிடச் செல்லும் சாக்கில் அதன் மூர்க்கத்தனத்தையும் ஓரளவு எடை போட்டு விட்டான்.

ஹெரானின் முகாமுக்குள் பட்டுத் துணி சார்ந்த பட்டத்து வாள் மேசை ஒன்றின் மேல் பாங்காக வைக்கப்பட்டிருந்தது. அதன் அருகே பரங்கிக் கொடிச் சின்னம் வேறு.

ஹெரான் ஒயின் கோப்பையை அடிக்கொரு தடவை சூப்பியபடி வீரர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறான்.

நவாபின் சகோதரன், தளபதி யூசுப் என்று நரிக்கூட்டத்தின் வட்டம் வேறு.

எல்லோரும் அசந்து தூங்கப்போவதே இரவு நடுச்சாமத்துக்கு மேல் என்கிற நிலை. அதுவரை ஆட்டம் பாட்டம் என்கிற கும்மாளம்.

நேற்றுக்கூட பாஞ்சாலங்குறிச்சி பெண் ஒருத்தி குரவைக் கூத்து கட்டினாள்.

இன்று தென்காசி வேசி ஒருத்தியின் சாஸ்திரிய நடனம். வேசியும் வெளுப்பாக தளுக்காக இருக்கிறாள். வெள்ளை நாய்கள் அனுபவிக்காமல் விடமாட்டார்கள்.

ஒண்டியின் திட்டப்படியே இரவு அந்த வேசியின் தளுக்கில் தலைமைக் கூட்டம் கிரங்கிப் போனது. நல்ல கும்மிருட்டு ஆட்சி செய்யும் முகாமில் ஆங்காங்கே மட்டும் தீப்பந்த ஒளி.

இதுதான் சந்தர்ப்பம் என்று ஒண்டி ஹெரானின் முகாமில் நுழைந்து பட்டத்து வாளை விருட்டென்று உருவி எடுத்தபடி பின் வழியாக வெளியே வந்து பட்டத்துக் குதிரையை அவிழ்த்துக் கொண்டு புயலாய் பாய தயாரானான் ஒண்டி. அவனைப் பார்த்ததுதான் தாமதம். குதிரை மிரண்டு திமிறியது. துள்ளியது. குதித்து கொழுக்கம்பை பிடுங்கிக்கொண்டு பாய்ந்தது. இது கண்ட படை வீரர்களிடம் மிரட்சி!

அருகிலேயே மற்ற குதிரைகளின் லாயச் சாலை. அதில் குறுக்கும், நெடுக்குமாக அலைக்கழிந்தது பட்டத்துக்குதிரை. இதற்குள் அந்த லாயச் சாலையில் வைக்கோலை தனக்கு மேலே போர்த்தி தரையோடு தரையாக ஒண்டி தன்னை மறைத்துக்கொண்டான்.

"அங்கே என்ன நடக்கிறது? அந்தக் குதிரையை முதலில் பிடித்து கட்டுங்கள்...." ஹெரானின் கட்டளையை தொடர்ந்து பலர் சுற்றி வளைத்து அந்தப் புரவியை பிடித்து கட்ட முனைந்தார்கள். புதிதாக கொழுக்கம்பு அடித்துக் கட்ட முனையும்போது வைக்கோல் மூடிய ஒண்டியின் இடது உள்ளங்கையில் 'நச்' என்று இறங்கியது கொழுக்கம்பின் கூரிய முனை!

கொழுக்கம்பின் கூரிய முனை ஒண்டியின் உள்ளங்கையை தைத்தபடி தரை இறங்கத் தொடங்கியது. வலி உயிரைத் தொட்டது. வைக்கோல் போருக்குள் தரையோடு தரையாக கிடக்கும் ஒண்டியிடம் உலகின் ஒட்டுமொத்த அவஸ்தை. ஆனால் அதை வெளிக்காட்டாமல் வலிதாங்கியாக மாறி புழுப்போல் உடம்பை கூட நெளிக்காமல் பல்லைக் கடித்தபடி கிடந்தான்.

ஒருவழியாக புதிய கொழுக்கம்பில் பட்டத்துக் குதிரையை கட்டி முடித்துவிட்டு கூட்டம் மெல்ல அகல, வலி தாளாத ஒண்டி வைக்கோல் போரை விலக்கி மெல்ல வெளிப்பட்டு தனது கரத்தை எடுக்கமாட்டாது தவிக்க, பட்டத்து குதிரையோ ஒண்டியை பார்த்து மிரள ஆரம்பித்தது.

ஒண்டியின் கைவசமோ பட்டத்துவாள். ஒண்டி ஒரு வினாடி கூடத் தாமதிக்கவில்லை. வாளால்- தைக்கப்பட்ட கையை மணிக்கட்டு வரை ஒரே துண்டாக துண்டித்து கையை வெட்டி விலக்கியவன் குதிரையை கட்டிய கயிற்றை வலக்கரத்தால் அவிழ்த்து பட்டத்து வாளுடன் அந்தப் புரவி மேல் தாவி ஏறினான்.

திமிசுக் காலால் அதன் பின்னந் தொடையை ஒரு தினுசாக தீண்ட பட்டத்துக் குதிரை சிட்டாகப் பறக்க ஆரம்பித்தது.

வழியில் தொங்கிய வெங்கல வோராவை தன் காலால் எட்டி உதைத்து சவால்படி ஒலி எழுப்பி விட்டு, கொட்டும் குருதியோடு ஒண்டி சீறத் தொடங்கினான்.

சில தோட்டாக்கள் அவனை தாக்கப் பார்த்தும் அவனது வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. முகாமே குமைந்துபோக, ஹெரான் கைபிசைய, ஒண்டி ஏறிய பட்டத்துக் குதிரை நெல்கட்டும் செவலின் பிரதான எல்லையை அந்த நள்ளிரவில் அடைந்தேவிட்டது.

அரண்மனை வாசலை அது எட்டி நிற்க இரத்த வாரிதியோடு ஒண்டி இறங்கியபடி "வெற்றி மகத்தான வெற்றி...!" என்று கூவியபடி உள்ளே நுழைகிறான். சப்தம் கேட்டு உறங்காத அரண்மனை வாரிச்சுருட்டியபடி முன்வர பிரதானமாக அவர்கள் நடுவே புலித்தேவர்.

"தேவர் பிரானே...! இதோ வெள்ளையனின் பட்டத்து வாள்! இதோ பட்டத்துக் குதிரை! வெள்ளையனின் கெக்கலிப்பை-சவாலை பொடிப்பொடியாக்கி விட்டேன். நாளை காலைக்குள் அவன் முகாமை காலி செய்துகொண்டு ஓடிவிட வேண்டும். ஓடாவிட்டால் அவனை ஓடஓட விரட்ட வேண்டும்!"

ஒண்டி பெருமகிழ்வோடு வீரமுழக்கம் இடுகின்றான். அவனுக்குத் தெரியாது அதுதான் வெள்ளையர் கூட்டத்துக்கு எதிரான முதல் வெற்றி முழக்கம் என்று.

புலித்தேவர் சிலிர்த்துப் போகிறார். அவனது துண்டு பட்ட கரத்தைப் பார்த்து பதறிப்போய் எப்படி இப்படி ஆயிற்று என்று கேட்கிறார். அவன் நடந்ததை கூறி "இந்தக் கைபோனால் என்ன தங்களின் பொன்மனம் எனக்குத் தங்கக் கை தருமே!" என்று மொழிகிறான். தேவர் மனது நெகிழ்ந்து போகிறது. விழிகளில் ஆனந்தக் கண்ணீர். பட்டத்துக் குதிரைகூட அதைக் கேட்டு ஆனந்திப்பது போல் பரமசாதுவாக அவனை உரசி நிற்கிறது.

---

"இந்த சமையல்காரி சகுந்தலை என்ன நினைச்சுட்டிருக்கா...? மாய்மாலக்காரி...."- கனகம் வயிற்றெரிச்சலில் பொருமினாள்.

"என்ன ஆயிடுச்சுன்னு, இப்படிப் புலம்பறே....? கொஞ்சம் தெளிவாகத்தான் சொல்லேன்..."- ராமநாதன் மனைவியிடம் கேட்டார்.

"பின்னே என்ன... கால்ல கொலுசு மாட்டிக்கிட்டு அவள் ஜிங்கிடி, ஜிங்கிடின்னு குதிரை மாதிரி வீடு முழுக்க அலையறா?"

"அதில் என்னடி தப்பு?"

"ஐயோ... இதில் இருக்கிற சிக்கலே உங்களுக்கு புரியாது... புதுசா கல்யாணம் ஆன நம்ம மகளும், மருமகனும் திருவிழாவுக்காக

## கொலுசு



வி.ராஜா

நம்ம வீட்டுக்கு வந்திருக்கிற இந்த நேரத்தில- இத்தனை நாளா கால்ல கொலுசு போடாமல் இருந்தவள், திடீர்னு கொலுசு போட்டுக்கிட்டு அலையறா....."

"அதுக்கு இப்ப என்ன....?"

"உங்களுக்கு எதுவுமே புரியாது.... பத்திரிகைகள்ல படிச்சதே இல்லையா? வீட்ல இருக்கிற ஆம்பளைங்களை வேலைக்காரிகள் வளைச்சுப் போடற ஜோக்குகள்... நம்ம மருமகனை வளைச்சுப் போட அவள் திட்டம் போடறா.... அது உங்களுக்குப் புரியலே....."

"ஏண்டி சகுந்தலை, இங்கே வாடி... கொலுசு போட்டுக்கிட்டு குதிரை மாதிரி அலையறே... என் மருமகனை வளைச்சுப் போட திட்டம் போடறியா?"- இதைக் கேட்டு அதிர்ந்து விட்டாள் சகுந்தலை.

"அம்மா நாக்கில நரம்பில்லாமல் பேசாதீங்க...."

"உத்தமி மாதிரி பேசாதே. இத்தனை நாளா கொலுசு போடாம இருந்த நீ ரெண்டு நாளா கொலுசு போட்டுக்கிட்டு அலையறியே.... இதிலேர்ந்தே தெரியலையா உன் லட்சணம்....?"

"காரணம் புரிஞ்சுக்காம அபாண்டமா பழி போடாதீங்க.... உங்க மகளும், மருமகனும் சின்னஞ்சிறுசுக... அவங்க இருக்கிற ரூமில் இப்படி அப்படி இருப்பாங்க.... நான் பாட்டுக்கு திடீர்னு போய் நின்னா எல்லாருக்கும் சங்கடமா போயிடும்... அதனால தான் ஒரு சிக்னல் மாதிரி இந்தக் கொலுசை நான் போட்டுக்கிட்டேன். கொலுசு சத்தம் கேட்டு நான் வர்றதைத் தெரிஞ்சுக்கிட்டு விலகிடுவாங்க இல்லையா...!அதனாலதான்! இதைப் புரிஞ்சுக்காம நீங்க என்னென்னவோ பேச ஆரம்பிச்சுட்டீங்க..."- சகுந்தலையின் கண்களின் ஓரம் நீர் வழிந்தது.

"என்னை மன்னிச்சுடு சகுந்தலை...."

# மெய்ப்பொருள்



"கூட்டைவிட்டு ஆவிபோம் வரைக்கும்
மாட்டைப்போல் மனம் ஓடி
வேட்டையென மங்கையரை நாடவிடேன்
கட்டைப் பிரம்மச்சாரியாய் வாழ்வேன்"

உறுதிகாத்தவனுக்கு
காத்திருந்தது சோதனை!

நீராடச் சென்றபோது
தேராடக் கண்டான் அங்கே.

மேனியை மூடிய மெல்லிய ஆடையில்
கேணிக்குள் ஆடினாள் மெல்லிடையாள்.

கண்களை மூடிக்கொண்டான்
மூடிய கண்களுக்குள்
பெண்புறா சிறகடித்தாள்!

கண்டது சில நொடிதான்
உண்டதோ பேரழகு.

'காயமே இது பொய்யடா
காற்றடித்த பையடா'
என்றேநான் வாழ்ந்திருக்க
மாயமே காட்டிவிட்டாள்
காயமே ஆடச் செய்தாள்!

காயத்தில் காயம் செய்தாள்
கண்வாளினால்
மாயப்பெண் காயம் செய்தாள்!

கொலைவாளினால்
காயம் செய்தால்
உதிரம்தான் பெருகிப்பாயும்.
கோதையர் கண்வாளினால்
காயம் செய்தால்
உள்ளம்தான் நாசமாகும்!

மறந்துவிடு மனமே
கறந்து தராதே நினைவை!

புடைத்தெழுந்த முலைகளும்
கடைந்தெடுத்த கால்களும்
குடைந்தெடுக்கும் விழிகளும்
உடைத்திடுமோ மனத்தினை!

கார்க் குழலாள் மார் உயர்த்தி
போர் புரிய அழைக்கிறாள்
மோகம் என்ற பொறிவைத்து
ஞானத்தாகம் கெடுக்க நினைக்கிறாள்.

மூடிய கண் திறக்காமல்
ஆடிய மனதை அடக்கினான்.

'களுக்'கென்ற சிரிப்பொலி
காதருகே கேட்டது.

'மேதினியில் வந்தொரு
மோகினி சிரித்தாளோ?'
கண்களை திறந்தான் காளை

தண்ணீரில் ஆடிய
தாமரை நின்றாள் நேரே!
பனியினில் நனைந்த
கனியினைப் போலிருந்தாள்!

சுளைகளைப் போலிருந்த
சுவை தரு இதழ்கள் கண்டான்.
கணைகளைப் போலிருந்த
கனி தரு எழில்கள் கண்டான்.
சுனையினைப் போலிருந்த
சுழியொன்றும் வயிற்றில் கண்டான்.
இடையது மெலிந்துவாட
அடுத்தொரு செழிப்புமாக
உருவது தாங்கிநின்ற
திரண்ட கால்ரெண்டு கண்டான்.

நீரினில் நனைந்த் ஆடை
பாரினில் சிறந்த பெண்ணை
காணத்தான் தோது செய்ய
நாணித்தான் நின்ற நங்கை
"ஏனத்தான் இது தகுமா?" என்றாள்.

'முறைப் பெண்தான் என்றபோதும்
ஓர்முறைகூட
உற்றுநான் பார்த்ததில்லை!
கறைபட்டு போனேன் இன்று
உறைவிட்டு பாய்ந்த வாளாய்
முறைகெட்டு போனாய் மனமே!'

தன்னைத்தான் நொந்த காளை
கண்ணைத்தான் மீட்டுக் கொண்டான்.

'களுக்' கென்று மீண்டும்
நகைத்தாளே நன் மணியாய்!

'நகைப்பென்ன
வேண்டும் இங்கே?'

"வேறென்ன வேண்டும் அத்தான்?
பேறென்று தருவேன் கேளும்!"

"வாய்க் கொழுப்பு போதுமடி
மேய்ப்பதற்கு ஆள் நானல்ல"

"எனக்கென்றால் வாய்கொழுப்பு
உமக்கென்றால் விழிக்கொழுப்பு
நீராடி வந்த என்னை
நீர் உரித்து பார்த்தீர் கண்ணால்!
கைபட்டால் என்ன-உம்
கண்பட்டால் என்ன?
கன்றிச் சிவந்தது பாரும் தேகமெல்லாம்!"

காளை கண்களை மூடினான்
கோல அழகை காணக் கூசினான்.

"கண்டதும் பொய், காண்பதும் பொய்
காலமும் பொய், கோலமும் பொய்
கன்னியர் வீசும் காதலும் பொய்
மண்ணிலே வீழும் வாழ்க்கையும் பொய்

மெல்லிடை மங்கையர் கைத்தலம் பற்றி
சொல்லிடும் பொய்களை மெய்யென்று நம்பி

கார்க்குழல் பற்றி கனியிதழ் ஒற்றி
போர் என ஆடும் கலவியும் பொய்

தீயிடை விழுந்த புழுவினைப் போல
தேகமும் ஆடி தீயினில் வேக
தாகமும் தீர மோகமும் தணியும்
காமத்தை தேடி வாழ்வதும் பொய்!

நீயும் பொய்யடி, நானும் பொய்யடி
காயும் பொய்யடி, கனியும் பொய்யடி
வாயும் பொய்யடி, வார்த்தையும் பொய்யடி
மாயும் இந்த உடம்பும் பொய்யடி"

மூச்சைப் பிடித்தபடி முணுமுணுத்தான்
முகத்தைப் பார்த்தவளே முறுவலித்தாள்.

வீச்சாக நெருங்கி
கூசாமல் அவனை இறுகத் தழுவினாள்.

'எல்லாம் பொய்யோ
எல்லாம் பொய்யோ?'
கேட்டவள் அவன்
உதட்டை மூடினாள்.

**இலக்கியநயம்**

மார்பினில் மோதிய
மலர்கணை ரெண்டு.
உதட்டினில் ஊறிய
அமுதினை உண்டு
காளையின் மனது
மோகத்தில் விழுந்தது

பொய்யல்ல- இது பொய்யல்ல
கனியும் பொய்யல்ல,
கனிந்த இந்த மேனியும் பொய்யல்ல
சுகமும் பொய்யல்ல
சுவையும் பொய்யல்ல
பொய்யல்ல இது பொய்யல்ல!

"பொய்யோ-மெய்யோ
கண்டதும், பட்டுணர்ந்ததும்
உண்டதும், ஊறிக் களித்ததும்
மொண்டு குடித்ததும்
மூழ்கிக் களித்ததும்
பொய்யோ-மெய்யோ?"
நேர் எதிரே கேட்டாள் நேரிழையாள்.



**தருவது- ரசிகன்**

'மெய்யிலும் மெய்யடி-உன்மேல்
மையலும் மெய்யடி'
கூடிக் களித்தவன் மேலும் நாடினான்.

நங்கை நகைத்தாள்.
நறுங்குறளாம் திருக்குறள் உரைத்தாள்.

"எப்பொருள் கண்டாலும்
உட்பொருள் அறியாமல்
மெய்ப்பொருள் புரியாது!
யார் சொல்லிக் கேட்டாலும்
யாம் நேர் அறிந்து கொள்வதுபோல்
ஆகாது ஒரு நாளும்!"

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
-அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

குறள்-421, அதிகாரம்-43.

## ஸ்போர்ட்ஸ்

### ஷேன் வோன் சாதனை!



இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே 'ஆஷஸ்' டெஸ்ட் போட்டித் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. அண்மையில் மாஞ்செஸ்டரில் நடைபெற்ற 3வது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் என்பதே அந்தச் சாதனையாகும். இவர் மொத்தமாக வீழ்த்திய விக்கெட்டுக்கள் 252. இவருக்கு முன் அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் றிச்சி பேர்னாட் தான் அவுஸ்திரேலிய அணிக்காக அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இவர் வீழ்த்திய விக்கெட்டுக்கள்-248.

உலகிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர்கள் வரிசையில் நான்காவது இடத்தில் இருக்கிறார் ஷேன் வோன். 309 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்தில் இருக்கும் மேற்கிந்தியத் தீவுகளின் சுழற்பந்து வீச்சாளர் லான்ஸ் கிப்ஸின் சாதனையை முறியடிக்க வோனுக்கு இன்னமும் 58 விக்கெட்டுக்கள்தான் தேவை. 1974ம் ஆண்டு முதல் முறியடிக்கப்படாமல் இருக்கும் இச்சாதனையை இன்னமும் 13 டெஸ்ட் போட்டிகளுக்குள் ஷேன் வோன் முறியடித்து விடுவார் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

டெஸ்ட் போட்டிகளில் 200க்கும் அதிகமான விக்கெட்டுக்களை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர்கள் பற்றிய பட்டியல் வருமாறு:

| வீரர் | நாடு | விக்கெட்டுக்கள் | போட்டிகள் | கொடுத்த ஓட்டங்கள் | சிறந்த பந்துவீச்சு |
|---|---|---|---|---|---|
| 1. லான்ஸ் கிப்ஸ் | மே.இ.தீவு | 309 | 79 | 8989 | 8/38 |
| 2. அன்டர்வுட் | இங்கிலாந்து | 297 | 86 | 7674 | 8/51 |
| 3. பிஷன் சிங் பேடி | இந்தியா | 266 | 67 | 7637 | 7/98 |
| 4. ஷேன் வோன் | அவுஸ்திரேலியா | 252 | 55 | 6050 | 8/71 |
| 5. றிச்சி பேர்னாட் | அவுஸ்திரேலியா | 248 | 63 | 6704 | 7/72 |
| 6. பக்வத் சந்திரசேகர் | இந்தியா | 242 | 58 | 7199 | 8/79 |
| 7. அப்துல் காதிர் | பாகிஸ்தான் | 236 | 67 | 7742 | 9/56 |
| 8. கிறிம்மட் | அவுஸ்திரேலியா | 216 | 37 | 5231 | 7/40 |

தற்போது விளையாடி வரும் சுழற்பந்து வீச்சாளர்களில் ஷேன் வோனுக்கு அடுத்தபடியாக அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியிருப்பவர் இந்தியாவின் அனில் கும்ப்ளே. இவர் 38 போட்டிகளில் 163 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார்.

### "மீண்டும் வருவேன்!"

**1988ம்** ஆண்டு சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100 மீட்டர் ஓட்டத்தில் போதை மருந்து உபயோகித்த குற்றத்திற்காக ஆயுட்காலத்திற்கு ஓடத் தடைவிதிக்கப்பட்டார் கனடா நாட்டின் பென் ஜோன்சன்.தனது தடையை நீக்கச் சொல்லி இவர் சர்வதேச அத்லெட்டிக் சங்கம் மீது வழக்குத் தொடர்ந்தார். இவரது மனுவை விசாரித்த நீதிபதி,

"ஒரு வீரர் தனது சொந்தத் திறமை, பலம், உத்வேகம் மூலம்தான் தனது திறமையை வெளிப்படுத்தவேண்டுமே தவிர,போதை மருந்தின் துணையை நாடக்கூடாது," என்று கூறி அவரது மனுவை நிராகரித்து விட்டார். எனினும், "உலகின் அதிகவேக வீரர் நானே, என்பதை நிரூபித்துக் காட்டுவேன்," என்று பென் ஜோன்சன் கூறியுள்ளார்.

### ஓய்வு பெறுகிறார் தீபக் பட்டேல்

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் தீபக் பட்டேல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நைரோபியில் பிறந்த இந்தியரான தீபக் பட்டேலின் வயது 38. இவர் 37 டெஸ்ட்டில் 1200 ஓட்டங்களும், 75 விக்கெட்டுக்களும் எடுத்துள்ளார். அதிகபட்சமாக இங்கிலாந்துக்கெதிராக 99 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

75 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 45 விக்கெட்டுக்களையும், 623 ஓட்டங்களையும் எடுத்திருக்கிறார்.

## சிந்தியா பதில்கள்

★ டியர் சிந்தியா! இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் எதிர்காலம் என்ன?.

தி. வீரசிங்கம், கொழும்பு-06.

எப்போதுமே இறந்தகாலம்தான்!

★ அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரின் விஜயம் பற்றி என்ன நினைக்கிறீர்?

பூ. கனகநாயகம், தெகிவளை.

குதிரையில் இருந்து எட்டத்தில் உள்ள மலர்களைப் பார்ப்பதற்கும், கிட்டத்தில் நெருங்கிச் சென்று மலர்களைப் பார்ப்பதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. மிஸ்டர் அலெக்ஸாண்டர் டௌனர் நம்நாட்டு அரசு கொடுத்த குதிரையில் இருந்து நோக்கிய போது மலர்கள் முட்களாகத் தெரிந்திருக்கின்றன. அவரது பார்வையில் உள்ள தப்பைச் சுட்டிக்காட்ட அவரைச் சந்தித்த தமிழ்க் கட்சிகள் தவறிவிட்டன. 'முயலுக்கு மூன்றுகால்' என்று வெள்ளைக்காரன் சொன்னால் நம்பிவிடுகிறோமே; நம் இரத்தத்தில் இன்னமும் மிஞ்சியுள்ள அடிமைத்தனம்தான் காரணம்!

★ சிந்தியா! 'பெப்சி' கிண்ணப் போட்டியில் இந்தியா ஏன் தோற்றது?

செல்வி ஜி.றீட்டா, கண்டி

இலங்கை அணியின் அபார ஆட்டத்தால்!



அப்பாஸ், லக்ஷி- இனி எல்லாம் சுகமே

★ 'வி.ஐ.பி.' படம் எப்படி?

யூ. முஸ்தாக் அஹமட், நிந்தவூர்-19.

படத்தில் அப்பாஸ் இருந்தாலும் 'வி.ஐ.பி.' பிரபுதேவாதான்! பொழுதுபோக்குச் சித்திரம்!

★ 'பெப்சி' இறுதியாட்டத்தில் சனத்தின் விளாசல் எப்படி?

எஸ். நரேஸ், கொழும்பு-15.

அன்று நடந்தது இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான போட்டியா? சனத்துக்கும், அத்தபத்துக்கும் இடையிலான விளாசல் போட்டியா? என்று சந்தேகம் வந்துவிட்டது. என்னைக் கேட்டால் அன்றைய நாயகன் சனத் என்றுதான் சொல்வேன்!

★ சிந்தியா! மைக் டைசன் செய்தது சரியா?

சி. புவீந்திரன், வெஸ்ட்றோல்.

சரியென்று டைசனே சொல்லவில்லையே! குத்துச் சண்டையில் எதிராளிக்கு குத்துக் கொடுக்கலாம்; காதைக் கடித்து கொத்துக் கறியாகக் கொடுக்கலாமா?

★ சிந்தியா! ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களின் லண்டன் விஜயத்துக்கு என்ன காரணம்?

பி. பாஸ்கரன், மாத்தளை.

'கறுப்பு ஜூலை' 14வது நினைவுநாளும் ஒரு காரணம். தம்பி அனுரா அரசியல் பிரவேச 20வது ஆண்டு விழாவைத் தவிர்ப்பதும் மற்றுமொரு காரணம் எனலாம்.

★ தமிழ்ப் படவுலக இயக்குநர்களுக்கும்,தொழிலாளர்களுக்கும் இடையிலான பிரச்சனையில் கலைஞர் கருணாநிதி ஏன் தலையிடாமல் இருக்கிறார்? அவரும் திரையுலகில் இருந்தவர்தானே?

மா. காந்தரூபன், வவுனியா.

தலையிடவில்லை என்று யார் சொன்னது? மூன்றுவாரங்களுக்கு முன்னரே இரு தரப்பையும் கூட்டிவைத்து மத்தியஸ்தம் செய்து பார்த்தார். கலைஞர் இயக்குநர்கள் பக்கம் நிற்பதாக தொழிலாளர்கள் நினைக்கிறார்கள். அதனால் சமரச முயற்சி உடனடியாக வெற்றிபெறாமல் போனது.

★ திருத்தவே முடியாதவர்கள் எப்படிப் பட்டவர்கள் சிந்தியா?

மா. சின்னக்கோன், சிலாபம்.

தி.மு.க: அதாவது திருத்த முடியாத கழுதைகள். நல்லதிலும் தீயதைத் தேடுவார்கள்.

ஓர் இளைஞன் பாதிரியாரிடம் பாவ மன்னிப்புக் கேட்கச் சென்றான்.

"நான் ஒரு பெண்ணுடன் தகாத உறவு வைத்துக்கொண்டேன்," என்றான்.

"யார் அந்தப் பெண்?" என்று கேட்டார் பாதிரியார்.

இளைஞன் சொல்லத் தயங்கினான். உடனே பாதிரியார்: "மூன்றாவது தெருவில் வசிக்கும் ஷீலாவா?"

"இல்லை!"

"ஊர்க்கோடியில் இருக்கும் வீட்டில் வசிக்கும் ரோஸியா?"

"இல்லை!"

பாதிரியார் விடாமல் தொடர்ந்து மேலும் சிலரின் பெயரைச் சொல்லி 'அவளா, இவளா?' என்று கேட்டார். அப்படியும் அவன் வாயே திறக்கவில்லை.

பாதிரியாருக்கு கெட்டகோபம் வந்துவிட்டது. "எனக்குத் தெரியாமல் நீ உண்மையை மறைக்கிறாய். உனக்குப் பாவ மன்னிப்புக் கிடையாது" என்று விரட்டினார்.

வெளியே வந்த இளைஞனிடம் அவனது நண்பன் "என்னடா பாவமன்னிப்பு கிடைத்ததா?" என்று கேட்டான்.

"இல்லை, ஆனால் புதுசாக எட்டுப்பேரின் முகவரி கிடைத்தது." என்றான் இளைஞன்.

★ கடும் கோபத்தை அடக்க ஒரு வழி சொல்லுங்கள்?

எஸ். தங்கேஸ்வரன், திருமலை.

ஓடிப்போய் கண்ணாடியில் முகத்தைப் பாருங்கள். உங்களுக்கே சகிக்காது.

★ கொடிய போதைப் பொருள் எது சிந்தியா?

க. கார்த்திக், சிலாபம்.

'ஹெறொயின்' பொல்லாத ஆட்கொல்லிப் போதைப் பவுடர் இது உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் நாசம் செய்துவிடும்.

★ சிந்தியா! உங்கள் கதை சொல்லும் கற்பனைத் திறனுக்கு பாராட்டுக்கள்! ஒரு 'ஏ' வன் கதை சொல்லுங்கள்?

வி. நித்தியா, மட்டக்களப்பு.

இப்படியெல்லாம் அவசரப்பட்டு பாராட்டக்கூடாதுங்க! கதையெல்லாம் நம்ம சொந்த சரக்கல்ல; ஆங்காங்கே படித்து நினைவில் வைத்திருப்பதை சந்தர்ப்பத்துக்கு ஏற்ப உருவிவிட்டுட வேண்டியதுதான்!

இனிக் கதை:

அந்த மேலை நாட்டுத் தம்பதிக்கு திருமணமான வெள்ளிவிழா! அன்றிரவில் தனது 25 வருடகால சந்தேகத்தை கேட்டான் கணவன்:

"அன்பே! நாம் திருமணம் செய்து இத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டாலும், உன் அலமாரிப் பக்கம் என்னை அனுமதிப்பதில்லை. இன்றாவது நான் உன் அலமாரியைத் திறந்து பார்க்கலாமா?"

"ஓ.....பார்க்கலாமே!" என்று அலமாரியைத் திறந்து காட்டினாள் மனைவி. ஆடைகள், அணிகலன்கள் என்று நிரம்பி வழிந்து கொண்டிருந்த அலமாரியின் ஒரு பகுதியில் கத்தை கத்தையாகப் பணம். அதன் பக்கத்தில் இரண்டு முட்டைகள்.

"எல்லாம் சரி, அலமாரியில் ஏன் முட்டைகளை வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான் கணவன்.

மனைவி சங்கடப்பட்டு நெளிந்தபடி தயங்கித் தயங்கிச் சொன்னாள்: "என்னை நீங்கள் மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் இதைச் சொல்கிறேன். வேறு ஆடவர்களிடம் நான் என்னை இழக்கும்போது, அதன் அடையாளமாக ஒரு முட்டை வாங்கி அலமாரியில் வைத்துவிடுவது வழக்கம்."

கணவன் அலமாரியைப் பார்த்தான். இரண்டே இரண்டு முட்டைகள்தான். ஆனந்தக் கண்ணீரோடு மனைவியை தழுவிக் கொண்டு: "டார்லிங்! 25 ஆண்டுகால திருமண வாழ்க்கையில் இரண்டே இரண்டுமுறைதான் நீ தவறு செய்திருக்கிறாய். ஆனால் நான்...? ஓ.... நீ ரியலி கிரேட்" என்றான்.

அப்போது மனைவி சொன்னாள்:

"டார்லிங்! நான் இன்னமும் முழுமையாகச் சொல்லி முடிக்கவில்லை. ஒவ்வொரு முறையும் அலமாரியில் முட்டைகளின் எண்ணிக்கை அரை டஜன் ஆனதும் அவற்றை விற்றுப் பணமாக்கி, அதையும் முட்டைகளின் பக்கத்திலேயே வைத்து விடுவேன்!"

கத்தை கத்தையாக பணம் இருந்த காரணம் அப்போதுதான் கணவனுக்குப் புரிந்தது. மூர்ச்சையாகி விழுந்துபோனான்.

★ சிந்தியா! நல்ல நண்பர்கள் எனக்குக் கிடைக்க மாட்டேன் என்கிறார்களே?

எம். இல்யாஸ், புத்தளம்.

"ஓர் ஆண்டிற்குள் ஒரு சிறந்த நண்பனைப் பெற முடியாது, ஆனால் ஒரு மணி நேரத்தில் ஒரு சிறந்த நண்பனை இழக்க முடியும்"! இது ஒரு சீனப் பழமொழி என்று ஞாபகம்.

★ காதல், காமம் இரண்டுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன?

என்.எல்.அக்பர், கிண்ணியா.

காதலுக்குள் உள்ள காமம் தங்கம் போன்றது!

காதலில்லாத காமம் கண்ணாடி போன்றது. விரைவில் உடைந்துவிடும்!

# இராமாயணம் அங்கம் 94

இராமபிரான் தென்திசையை நோக்கியவாறு நின்றிருந்தார். இலங்கைக் கோட்டையின் வடவாயிலை ஒட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போர்க் காட்சிகள் அவர் கண்களில் பட்டவண்ணம் இருந்தன.

சற்று முன்னர் பின்வாங்கி ஓடி கோட்டை வாயினுள் அரக்கர் படை நுழைவதையும் இராமபிரான் பார்த்துக்கொண்டிருந்தார். அரக்கர் படை பின்வாங்கி ஓடும்போது வானர சைனியம் பெரும் ஆரவாரத்துடன் மகிழ்ச்சிக் கூத்தாடியது. ஆனால் கோட்டையினுள்ளிருந்த இராவணனின் வில்லிலிருந்து பிறந்த இடி ஓசை போன்ற நாணொலி கேட்டதும் வானர சேனையின் ஆர்ப்பாட்டங்கள் அத்தனையும் அடங்கி, ஒருவகைப்பீதி நிலை தோன்றியது.

புறப்பட்டுவிட்டதைக் கண்ட வானரசேனை அணிகள் குதூகல மேலீட்டால் துள்ளிக் குதித்தன. பெரும்பாறைகளையும் பெருவிருட்சங்களையும் தாங்கிய படையினர் இராவணனின் சேனையை நோக்கி முன்னேறினர். படைகளைப் பின் தொடரவிட்டு சுக்கிரீவன் முன்னால் சென்றான். அவனுடைய சிரசின் மேல் ஒரு மலைச் சிகரத்தைப் பெயர்த்தெடுத்து இரு கைகளாலும் தாங்கிய வண்ணம் காணப்பட்டான்.


சுக்கிரீவன் பெரும் வானரப்படையுடன் வருவதைக்கண்ட இராவணன் கோபத்தால் கொதிப்படைந்தான். தன்னுடைய பத்துச்சிரசுகளையும் அலங்கரித்த கிரீடங்களைப் பறித்துத் தரையில் வீசி எறிந்து அவமானப் படுத்தியவன் தன் முன்னே வருவதைக் கண்டதும், அவனுக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று கருவினான்.

இராமபிரானும் அவ்வேண்டுகோளைத் தட்டாமல் ஏற்றுக்கொண்டார். சுக்கிரீவன் இராவணனின் அம்படிபட்டு மயக்கமுற்ற வேளையில், அதே இடத்தில் ஆஞ்சநேயர் தோன்றினார். அவருடைய போர்க்கோலம் பூண்ட திருவுருவம் கண்டு இராவணன் சற்றுத் துணுக்குற்றான். 'இலங்காபுரிக்குள் ஏற்கனவே புகுந்து, எவருக்கும் தெரியாமல் அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த சீதையைக் கண்டவன் இவன்தான்! எமது படையின் பெரும் பகுதியையும் வீரத்தளபதிகள் ஐவரையும்கூட அழித்தவன் இவன்தான்! எனது அருமை மகனையும் கொன்றவன் இவன். இலங்கை மாநகரெங்கும் சிதையும் வண்ணம் தீமூட்டி விட்டுத் தப்பிச் சென்றவனும் இவனேதான்! ஆகவே இவனை இன்றே தீர்த்துக்கட்டிவிட வேண்டியதுதான்!' என்றவாறு இராவணன் சிந்திக்கலானான்.

## இராவணனுடன் பொருதிய இராமதூதன்

இராமபிரானருகில் இலக்குவனும் நின்றிருந்தார். எப்போது போர்க்களம் புகுவது என்று இலக்குவனின் தோள்கள் துடித்துக் கொண்டிருந்தன. இதனை அறிந்த இராமபிரான் தம்பியின் வலதுதோளை தன் இடது கையால் தட்டி, பதற்றப்படாமல் இருக்கும்படி சைகை செய்தார்.

இலங்கை மாநகர்க் கோட்டைக்குள்ளிருந்து பெரிதாக முரசுகளின் முழக்கம் எழுந்தது. கூடவே குழல், சங்கு போன்றவற்றின் ஓசைகளும் விண்முட்ட எழுந்தன. இதுவரை கோட்டைக்குள்ளிருந்து புறப்பட்டு வந்த ஆரவாரங்களைவிட பன்மடங்கு அதிகமாக ஓசைகள் கேட்டன. இதனால் வருபவர்-இதுவரை போர் முழக்கமிட்டுவந்தவர்களைவிட மிக முக்கியத்துவம் வாய்ந்தவராகத்தான் இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது.



### களத்தில் குதித்த இலங்கையர்கோன்

இலங்கை வேந்தன் இராவணனே போர்க்கோலம் பூண்டு புறப்பட்டு வருகிறான் என்பதை உடனே அங்கிருந்த படையினர் அனைவரும் அறிந்து கொண்டனர். பல குதிரைகள் பூட்டிய மிகப் பெரியதேரில், கிரீடங்கள் புனைந்த தன் பத்துத் தலைகளுடன் இராவணன் வந்து கொண்டிருந்தான், படை அணிகளின் முன்புறமும் பின்புறமும் இராவணனின் வீரதீர பராக்கிரமச் செயல்களைப் போற்றிப் புகழ்ந்து பாடி வரும் பாணர்களும் வந்து கொண்டிருந்தனர். யாழ், தவில், சமனிக்கை, முழவு, உடுக்கை போன்ற இசைக்கருவிகள் பாணர்களின் பாடல்களுக்கு ஏற்ப ஒத்திசை வழங்கின.

வடவாயிலிலிருந்து சிறிது தூரம் வந்ததும் இசைவல்லுநர்கள் நின்றுவிட்டனர். அரக்கர் வீரர்கள் "இலங்காதிபதி இராவணேசன் வாழ்க! திக்கெட்டும் தன்புகழை நாட்டி இந்திரனை அடிமைகொண்ட இலங்கையர் கோன் வாழ்க" என்ற முழக்கங்கள் கடலலைபோல் எழுந்து தணிந்த வண்ணம் தொடர்ந்தன.

கோட்டைக்குள்ளிருந்த வண்ணமே வில்லில் நாணேற்றி, அதனைச்சுண்டு விரலால் தட்டியபோது எழுந்த ஓசை அந்தப் பிரதேசமெங்கணும் எதிரொலித்தமையினால் வானர சேனையில் ஒரு பதற்ற நிலை ஏற்கனவே உருவாகியிருந்தது. இப்பொழுது கோட்டைக்குள்ளிருந்து படைகள் ஆரவாரித்து வருவதைப் பார்த்ததும் அவர்களின் கிலி பன்மடங்காகியது. இதனைக் கவனித்த வானர வேந்தன் சுக்கிரீவன் கொதித்தெழுந்தான். வீராவேசத்துடன் விண்ணில் தாவிக் குதித்து வானர அணிகளை வலம்வந்தான். வாயினால் எவ்வார்த்தையும் கூறாமல் தன் முகச் சைகைகளின் மூலமும் கண் சைகைகளின் வாயிலாகவும் படைகளுக்குத் தைரியமூட்டினான். தொடர்ந்து இராமபிரானிடம் வந்து அவர் தாள் தொட்டு வணங்கி, இராவணனுடன் போரிட் தன்னை அனுப்பிவைக்குமாறு வேண்டினான். இராமபிரான் சுக்கிரீவனின் தோள்தொட்டு, பின்னர் சிரசையும் தொட்டு வாழ்த்தி வழி அனுப்பிவைத்தார்.

### சுக்கிரீவன் போர்க்கோலம்

சுக்கிரீவன் இராவணனுடன் பொருதப்

சினம் மேலிட்டதனால் கண்கள் இருபதிலிருந்தும் தீச்சுவாலைகள் வெளிப்பட்டன. அவனுடைய மூக்குகளிலிருந்து வெளியேறிய சுவாசமும் கொடூரமான நெருப்பையே கக்கியது.

முழுமையான படைக்கலங்களைக் கொண்ட நால்வகைச் சைனியத்துடன் செல்லும் தான், வெறும் மரங்களையும் கற்பாறைகளையும் கொண்டு எதிரேவரும் வானரப் படையுடன் போரிடுவது தன் கௌரவத்துக்குப் பேரிழுக்காகுமே என்று ஒரு கணம் சிந்திக்கலானான் இராவணன். இதற்கிடையில், "ஏய் துன்மார்க்கனே- இராவணா! இதற்குப் பதில் சொல்!" என்று இடிபோல் சுக்கிரீவனின் குரல் எழுந்தது. தொடர்ந்து கண்மூடி விழிப்பதற்குள், அவன் கையிலிருந்த மலைச்சிகரம் இராவணனை நோக்கி வாயு வேகத்தில் விரைந்தது. தன்னை நோக்கி விரைந்து வந்த பேரபாயத்தை உணர்ந்த இராவணன், துரித கதியில் தன் வில்லில் ஒரு கணையைப் பூட்டி எய்தான். சுக்கிரீவன் வீசிய அப்பெரும் சிகரம் பொடிப் பொடியாகித் தரையில் விழுந்தது. அந்தக் கற்துண்டுகளால் தாக்குண்ட பல வானரங்கள் மட்டுமல்லாமல் அசுரப்படை வீரர்களும், யானைகள் குதிரைகளும் மடிந்தன. எண்ணற்ற இரதங்களும் சிதைந்தன.

தான் வீசி எறிந்த மலைச்சிகரம் உடைந்து சிதறியதைக் கண்ட சுக்கிரீவன் மேலும் சினமடைந்தவனாக மாபெரும் மராமரத்தை வேரோடு பிடுங்கி இராவணன் மீது வீசி எறிந்தான். இராவணனின் பாணங்கள் பட்டு அம்மரம் துண்டு துண்டாகப் பெயர்ந்து விழுந்தது. சுக்கிரீவன் முன்னர் பெயர்த்தெறிந்த மலையைவிட மற்றுமொரு பெரு மலையையே பெயர்த்து வந்து வீசி எறிந்தான். அதனையும் இராவணன் துண்டு துண்டுகளாகச் சிதைத்துவிட்டான். அத்துடன் தன்னுடைய வில்லில் சக்திமிக்க கணை ஒன்றைப் பொருத்தி சுக்கிரீவன் மீது வீசினான். அந்த அம்பைத் தடுக்கும் ஆற்றலற்றவனாக நின்றிருந்த சுக்கிரீவனின் மார்பின்மீது பாய்ந்த அந்த அம்பு அவன் மார்பினுள் புகுந்து அவனைத் தடுமாறச்செய்தது.

சுக்கிரீவன் இராவணனை எதிர்த்துப் போரிடச் சென்றபோது ஆஞ்சநேயர், அடுத்ததாகப் போர்க்களம் செல்லவேண்டும் என்று இராமபிரானை வேண்டிக் கொண்டார்.

### ஆஞ்சநேயர் களம் புகுந்தார்

ஆஞ்சநேயர் இராவணனைப் பார்த்து, "மாவீரனான அரக்கர் தலைவனே! சூரியன் மகனான சுக்கிரீவன் மயக்கமுற்றிருக்கிறார். அவர் மயக்கம் நீங்கி எழுமுன் என்னிடம் வீரத்தைக் காட்டு பார்க்கலாம்!" என்றார்.

இராவணனும், "நீ என்னுடன் பொருத வருவாய் என்று எனக்கு நன்கு தெரியும். வரும்போதே பெருமலை ஒன்றைப் பெயர்த்து வந்திருக்கிறாய்! எங்கே உன் கை வரிசையைக் காட்டு பார்க்கலாம்!" என்றான், தன் வில்லில் அம்பொன்றைத் தொடுத்த வண்ணம்.

அனுமன் தன் தோள்களில் முழுப் பலத்தையும் செலுத்தி இராவணன்மீது மலையினை வீசினான். மாபெரும் ஒலியுடன் அந்த மலை சுழன்ற வண்ணம் சீறிச்சென்றது. இதற்கிடையில் இராவணன் எய்த அம்பும் பாய்ந்து வந்து மலையினில் மோதியது. பெரும் நெருப்புக் கோளம் போன்று- அந்தமலை தீப்பற்றிய வண்ணம் கீழே விழுந்தது. தரையில் போரிட்டவண்ணமிருந்த இரு தரப்புப் படையினரில் ஆயிரக் கணக்கில் இத்தீக் கோளத்தில் சிக்கி மாண்டனர்.

ஆஞ்சநேயர் வீசிய மலைதன்னுடைய கணையினால் தீப்பற்றி எரிந்து வீழ்ந்ததனையே இராவணன் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தமையினால், ஆஞ்சநேயர் அடுத்ததாக மாபெரும் மலையினைப் பெயர்த்தெடுத்து வீசியதைக்காணவில்லை. அம்மலை நேராக இராவணனுடைய மாமேரு மலை போன்ற தோளில் மோதிச் சிதறியது. தோளில் அணியப்பட்டிருந்த- நவமணிகள் பொதிந்த-தங்கப் பட்டயத்தை உடைத்து வீழ்த்தியது. இதனால் இராவணனின் கோபம் அளவிட முடியாததாக அதிகரித்தது. தன் அம்பறாத்தூணியிலிருந்து ஒரே தரத்தில் செலுத்தக்கூடிய பத்துக் கணைகளை எடுத்து நாணிலேற்றி ஆஞ்சநேயர் மீது செலுத்தினான். அந்தக் கணைகள் எல்லாம் இலக்குத் தவறாமல் ஆஞ்சநேயரின் மார்பிலும் தோள்களிலும் தைத்தன. இத்தாக்கத்தினால் ஆஞ்சநேயருக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது.

இக்காட்சியைக் கண்ட வானரப் படைகள்- ஆஞ்சநேயருக்கு என்ன நேருமோ என்று அஞ்சினர். அரக்கர் படைத்தளபதிகளும், தங்கள் அணிக்கு வெற்றி கிடைத்துவிட்டதென ஜெயகோஷம் எழுப்பினர். ஆனால் ஆஞ்சநேயரோ தன் அங்கமெல்லாம் நிறைந்த மூச்சிலும் வியாபித்திருந்த தெய்வமான இராமபிரானைத் துதித்து 'ஸ்ரீ இராம ஜெயம்' என்ற மந்திரத்தை பலத்த தொனியில் பல தடவைகள் உச்சரித்தார். உடனடியாக அவருடைய முகம் பிரகாசமடைந்தது. மீண்டும் பெரும்புன்னகையை உதிர்த்த வண்ணம், வானுயர்ந்து வளர்ந்திருந்த வெண்கடம்ப மரம் ஒன்றைப் பிடுங்கி இராவணன்பால் வீசி எறிந்தார். அம்மரம் பேரிரைச்சலை எழுப்பிய வண்ணம் இராவணனின் தேரின் முன்பாகப் போய் மோதியது. இரதம் ஒரு பக்கமாகச் சரிந்தது. தேர்ப்பாகன் மீதும் அம்மரத்தின் கிளையொன்று பட்டு அவனைக் கீழே உருட்டித் தள்ளியது. அவன் உயிரும் பிரிந்தது.

(தொடர்ந்து வரும்)

**இராஜகுமாரன்**

### இராமாயணப் போட்டி: 92

**சரியானவிடை:-** வச்சிரமுட்டி, கும்பானு, பிரகத்தன்.

1. டி.பி. இரத்தினவேல், 65, பள்ளேவளை, கம்பளை.
2. செல்வி அ. ராஜேஸ்வரி, கட்டை, கோணேசபுரி, நிலாவெளி.
3. அ. மோகனகுமார், 147/2, கணபதி வீதி, டச்பார், கல்லடி, மட்டக்களப்பு.
4. செல்வி த.தாட்சனி, 11, உபதிஸ்ஸ வீதி, பம்பலப்பிட்டி, கொழு-04.
5. செல்வி சீனத் அரூஸா இஸ்மாயில், 14 தே.வீ.தி., கெத்தாராம வீதி, மாளிகாவத்தை, கொழு-10.

**போட்டி இல. 94** கேள்வி:- **பாணர் பாடல்களுக்கு ஒத்திசை வழங்கிய இசைக்கருவிகளின் பெயர்களைத் தருக?**

ஆகஸ்ட் 09 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.94, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

**சுமார் 25 வருடங்களுக்கு முன்னால் கற்பனைக் குதிரையில் பின்னோக்கி பறக்கிறார் காதிலை பூ கந்தசாமி. அப்போது ஒரு பேட்டி எடுத்திருந்தால் இப்படித்தான் இருக்கும் என்கிறார்.**

**காயூ.க: துரையப்பா கொலையானதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சீட்டணி: அதுதான் நாம் ஒரு கண்டன அறிக்கை விட்டுள்ளோமே.

**காயூ.க: கண்டனத்தில் காரமில்லை என்கிறார்களே?**

சீட்டணி: நாங்கள் அகிம்சைமீது நம்பிக்கை கொண்டவர்கள். கனிவாகத்தான் கண்டிப்போம். காரமில்லை சாரமில்லை என்றெல்லாம் ஆளும் கட்சி ஏஜெண்டுகள் அவதூறுப் பிரசாரம் செய்கிறார்கள்.

**காயூ.க: மாநகர முதல்வர் பலியாகியுள்ளார். அவரது மரணச் சடங்கில்கூட நீங்கள் யாரும் கலந்துகொள்ளவில்லையே?**

# அன்று கண்ட பேட்டி

சீட்டணி: அவர் என்ன மாமனா, மச்சானா? உரிமைப் போராட்டத்தில் நாங்கள் உதிரம் சிந்தியபோது கூட இருந்து குண்டாந்தடியடிபட்டவரா? குறைந்த பட்சம் ஒரு அடையாள உண்ணாவிரதத்தில்கூட பங்குகொண்டவரா? கொள்கை உறுதி கொண்ட எங்கள் கூட்டம் எப்படிக் கலந்து கொள்ளும் அவரது இறுதிச் சடங்கில்?

**காயூ.க: உங்கள் இளைஞர் அணியினர் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்களே?**


சீட்டணி: காரணமற்ற கைதுகள்! துரையப்பா மறைவுக்கு தோரணம் கட்ட மறுத்தவர்கள்கூட கைது செய்யப்பட்டுள்ளார்கள். காரணமின்றிக் கைதுசெய்யப் பட்டவர்கள் விடுதலையாகாவிட்டால் எம் இளைஞர்கள் அமைதிவழியில் நம்பிக்கை இழந்துவிடுவார்கள் என்று எச்சரிக்கிறோம்.

**காயூ.க: மரணச் சடங்கில் கலந்து கொள்ளாதது அரசியல் நாகரீகம் இல்லாத செயலாகாதா?**

சீட்டணி: உயிரோடு இருந்தபோது எம்முடன் உடன்படாத ஒருவரை மறைந்த பின்னர் பாராட்டுவதற்கு இது ஒன்றும் விளையாட்டுப் போராட்டமல்ல. விடுதலைப் போராட்டம்! இங்கே தடைக்கற்களுக்கு மரியாதை செலுத்துவது நம் மரபல்லவே!

**காயூ.க: மேடைகளிலும், உங்கள் சுதந்திரன் பத்திரிகையிலும் நீங்கள் துரையப்பாமீது தொடுத்த அவதூறுகள்தான் அவர் கொல்லப்பட காரணம் என்று சொல்கிறார்களே?**

சீட்டணி: அவதூறுகள் என்பது எட்டப்பர்கள் கூறும் கெட்டவார்த்தை! நாம் கூறிய அத்தனையும் உண்மைகள்! செத்தவர் பெயரால் அனுதாபத்தைக் கிளறி தங்களை உத்தமர்கள் என்று காட்ட உயிரோடு உள்ள எட்டப்பர்கள் எங்கள்மீது குற்றம் சாட்டுகிறார்கள்.



**காயூ.க: துரையப்பா காலத்தில் யாழ் நகர் புதுக்கோலம் பெற்றது. உங்களால் முடியாததை அவர் செய்ததுதான் உங்களுக்கு பொறுக்கவில்லையாமே?**

சீட்டணி: தீய சக்திகள் கூறும் தீண்டத்தகாத கட்டுக்கதைகள் அவை! அழிந்து கொண்டிருக்கும் எம்மினத்தைக் காக்க எழுந்து கொண்டிருக்கிறது இளம் தலைமுறை! எங்கள் இனத்தின் எழுச்சியை திசை திருப்ப திசைக்கொன்றாய் வீசப்படும் எலும்புத்துண்டுகள்தான் அபிவிருத்தித் திட்டங்கள்!

**காயூ.க: இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் பெற்றுத் தருவதாக சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் எம்.பியுமான அருளம்பலம் கூறியிருக்கிறாரே?**

சீட்டணி: அவர் அடுத்த தேர்தலுக்கு வாக்குப்பெற ஆட்கள் தேடுகிறார். நாமோ அடுத்த தலை முறை வாழ்வு பெறும் போராட்டத்துக்கு ஆட்களை திரட்டுகிறோம்!

**காயூ.க: கௌரவ நல்லூர் எம்.பி. அருளம்பலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சீட்டணி: யாழ்ப்பாண இராச்சியத்தை கட்டியாண்ட கடைசித் தமிழ் மன்னன், அந்நியரை எதிர்த்த அடலேறு சங்கிலியன் வாழ்ந்ததும் நல்லூரில்தான். அந்த மானமறவனை காட்டிக்கொடுத்த ஈனக் குணத்தினன் வாழ்ந்ததும் நல்லூரில்தான்!

**காயூ.க: துரோகிகளே தூரவிலகுங்கள் என்று உங்கள் கோவை மகேசன் ஒரு பிரசுரம் வெளியிட்டுள்ளாரே? விலகாவிட்டால் என்ன செய்வீர்கள்?**

சீட்டணி: நாங்கள் அகிம்சைவாதிகள். ஆனால் தம்பிமாரின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. தந்தையின் விரலசைவுக்கு இன்று அவர்கள் கட்டுப் பட்டிருக்கிறார்கள். நாளை தளபதியின் தலைமை வந்தால் இந்தநிலை நீடிக்கும் என்று சொல்ல முடியாது!

**காயூ.க: 'வெறிநாய்களை கட்டிவையுங்கள் அல்லது சுட்டுவீழ்த்துவோம்' என்று கோப்பாய் கோமகன் அமரர் வன்னியசிங்கம் கூறியதை அடிக்கடி 'சுதந்திரன்' பத்திரிகையில் நினைவூட்டுகிறீர்களே? அகிம்சைக்கும் சுட்டுவீழ்த்தும் ஹிம்சைக்கும் என்ன சம்பந்தம்?**

சீட்டணி: அதில் ஒரு முரண்பாடும் கிடையாது! சில தீயசக்திகள் நாங்கள் முரண்பாடாக பேசுவதாகப் பிரசாரம் செய்கிறார்கள்! 'தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லையானால், தமிழர்கள் தங்கள் பாதுகாப்புக்கு தேவையான ஏற்பாட்டை தாங்களே செய்து கொள்ள வேண்டி ஏற்படும்' என்று எங்கள் தளபதி நாளைய தமிழீழ முதல்வர் அமுதத் தலைவர் கூறியிருக்கிறார் என்பதை நினைவூட்டுகிறோம். வன்னியனார் சொன்னதைத்தான் அவர் வழிவந்த தளபதியும் கூறியிருக்கிறார்.

**காயூ.க: 'வீட்டுக்கொரு வீரனே விரைந்து வா' என்று அழைப்பு விடுத்துள்ளீர்களே! அடுத்த தேர்தல் பிரச்சாரத்துக்கு ஆட்திரட்டலா? அல்லது அடுத்த கட்டப் போராட்டத்துக்கான திட்டமா?**

சீட்டணி: இரண்டுக்கும்தான்! அடுத்த பொதுத்தேர்தலும் போராட்டத்தின் ஒரு படிக்கல்லுத்தான்! அகில உலகமே கவனித்துக் கொண்டிருக்கிறது!

**காயூ.க: என்ன கவனிப்பு?**

சீட்டணி: ஈழத் தமிழன் மானமுள்ளவனா? அல்லது மதிகெட்டு மாற்றார் பின் சென்று, தனக்கொரு நாடின்றி, தனக்கொரு கொடியின்றி வாழ விரும்பும் மானம் கெட்டவனா? என்று 77ம் ஆண்டு தேர்தலை வைத்துத்தான் அகில உலகம் எங்களை எடைபோடப்போகிறது. ஈழத் தமிழன் உதயசூரியன் எழ முன்னரே எழுந்து பல்துலக்கி, முகம் கழுவி வாக்குச் சாவடிக்கு செல்லும் உற்சாகத்தைக் காண உலகமே காத்திருக்கிறது! ஒவ்வொரு வோட்டும் எங்களை அடக்கியாளும் ஆதிபத்தியத்துக்கு வைக்கும் வேட்டு.

**காயூ.க: பாராளுமன்றம் சென்றபின்னர் மனது மாறிவிட்டால்..**

சீட்டணி: ஹாஹாஹா... சிறைச்சாலை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை! தூக்கு மேடை பஞ்சு மெத்தை! பாராளுமன்றம் பன்றித் தொழுவம்!

**காயூ.க: அப்படியானால் அங்கே போக ஏன் ஆசைப்படுகிறீர்கள்?**

சீட்டணி: எட்டப்பர்கள் செல்வதை தடுப்பதற்காக! அங்கு நின்று கத்தினால்தான் உலகின் செவிகளுக்கு எட்டும் என்பதற்காக! உலகின் முன்னால் எமது பிரச்சனையை எடுத்துச் செல்வதற்காக!

**காயூ.க: உலகின் முன் எடுத்துச் செல்ல வேண்டுமானால் விமானநிலையத்துக்கல்லவா செல்லவேண்டும். எலக்ஷன் கேட்காமல் கலெக்ஷன் செய்து விமான ரிக்கெற் எடுத்துக் கொள்ளலாமே?**

சீட்டணி: துரோகிகள்தான் இப்படி குதர்க்கமாகப் பேசுவார்கள்.

**காயூ.க: தனிநாடு காண்பதற்கு உங்கள் வேலைத்திட்டம் என்ன?**

சீட்டணி: வேளை வரும்போது சொல்லுவோம்! இப்போதே சொல்வது சாணக்கியமல்ல என்பதை தம்பிமார் புரிந்து கொள்ளவேண்டும்! இப்போதே சொன்னால் எட்டப்பர்கள் அதைக் கேட்டு காட்டிக் கொடுத்துவிடுவார்கள்! முதலில் நம் மத்தியில் உள்ள களைகளை அகற்றுவோம்!

(பாட்டுக் கேட்கிறது)

**"உதயசூரியன் உதிக்கின்ற வேளையில் உறங்காதே தமிழா!"**


**காயூ.க: கவனம் ஐயாமாரே! எல்லோரும் விழித்துக் கொண்டால் உங்கள் பாடும் தள்ளாட்டமாகப் போகப்போகுது! எல்லோரையும் விழிக்கச் சொல்லிப் போட்டு நீங்கள் உறங்க ஆசைப்பட்டாலும் நிம்மதியாக உறங்க முடியாமல் போகலாம். ஏதோ நான் சின்னவன். சொல்லுறதை சொல்லிப்போட்டேன். ஆழமறியாமல் காலை விடாதேயுங்கோ. விபரீதம் தெரியாமல் வீரமாய் பேசாதேயுங்கோ. தூங்கும் புலிகளை இடறிப் போட்டு நீங்கள் தூங்க நினைத்தாலும் தூங்கத்தான் முடியுமோ? தனக்கிடா உத்தியோகம் தன் பிடரிக்கு சேதம்!**

சீட்டணி: யார் இந்த எட்டப்பன்! யார் இந்த தீய சக்தி? யார் இந்த அவதூறு பரப்புவோன்! எங்கே எங்கள் இளைஞர் படை! என்ன செய்கிறீர்கள். எழு! பிடி! உதை!

(கந்தசாமியார் தலைதெறிக்க ஓடுகிறார்)



105, காலி வீதி வெள்ளவத்தை கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# கணனியில் சாகசம்

← தொழில் நுட்ப உத்திகளிலும் ஹொலிவூட் திரைப்படத்துறை உச்சம் தொட்டுக்கொண்டிருக்கிறது. அதில் ஒரு சிறு துளிதான் இந்தப் படவுலகிலும் வந்திருக்கிறது. காதலன் படத்தில் பிரபுதேவாவின் தலையில்லாத முண்டம் நடனமாடுவதாக காண்பிப்பார்கள். கம்பியூட்டர் கிராபிக்ஸ் சாகசம் அது. ஸ்பெஷல் எபெக்ட் என்று அழைக்கிறார்கள்.

ஆனால் வெளிநாடுகளில் பார்வையாளரின் கண்முன்பாகவே 'ஸ்பெஷல் எபெக்ட்டை' செய்து காண்பிக்கிறார்கள். படத்தில் பாருங்கள். ஒருவர் மேடையில் சில கருவிகளுடன் நின்று ஆடுகிறார். திரையில் அவருடைய எலும்புக்கூடு நடனமாடுவதுபோல காண்பிக்கப்படுகிறது. மற்றொருவர் சாதாரணமாகச் சிரிக்கிறார். திரையில் அவருடைய முக அமைப்பே மாறிவிடுகிறது. பாவம் அந்தக் காலத்தில் வீரப்பா எத்தனை சிரமப்பட்டு சிரிக்க வேண்டியிருந்தது. இனி சும்மா வாயைத் திறந்தால் போதும், மீதியை 'ஸ்பெஷல் எபெக்ட்' பார்த்துக் கொள்ளும். இந்தியன் படத்தில் கமல் மிருக உருவில் மாறுவதும் 'ஸ்பெஷல் எபெக்ட்'தான்.




5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# கணனியில் மன்னிப்பு

↓ இன்றைய தினம் உலகில் கம்பியூட்டர் புகாத இடமே இல்லை. [illegible]

# சர்ச்சை நாயகன்




→ மனோஜ் பிரபாகர் வீசியது பந்தா அல்லது வெடிகுண்டா? இந்திய கிரிக்கெட் அணியை அங்குள்ள பத்திரிகைகளே சந்தேகத்தோடு நோக்கிப்பார்க்கச் செய்துவிட்டார்.

"1994ல் இலங்கையில் நடைபெற்ற சிங்கர் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் நான் ஒழுங்காக விளையாடாமல் இருப்பதற்காக 25 இலட்சம் ரூபாய் தருவதாக இந்திய அணி வீரர் ஒருவர் கூறினார்" என்று முதல் வெடிகுண்டை வீசி பரபரப்பை தொடக்கிவைத்தார் பிரபாகர். அதனையடுத்து பம்பாய் பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றொரு குண்டைப் போட்டிருக்கிறார்.

"1995ல் நியூசிலாந்தில் நடந்த ஒருநாள் போட்டியில் இந்தியா தோல்வியடைவதற்காக மூத்த வீரர்களுக்கு தலா இருபது இலட்சம் வழங்கப்பட்டது" என்கிறார். பம்பாயில் இருந்த மாபியா குழுவைச் சேர்ந்த ஒருவன் நியூசிலாந்தில் இருந்த இந்திய அணி வீரர் ஒருவருடன் தொலைபேசியில் பேசியதை அப் பொலிஸ்காரர் ஒட்டுக் கேட்டாராம்.

அப்போட்டி நடந்த காலகட்டத்தில் நியூசிலாந்து அணி தொடர் தோல்விகளைச் சந்தித்தது. அதனால் கிரிக்கெட் சூதாட்டத்தில் இந்திய அணிமீதே பணம் அதிகமாகக் கட்டப்பட்டது. இந்தியா தோற்றால்தான் சூதாட்டம் நடத்தியவர்களுக்கு கொள்ளை இலாபம் கிடைக்கும். பம்பாயில்தான் சூதாட்டம் நடந்தது. இந்திய அணி நியூசிலாந்தில் தோற்றதால் சூதாட்டம் நடத்தியவர்களுக்கு கிடைத்த இலாபம் 42 கோடி ரூபாய்கள்!

இந்தத் திடுக்கிடும் தகவல்கள் கிரிக்கெட் ரசிகர்களையே கதிகலங்க அடித்துள்ளன.

பெரியளவான கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் போது எந்த அணி வெல்லும் என்று பந்தயம் கட்டும் தொழில் தற்போது சூடுபிடித்துள்ளது. இதனால் கிரிக்கெட் போட்டிகளின் நம்பகத்தன்மை மேலும் சரிவடையலாம் என்று அஞ்சப்படுகிறது.

இறுதியாக இந்திய அணியில் உள்ள நால்வர் மீது இந்தியப் பத்திரிகைகள் மறைமுகமாக குற்றம் சாட்டுகின்றன. அசார், டெண்டுல்கர், மொங்கியா, அடேஜா மற்றும் முன்னாள் இந்திய அணி மனேஜர் வடேகர். தங்கள் அபிமானத்துக்குரிய இந்த வீரர்கள்மீதான குற்றச்சாட்டுக்களை நம்பவும் முடியாமல், நம்பாமலிருக்கவும் முடியாமல் ரசிகர்களும், ரசிகைகளும் மூடிவைப் பிய்த்துக் கொள்கிறார்கள். குற்றம் சாட்டுகிறவர்கள் ஆதாரம் எதையும் முன்வைக்கவில்லை என்பதையும் கவனித்தாக வேண்டும்.

பிரபல நட்சத்திர வீரர்கள் தனியாக எத்தனை ரன் அடிப்பார்கள் என்றும் பந்தயம் கட்டப்படுகிறதாம். இதனால் பிரதான வீரர்கள் இலகுவாக அவுட்டாவார்கள். இனிமேல் சந்தேகம் அவர்களை நோக்கி பாயப்போகிறது.

மனோஜ் பிரபாகர் போல பாகிஸ்தான் வீரர்கள்மீது அமீர்சொஹைலும் அதே குற்றம் சாட்டினார். பின்னர் மன்னிப்புக் கேட்டதால் இப்போது அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

பணம் கொடுத்து பைத்தியமாய் அலைந்து கிரிக்கெட் போட்டிகளைக் காணும் கோடிக்கணக்கான ரசிக மகாஜனங்கள் வீரர்கள் களத்தில் மட்டும் விளையாடினால்போதும் என்றே எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் நம்பிக்கையோடு விளையாடுபவர்களை மன்னிக்கவே மாட்டார்கள். ஆனால் ஒன்று, குற்றம் சாட்டப்படுவதை மட்டும் வைத்து சகல கிரிக்கெட் நட்சத்திரங்கள்மீதும் தப்பான அபிப்பிராயம் கொள்வதும் சரியல்ல. ஆனால் சூதாட்டம் நடப்பது மட்டும் உண்மையிலும் உண்மை. வீரர்கள் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

# பிறந்தநாள் வாழ்த்து



## லிரோஷன் விக்னேஸ்வரன் 16.05.97

கனடாவில் வசிக்கும் விக்னேஸ்வரன்கோகிலா தம்பதியினரின் செல்வப்புதல்வன் லிரோஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை வைகாசி 16ம் திகதி அன்று மீசாலையில் "கனகாபுரி" இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, மீசாலையில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, இத்தாலியில் உள்ள ரஸிமாமா, அத்தை, சுவிஸில் உள்ள சுதாமாமா, மீசாலையில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, அத்தை மற்றும் உற்றார், உறவினர்கள் நீடூழி காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.



# உருவக் கலவை

↑ கொஞ்சம் கழுதை, கொஞ்சம் குதிரை இரண்டும் கலந்தாற்போல தோற்றம் தரும் இதன் பெயர் 'எக்ஸ்மூர்'.

கழுதைக்கு கற்பூர வாசனை தெரியாமல் இருக்கலாம். இந்த எக்ஸ்மூர் குதிரைக்கு மலர்களின் வாசனை தெரியும். மலர்களின் அருமையும் தெரியும். இந்த எக்ஸ்மூர்களால் மலர்களுக்கும் இரண்டு நன்மையுண்டு. மலர்களை பறிக்கவரும் மனிதர்கள் இந்த எக்ஸ்மூர் குதிரையை கண்டதும் பயந்து ஓடுகிறார்கள். இரண்டாவது நன்மை யாதெனில், மலர்ச் செடிகள் மத்தியில் உள்ள வேண்டாத செடிகளை மட்டும் இவை சாப்பிட்டு விடுகின்றன.

இதனால்தான் இயற்கை அழகைப் பாதுகாக்க விரும்பும் இங்கிலாந்து திருவனம் ஒன்று இந்த எக்ஸ்மூர்களை பூந்தோட்டப் பகுதிகளில் வளர்த்துவருகிறது. எக்ஸ்மூர்களுக்கு நல்ல உத்தியோகம்.




[illegible] ஆகஸ்ட் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.